# நமணை வள்ளல்

கி. வா. ஜகந்நாதன்



அமுத நிலையம்

# குமண வள்ளல்

(வரலாறு)

★

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை - 18

அமுதம்—101
முதற் பதிப்பு - அக்டோபர், 1955
இரண்டாம் பதிப்பு - ஏப்ரல், 1956
உரிமை பதிவு

விலை ரூ. 1 0 0

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை - 18.

# முகவுரை

தமிழ் நாட்டில் பழங்காலத்தில் இருந்த உபகாரிகளில் ஏழு வள்ளல்களைச் சிறப்பாக எடுத்துச் சொல்வார்கள். அவர்கள் காலத்துக்குப் பின் வாழ்ந்தவர்களுக்குள் ஈகைத் திறம் படைத்தவர்கள் சிலரே. குமணன் அவர்களில் சிறந்தவன். அவனுடைய வரலாறு மனத்தை உருக்குவது.

புறநானூற்றில் உள்ள சில பாடல்களும், கொங்கு மண்டல சதகத்தில் உள்ள பாடல் ஒன்றும் அவன் வரலாற்றை அறிவதற்கு ஆதாரமாக இருக்கின்றன. அவற்றைக் கொண்டு இந்த வரலாற்றை எழுதினேன். புரவலர்களுடைய வரலாற்றை அறிவதற்குப் புலவர்களே துணை புரிகிறார்கள். அவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் தமக்கு ஈந்த வள்ளல்களைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள். இருவகையினரும் மறைந்து போனாலும் புலவர்கள் இயற்றிய பாடல்கள் அவ்விரு வகையினர் வரலாற்றையும் நமக்குப் புலப்படுத்துகின்றன.

குமணனை நமக்கு அறிமுகம் செய்து வைக்கும் புலவர்கள் இருவர். பெருஞ்சித்திரனார் என்பவர் ஒருவர்; மற்றொருவர் பெருந்தலைச் சாத்தனார். அவர்கள் வாழ்க்கையும் குமணனுடைய வாழ்க்கையும் பிரிவின்றி இணைந்திருக்கின்றன. அவர்கள் வரலாற்றை வேறாகவும் அவன் வரலாற்றை வேறாகவும் காண முடியாது. ஆதலின், இப்புத்தகத்தில் புலவர் வரலாறும் குமணன் வரலாறும் இணைந்தே விரிவாக அமைந்திருக்கின்றன.

கிடைத்த செய்திகளை அக்கால நிலை, மன்னர் இயல்பு, மக்கள் இயல்பு, புலவர் நிலை, மக்கள் மனநிலை என்பவற்றோடு வைத்து நோக்கி, இணைப்பில்லாத இடங்களை அந்த இயல்புகளுக்கும் நிலைகளுக்கும் ஒத்த நிகழ்ச்சிகளாலும் உரையாடலாலும் நிரப்பி இந்த வரலாற்றை எழுதினேன்.

பழங்காலத்துப் புலவரும் புரவலரும் ஒன்றிப் பழகிய உறவைச் சிறப்பாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது என் விருப்பம். அந்த உறவுதானே நாட்டின் பண்பை உயர்த்த வழிகோலுவது?

கல்யாணபுரம்
மயிலை
10—10—'55

**கி. வா. ஜகந்நாதன்**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | புகழ் கேட்ட புலவர் .... | 1 |
| 2. | முதற் காட்சி .... | 9 |
| 3. | பிரியா விடை .... | 29 |
| 4. | "எல்லோர்க்கும் கொடு" .... | 41 |
| 5. | வெளிமானும் இளவெளிமானும் | 52 |
| 6. | யானைப் பரிசில் .... | 61 |
| 7. | குமணன் அரசு துறத்தல் .... | 73 |
| 8. | வாள் தந்த வளம் .... | 87 |

# குமண வள்ளல்

## 1. புகழ் கேட்ட புலவர்

காலை நேரம் அது. வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார் பெருஞ்சித்திரனர். அவர் உள்ளம் தண்டமிழ்ச் செல்வம் நிறைந்த கருவூலம். ஆனல் அவர் இல்லமோ கூரை வேய்ந்த குடிசைதான். அங்கே திருமகள் தாண்டவம் ஆடவில்லை. மருமகளாகிய கலைமகள் வாழும் இடத்தில் வாழ்வதற்கு அந்தப் பெருமாட்டி திருவுளம் கொள்வதுதான் இல்லையே! புலவர் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தார். புதிய கவிதைக்குரிய பொருளைச் சிந்திக்கவில்லை. பழைய பொருளைக் கற்பனை வண்ணத்தில் தீட்டவும் முயலவில்லை. தம்முடைய இல்லத்தில் நிலவிய வறுமையைப் போக்கும் வழி என்ன என்பதைப்பற்றியே அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

தமிழ் நயம் தேர்ந்து இன்புறும் செல்வர்களைத் தேடிச் சென்று தம் கவித் திறத்தைப் புலப்படுத்தி, அவர்களுடைய பாராட்டையும் பரிசையும் பெற்று, வாழ்க்கையை நடத்துபவர் அவர். அவருக்குப் பழக்கமான பெருவள்ளல் அதிகமான் எழினி என்பவன், தன்னுடைய நகரமாகிய தகடூரில் சேர அரசனுகிய பெருஞ்சேரல் இரும்பொறையோடு பொருது வீழ்ந்து விட்டான் என்ற செய்தி அணிமையில் அவர் காதில்

விழுந்தது; அதுவும் அவர் உள்ளத்தை அலைத்துக் கொண்டிருந்தது. அதிகமானிடம் அவர் ஒரு முறை சென்று தக்க பரிசுகளைப் பெற்றிருக்கிறார். அவனைக் கண்டபோது நிகழ்ந்த நிகழ்ச்சி புலவருக்கு இப்போது நன்றாக நினைவுக்கு வந்தது. அன்றுதான் அதிகமானுடைய பெருந்தன்மையைப் பெருஞ்சித்திரனார் உணர்ந்துகொண்டார். முதலில் அவர் அவனைச் சிறந்தவனாகக் கருதவில்லை; அவனிடம் அவருக்குக் கோபம் உண்டாயிற்று. ஆனால் அவருடைய கோபம் பின்பு நன்மையே விளையச் செய்தது.

தகடூர் நெடுந்தூரத்தில் உள்ள ஊர். அதற்குப் போகவேண்டுமானால் மலையடர்ந்த பகுதிகளைக் கடந்து செல்லவேண்டும். இப்போது சேலம் மாவட்டத்தில் உள்ள தர்மபுரி என்ற ஊரின் பழைய பெயர்தான் தகடூர் என்பது. தர்மபுரிக்கு அருகில் இன்றும் அதிகமான் கோட்டை என்ற இடம் இருக்கிறது. அங்கேதான் சிற்றரசனாகிய அதிகமான் வாழ்ந்து வந்தான். நெடுநாள் வாழும்படியாகச் செய்யும் நெல்லிக் கனியை ஔவையாருக்கு வழங்கி அப் பெருமாட்டியாரின் பாடலைப் பெற்றுத் தமிழுலகம் முழுவதும் புகழும் உயர்நிலையை அடைந்தவன் அவன்.

பெருஞ்சித்திரனார் அவனை நாடிச் சென்றார். அவர் போன சமயம், பெருஞ்சேரலிரும்பொறை போர் செய்ய வரக்கூடும் என்ற செய்தி அதிகமானுக்கு ஒற்றர் மூலமாக எட்டியிருந்தது. ஆதலின், தன்னுடைய நண்பர்களோடும் அமைச்சர்களோடும், போர் நேர்ந்தால் என்ன செய்வது என்ற ஆராய்ச்சியில் அவன் ஈடுபட்டிருந்தான்.

பெருஞ்சித்திரனுருக்கு இந்தச் செய்தி தெரியாது. அவர் மிக்க ஆர்வத்தோடு அதிகமான் நெடுமான் அஞ்சியைப் பார்க்கும் பொருட்டு அவன் மாளிகையை அடைந்தார். எந்தப் புலவர் வந்தாலும் அரசனுடைய கட்டளையின்றியே வேண்டிய உபசாரங்களை அங்குள்ளவர்கள் செய்வார்கள். அப்படியே பெருஞ்சித்திரனுருக்கும் உபசாரங்கள் நடந்தன. "அரசர் பிரானைப் பார்த்து அளவளாவ வேண்டும்" என்ற தம் கருத்தைத் தெரிவித்தார் புலவர். அவன் அப்போது தான் ஆழ்ந்த மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்தான். புலவர்களிடத்தில் அவனுக்கு இருந்த பெருமதிப்பை அரண்மனையில் உள்ளவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆதலின், பெருஞ்சித்திரனுர் வரவை ஒருவர் அதிகமானிடம் தெரிவித்தார். அவன் அவரை முன்பு அறிந்ததில்லை. "அவருக்குத் தக்கபடி பரிசு அளித்து அனுப்புங்கள். மற்றொரு முறை வந்தால் பார்க்கிறேன் என்று சொல்லுங்கள்" என்று அவன் பணித்தான்.

அவ்வள்ளல் பணித்தபடியே ஒருவர் ஓர் அழகிய தட்டில் பொன்னும் பொருளும் பழமும் தாம்பூலமும் வைத்துக் கொணர்ந்து புலவர்முன் வைத்தார். "மன்னர்பிரான் இன்றியமையாத ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறார். பின் ஒருமுறை வந்தால் பார்த்து இன்புறுவதாகத் தெரிவித்தார்" என்றார்.

இதைக் கேட்ட புலவர் மனத்தில் பெருத்த ஏமாற்றம் உண்டாயிற்று. அவர் எத்தனை காதம் கடந்து வந்திருக்கிறார்! மறுபடியும் போய்விட்டு ஒரு முறை வருகிறதாவது! அவர் அடுத்த ஊரில் இருக்கிறவரா? அவருக்குக் கோபங்கூட வந்தது.

அரசனுடைய ஏவலின்படி வந்தவர் தட்டை எடுத்து நீட்டினார். புலவர் அதைப் பார்த்தார்; அதை அளித்தவர் முகத்தைப் பார்த்தார்; "அதை அப்படியே வையுங்கள்" என்றார். அந்த அதிகாரிக்கு ஒன்றும் விளங்கவில்லை; தடுமாறினார்.

"இதை எனக்குக் கொடுக்கும்படி உங்கள் அரசர் சொன்னாரா?" என்று பெருஞ்சித்திரனார் கேட்டார்.

"ஆம்; தங்களைச் சந்திக்க முடியாததற்கு வருந்தினார். இந்தப் பரிசிலை வழங்கும்படி கட்டளையிட்டார்."

"அப்படியா? நான் இதற்காகத்தான் வந்திருக்கிறேன் என்று அவர் எப்படி அறிந்துகொண்டாரோ?"

பெருஞ்சித்திரனார் சற்றுப் பெருமிதத்துடன் பேசினார். அவர் பேச்சிலுள்ள உறுதியைக் கண்டு அதிகாரி அஞ்சினார்.

"மன்னர் பெருமான்...." என்று அவர் எதையோ சொல்ல வந்தார். புலவர் அவரைப் பேச விடவில்லை.

"மறுபடியும் வந்தால் பார்க்கலாம் என்று சொன்னார்? நான் அருகில் உள்ள ஊரிலிருந்து வரவில்லை. குன்றும் மலையும் பல பின் ஒழிய நெடுந்தூரத்தைக் கடந்து வந்திருக்கிறேன். நான் புலவனதலால் இந்த வள்ளலைக் கண்டு இவர் வழங்கும் பரிசிலைப் பெற்றுக் கொண்டு செல்லலாம் என்றுதான் வந்தேன். ஆனால் பரிசிலை இத்தகைய முறையில் பெறுவதற்காக நான் வரவில்லை. என்னிடம் கருணை கூர்ந்து, இதைப் பெற்றுக்கொண்டு போகட்டும் என்று எதைக் கொண்டு சொன்னாரோ அறியேன். அவர் முகத்தைக் கண்டு அவரோடு அளவளாவி அவருடைய அன்பாகிய பரிசிலைப் பெற்றுப் பின்னரே இத்தகைய பரிசிலைப் பெற விரும்பினேன். இப்போது நான் அவரைக் காண

வில்லை. என்னையும் அவர் பார்க்கவில்லை. பரிசில்தான் கிடைத்துவிட்டதே, வாங்கிக்கொண்டு போகலாம் என்ற எண்ணமும் எனக்கு உண்டாகவில்லை. வியாபார நோக்கு உடையவர்களுக்குத்தான் அந்த எண்ணம் தோற்றும். நான் பரிசிலன்தான்; ஆனல் வாணிகப் பரிசிலன் அல்லேன். அவர் என்னைக் கண்டு பேசி என் புலமைத் திறத்தை உணர்ந்து தினையளவு கொடுத்திருந்தாலும் இனிதாகப் பெற்றுப் போவேன். இது இங்கேயே இருக்கட்டும்" என்று சொல்லி எழப் போனர் பெருஞ்சித்திரனர்.

அவருடைய வீரப்பேச்சைக் கேட்ட அதிகாரி அயர்ந்து போனர். 'இவர் உயர்ந்த புலவர்' என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. அதற்குள் பெருஞ்சித்திரனர் தம்முடைய கருத்தையெல்லாம் அமைத்து ஒரு பாட்டையே பாடிவிட்டார்.

*குன்றும் மலையும் பலபின் ஒழிய*
*வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென*
*நின்ற என்நயந்து அருளி, 'ஈதுகொண்டு*
*ஈங்கனம் செல்க தான்'என என்னை*
*யாங்குஅறிந் தனனே தாங்கருங் காவலன்?*
*காணது ஈத்த இப்பொருட்கு யான்ஓர்*
*வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணித்*
*தினை அனைத்து ஆயினும் இனிது,அவர்*
*துணையளவு அறிந்து நல்கினர் விடினே.**

---

*குன்றுகளும் மலைகளும் பல பின்னிடக் கடந்து பரிசில் வாங்கிப் போவதற்கு வந்தேன் என்று நின்ற என்பால் அன்பு செய்தருளி, "இதைப் பெற்றுக்கொண்டு இப்படியே அவன் போகட்டும்" என்று, தாங்குதற்கரிய நாடு காவலையுடைய அரசன் என்னை எவ்வாறு அறிந்தானே? என்னைக் காணமல் கொடுத்த இந்தப் பொருளைப் பெறுவதற்கு யான் ஒரு வியாபார நோக்கமுடைய பரிசிலன் அல்லேன்; பாராட்டிக் கொடுப்பது தினையளவுடையதானலும், புலவர்களுடைய திறமையின் அளவை அறிந்து பரிசில் வழங்கி விடை கொடுத்தால் அதுவே இனிதாகும்.

பாட்டுக் காதில் விழுந்ததும் அதிகாரி வெல வெலத்துப் போனார். "சற்று இருங்கள்; அரசரிடம் கேட்டுவிட்டு வருகிறேன்" என்று அவர் புலவருடைய விடைக்குக் கூடக் காத்து நில்லாமல் உள்ளே போய்விட்டார்.

என்ன ஆச்சரியம்! சிறிது நேரத்தில் அதிகமான் அஞ்சியே எதிரில் வந்து நின்றான். "புலவர் பெருமான் என் பிழையைப் பொறுக்கவேண்டும். தங்களைப் பாராமல் பரிசிலைக் கொடுத்தனுப்பியது தவறுதான். தங்களை இதுகாறும் அறிந்து கொண்டதில்லை" என்று சொல்லிக்கொண்டே வந்தான்.

புலவர் அதிகமான் புகழை முன்பே கேட்டவர். "ஒளவையாருடைய பாட்டால் தமிழுலகம் அரசர் பிரானை நன்கு அறியும். அத்தகைய வள்ளலைப் பார்த்துப் போகலாமென்று நெடுந்தூரம் வந்ததும் பார்க்க முயலவில்லையே என்ற வருத்தம் மீதூர்ந்தது. அதனால் ஏதோ சொன்னேன்" என்று அவர் சொன்னார்.

அப்பால் சிறிது நேரம் அவர்கள் அளவளாவினார்கள். புலவரைச் சில நாட்கள் தகடூரில் தங்கும்படி வேண்டிக்கொண்டான் அதிகன். அவர் தங்கித் தம் கவித்திறத்தைக் காட்டினார். போர் மூளுமோ என்று அஞ்சியிருந்த நிலையில், நெடுநேரம் புலவரோடு பொழுதுபோக்க முடியவில்லையே என்று அதிகமான் வருந்தினான். அதை அறிந்த புலவர் பின் ஒரு முறை வருவதாகச் சொல்லி விடை பெற்றுக்கொண்டார்.

மறுபடி அவரால் போக முடிந்ததா? அவர் போகலாம் என்ற ஆர்வத்தோடுதான் இருந்தார். ஆனால் அதிகமானுடைய கோட்டையைச் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை முற்றுகை யிட்டுவிட்டான் என்

றும், போர் கடுமையாக நடைபெறுகிறதென்றும் கேள்வியுற்ருர். அதிகமான் வெற்றி பெற வேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொண்டார். ஆனல் முடிவு வேறு விதமாக ஆயிற்று. அதிகமான் நெடுமான் அஞ்சி அந்தப் போரில் வீழ்ந்து புகழுடம்பு பெற்ருன்.

இந்தச் செய்தியைக் கேட்டதுமுதல் புலவருக்கு இருந்த ஊக்கம் குறைந்துவிட்டது. அதிகமானை ஒரு முறைதான் அவர் பார்த்திருந்தாலும் அவனுடைய உயர்ந்த பண்புகளை அவர் நன்கு உணர்ந்து கொண்டார். பல காலம் பழகிய அன்பு அவனிடம் மூண்டது.

'இனி நம் வறுமையைப் போக்கிக்கொள்ள யாரிடம் போவோம்? நம்முடைய கவிதையின்பத்தை நுகர்ந்து பாராட்டும் வள்ளல் யார் இருக்கிருர்கள்? தமிழ் நாட்டில் புலவர்களுக்கு வரையறையில்லாமல் ஈயும் வள்ளல்கள் ஏழு பேர். அவர்கள் ஒவ்வொருவராக மறைந்துவிட்டனர். அந்த ஏழு பேர்களில் ஒருவனுகிய அதிகமானைப் பார்க்கக் கொடுத்துவைத்தும், பல காலம் பழகி, உள்ள நிறைவோடு பாராட்டிப் பாடக் கொடுத்துவைக்கவில்லை' என்ற துயரத்தில் ஆழ்ந்திருந்தார் அவர்.

மனம் அவரைத் தகடூருக்கே அழைத்துச் சென்றது. மறுபடியும் அவர் இருந்த குடிசைக்கு அழைத்து வந்தது. அங்கங்கே உள்ள சில சிறிய செல்வர்களை அவர் அறிவார். அவர்களோடு அவர் பழகியிருக்கிருர். சிறு சிறு உதவிகளையும் பெற்றிருக்கிருர். ஆயினும் அவர்கள் எத்தனை காலத்துக்கு அவருடைய குடும்பத்தைத் தாங்க முடியும்?

இத்தகைய நிலையில், அவரிடம் ஒரு நாள் குமணன் என்ற சிற்றரசனுடைய வள்ளன்மையைப்பற்றி யாரோ ஒரு புலவர் சொன்னார். கொங்கு நாட்டில் முதிரம் என்னும் மலைக்கு அருகில் ஓர் ஊரில் அவன் வாழ்கிறான் என்று கேள்வியுற்றார். புலவர்களுக்கு மிகுதியாக வழங்கும் பெருமான் அவன் என்றும், அவனை அணுகினவரிடம் வறுமை விடை பெற்றுக் கொண்டு ஓடிவிடும் என்றும் செய்தி சொன்னவர் பாராட்டினார். அவ்வாறு அவன் செய்வது உண்மை என்பதை வேறு சிலரும் சொன்னார்கள். எல்லாவற்றையும் கேட்ட பெருஞ்சித்திரனார், குமணனை அணுகி அவனுடைய அன்பைப் பெற வேண்டும் என்ற ஆவலை உடையவரானார்.

# 2. முதற் காட்சி

அன்றுதான் பெருஞ்சித்திரனருக்கு எப்படியும் குமணனிடம் சென்று வரவேண்டும் என்ற எண்ணம் உறுதியாயிற்று. வீட்டில் உள்ளவர்கள் வறுமையினுல் படும் துன்பக் காட்சிகளைக் காணக் காண அவர் மனம் துன்பக் கடலில் மூழ்கியது. அவருடைய முதிய அன்னை எலும்பு உருவமாக நின்ருள். முதுகு வளைந்து தள்ளாடித் தள்ளாடி நடந்தாள். கையில் கோலை ஊன்றிக்கொண்டு குறுக அடியிட்டு நடக்கும்போது, எங்காவது விழுந்துவிட்டால் என் செய்வது என்ற அச்சமே காண்பவர்களுக்கு உண்டாகும். தலை முழுவதும் நரைத்துவிட்டது. வெள்ளை நூலைத் தலையில் பரப்பினுற்போல் இருந்தது அதன் தோற்றம். வீட்டு வாசலை விட்டு அவள் எங்கும் போவதேயில்லை. திண்ணையிலே சோர்ந்து சோர்ந்து விழுந்து தூங்குவதைத் தவிர அவளுக்கு வேறு வேலை இல்லை.

அதிகமான் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டுப் பெருஞ்சித்திரனுர் வருந்தியதை அவள் கண்டாள். 'யார் யாரையோ யமன் விரைவில் கொண்டு போய் விடுகிருன். எனக்கு மாத்திரம் முழு ஆயுள் போட்டு வைத்திருக்கிறது. இன்னும் பல ஆண்டுகள் பூமிக்குப் பாரமாக இருக்க வேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கும்போது என் உயிர் எளிதில் போய்விடுமா?" என்று அவள் தன் நிலையை நினைந்து வருந்தினுள்.

"ஏன் அம்மா அப்படிச் சொல்கிருய்? இறைவனுடைய திருவுள்ளப்படியேதான் எல்லாம் நடக்கும். நீ எதற்காக இப்படி வருத்தப்பட வேண்டும்?" என்று புலவர் மனம் நைந்து கேட்டார்.

"நீ இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவது எவ்வளவு இன்னலாக இருக்கிறது! நான் ஒருத்தி வேறு சோற்றுக்குக் கேடாய் இருப்பது ஏன்? என்ஞல் யாருக்காவது லாபம் உண்டா? குழந்தைகள் படும் பாட்டைப் பார்த்துக்கொண்டு நான் இன்னும் வாழ வேண்டுமா?"

அவள் துயரத்தைப் புலவர் கிளப்பிவிட்டாரே ஒழியக் குறைக்கவில்லை. நாம் ஏன் பேசினேம் என்று ஆகிவிட்டது. பேசாமல் எழுந்து வெளியே சென்ருர்.

அவருக்குப் பல குழந்தைகள் இருந்தார்கள். ஒன்று ஆண் குழந்தை; ஓடியாடி விளையாடும் பருவம் உள்ள குழந்தை. கைக் குழந்தை ஒன்றும் இருந்தது. மனைவி குழந்தையைப் பெற்ற பச்சை உடம்புடன் காடிக் கஞ்சியை மூடிக் குடித்தாள். கைக் குழந்தைக்குக் கொடுக்க அவளிடம் பால் இல்லை. பால் கிடைக்காமையால் குழந்தை அழுதது. அவள் என்ன செய்வாள், பாவம்! அவள் உடம்புக்கு ஊட்டம் இருந்தால் அல்லவோ குழந்தைக்கு உணவு கிடைக்கும்?

ஏதாவது கிடைத்தால் அதை மற்றவர்களுக்குப் போட்டாள். அவள் எதை உண்டாள்? புழைக்கடையில் குப்பையிலே ஏதோ கீரை முளைத்திருந்தது; அதைப் பறித்து வேகவைத்தாள். அதற்குப் போட உப்புக்கூட வீட்டில் இல்லை. அரிசியைப்பற்றிச் சொல்வானேன்? மோரும் கிடையாது. வெறும் நீரில் வெந்த உப்பில்லாக் கீரையை உண்டு

காலம் கடத்தினுள் அவள். அவள் இடையில் ஒரு சீலைத் துண்டைக் கட்டியிருந்தாள். மாற்றி உடுக்க வேறு ஆடை இல்லை. ஆகையால் அந்த உடையும் அழுக்குப் படிந்து படிந்து அதனால் சிக்குப் பிடித்து நைந்து குறைந்து வந்தது.

இந்தக் காட்சியும் புலவர் கண்ணில் பட்டது. அவருக்குக் கவி பாடத் தெரியும். வரிசையறிந்து தமிழ் இனிமையை நுகர்பவரிடம் செல்வாரே ஒழியப் பணம் படைத்தவர்களிடமெல்லாம் போக அவர் உள்ளம் இடம் கொடுப்பதில்லை. வயிற்றைவிட அவருக்கு மானமே பெரிதாகத் தோன்றியது. "சோறு இல்லை; துணி இல்லை; தா" என்று பணக்காரர்களிடம் தம் வறுமையை விளம்பரப்படுத்தும் துணிவு அவரிடம் இல்லை. தொழில் ஒன்றும் தெரியாதவர் அவர்.

தம் தாய் படும் துன்பத்தையும் மனையாளும் குழந்தைகளும் படும் அல்லலையும் கண்டு கண்டு அவர் மனம் வருந்தினர். 'இனிச் சும்மா இருப்பது பாவம்' என்ற எண்ணம் தோன்றவே, 'குமணனிடம் சென்று அவனுடைய அன்புக்கு ஆளாகி நலம் பெற வேண்டும்' என்று உறுதியாகத் தீர்மானித்தார். ஒரு நாள் புறப்பட்டு விட்டார்.

கொங்கு நாட்டுக்குச் சென்று முதிர மலை எங்கே இருக்கிறதென்றும், குமணன் வாழும் ஊர் எது என்றும் விசாரித்துத் தெரிந்துகொண்டார். பிறகு அந்த ஊரை அடைந்தார்.

**போ**கும்பொழுதே முதிர மலையையும் பார்த்து விட்டுப் போனர். அது வளம் மிக்க மலையாக இருந்தது. மரங்கள் பல அதில் அடர்ந்து வளர்ந்திருந்தன.

சுரபுன்னை மரங்களும் மூங்கில்களும் செறிந்திருந்தன. பலா மரங்களுக்குக் கணக்கே இல்லை. நன்றாகக் கனிந்து பழுத்த பழங்கள் அம் மரங்களில் தொங்கின. எங்கே பார்த்தாலும் கம் என்ற வாசனை. பலாப் பழம் இருக்கிற இடத்தில் குரங்குகள் கூட்டங் கூட்டமாக வந்துவிடும். இந்த இடத்திலோ காவலே இல்லை. பலாப் பழம் அருமையான பண்டமாக இருந்தா லல்லவா காவல் வேண்டும்? முதிர மலையில் அதற்குப் பஞ்சமே இல்லை. ஆதலின், ஆண் குரங்குக ளாகிய கடுவன்களும் பெண் குரங்குகளாகிய மந்தி களும் குரங்குக் குட்டிகளும் தம் மனம் போன போக்கிலே பலா மரங்களில் தாவிப் பழங்களைத் தோண்டித் தின்றன.

பெருஞ்சித்திரனார் பலா மரச் சூழலில் ஓர் அரிய காட்சியைக் கண்டார். ஓர் ஆண் குரங்கு ஒரு மரத் தில் இருந்தது. அதில் தொங்கிய பெரிய பழ மொன்றைத் தோண்டிக் கொஞ்சம் சுவைத்துப் பார்த்த அந்தக் கடுவன் எதிரே வேறு ஒரு மரத்தி லிருந்த மந்தியை அழைத்துக்கொண்டிருந்தது. மனி தர்களைப் போலவே கையைக் காட்டித் தன்னுடைய மொழியில் கீச்சிட்டு அழைத்தது.

இதைக் கண்டார் புலவர். 'இறைவனுடைய படைப்பின் பெருமையே பெருமை! இந்தக் கடுவ னுக்கு எத்தனை அன்பு! தான் உண்ணும் கனியை மந்திக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற அறி வுடையதாக இருக்கிறதே! மனிதர்களில் எத்தனை பேர் இப்படி இருக்கிறார்கள்? இது எல்லாக் குரங்குகளிடத் திலும் உள்ள இயல்புதானா? அல்லது இந்த முதிர மலையின் சிறப்பாக இருக்குமோ? இதன் தலைவனாகிய

குமணன் தான் பெற்ற பெருஞ் செல்வத்தைப் பிறர்க்கும் வழங்கி இன்புறுகிறவனுதலின் அவன் இயல்பை அவன் நாட்டில் வாழும் விலங்கினங்களும் மேற்கொண்டனவோ?'—அவர் சிந்தனை படர்ந்தது. அவர் குமணனைப் பாட ஒரு நல்ல காட்சி கிடைத்துவிட்டது!

குமணன் இருந்த ஊரை அடைந்த புலவர் நேரே அரண்மனையை அணுகினுர். குமணன் நல்ல செல்வம் உடையவன் என்பதை அந்த அரண்மனையே எடுத்துக் காட்டியது. அதன் வாசலில் இரு புறமும் இரண்டு யானைகள் நின்றுகொண்டிருந்தன. 'நாம் வந்திருக்கிற இடம் மற்ற இடங்களைப் போன்றது அன்று. இறைவன் திருவருளால் இம் மன்னனுடைய நட்புக் கிடைத்தால் இனி வரும் ஏழு தலைமுறையின் வறுமையையும் போக்கிக்கொள்ளலாம்' என்ற நம்பிக்கை அவருக்கு உதயமாயிற்று. வறுமையின் பிடிப்பிலே உள்ளம் வாடிக் குமைந்த அவருக்குத் தெரியும் அந்த வேதனை.

அங்கே இருந்தவர்கள் பெருஞ்சித்திரனுரைப் புலவர் என்று அறிந்து அன்போடு வரவேற்றனர். அவர்களுடைய அன்பான பேச்சும் அவர்கள் காட்டிய மரியாதையும் அவர்களுடைய தலைவனுகிய குமணன் புலவர்களிடம் பெருமதிப்பு உள்ளவன் என்பதைப் புலப்படுத்தின.

"நெடுந் தூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. முதலில் நீராடிவிட்டு உணவு கொள்ளுங்கள். பிறகு மன்னர்பிரானைக் காணலாம்" என்று அரண்மனை அதிகாரி ஒருவர் சொன்னுர்.

"மன்னர்பிரானைக் கண்டு பேசி மகிழ இன்றே வாய்ப்புக் கிடைக்குமா?" என்று கேட்டார் புலவர்.

அவர் பல இடங்களுக்குச் சென்று, உரியவர்களை எளிதில் பார்க்க இயலாமல் வருந்தினவர் என்று எண்ணினார் அதிகாரி. அவர் கேட்ட கேள்வியிலிருந்து தான் அந்த எண்ணம் உண்டாயிற்று.

"தடையின்றிப் பார்க்கலாம். இன்றே பார்க்கலாம். இப்பொழுதுகூடப் பார்க்கலாம். ஆனால் தாங்கள் வழி நடந்து இளைப்புற்றிருக்கிறீர்கள். இந்த நிலையில் தங்களை வைத்துப் பேசுவது முறையாகாது. முதலில் இளைப்பாறுங்கள்" என்றார் அதிகாரி.

பெருஞ்சித்திரனார் நீராடிவிட்டு வந்தார். அவர் கொண்டுவந்த ஆடையை உடுத்துக்கொள்ள விட வில்லை அதிகாரி. அரண்மனையிலிருந்து புதிய ஆடையை அளித்தார். புலவர் அதை அணிந்து கொண்டு அங்கே விருந்து உண்ணத் தொடங்கினார். அத்தகைய உணவை அவர் உண்டு எத்தனையோ நாட் கள் ஆயின. அதிகமானோடு அவர் உண்டிருக்கிறார்.

இப்போது அதிகமான் நினைவு அவருக்கு வந்தது. உடனே தம் வீட்டு நினைவும் வந்தது. அவருடைய தாயும், உப்பில்லாக் கீரையை உண்டு வாழும் மனைவியும், குழந்தைகளும் அவர் அகக் கண் முன் நின்றனர். அவர்கள் அங்கே நல்ல உணவின்றி வாடத் தாம் அறுசுவை உணவு பெறுவதை எண்ணும் போது அவருக்குத் துயரம் குமுறிக்கொண்டு வந்தது. வரும் வழியில் பார்த்த குரங்கை நினைத்தார். அதன் அன்பை நினைத்தார். தாம் இனிப் பெறப் போகும் பரிசிலைக் கொண்டு சென்று தம் குடும் பத்தினருடைய வறுமையை முதலில் போக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் ஓங்கி நின்றது.

விருந்து உண்டார். உடனிருந்து தம்மை உண் பித்த அதிகாரியிடம், "இப்போது அரசர்பிரானைப் பார்க்கலாமா?" என்று கேட்டார். புலவருக்குக் கும ணனைப் பார்க்கவேண்டும் என்று இருந்த ஆர்வ மிகுதியை அதிகாரி நன்கு உணர்ந்தார்.

"எப்பொழுது வேண்டுமானாலும் கண்டு மகிழ லாம். ஆனாலும் தாங்கள் இப்போதுதான் உணவு கொண்டீர்கள். உண்ட இளைப்புத் தொண்டருக்கும் உண்டு என்பார்கள். வழி நடந்த இளைப்பு வேறு இருக்கிறது. ஆதலால் சற்றே படுத்து இளைப்பாறுங் கள். பிறகு மன்னர்பெருமானைக் கண்டு நெடுநேரம் அளவளாவலாம்" என்றார் அதிகாரி.

"என்னை உங்களுக்கு முன்பு தெரியாது. உங்கள் மன்னர் என்னை அறியும் அளவுக்கு நான் புகழ் படைத் தவன் அல்லேன். அப்படியிருக்க என்னைக் கண்ட வுடன் இவ்வளவு உபசாரம் செய்கிறீர்களே! இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்!"

"இது எங்கள் கடமை. அரண்மனை வழக்கம் இது. புலவரென்று யார் வந்தாலும் முதலில் அவர் உணவு கொண்டாரா என்று அறிந்து உண்பிக்க வேண்டும் என்பது அரசர் இட்ட கட்டளை. அவருக்குத் தங்களைத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அவருக் குத் தமிழைத் தெரியுமே! தமிழினிடம் அவருக்கு உள்ள ஆராக்காதல் எந்தப் புலவராயினும் முன்பின் அறியா மலே உறவுகொள்ளும்படி செய்கிறது. தாங்கள் அவ ருடன் அளவளாவும்போது அவருடைய இயல்பைத் தெரிந்துகொள்வீர்கள். தமிழ்ப் புலவர்களிடம் அப்பெரு மான் காட்டும் அன்புக்கு, நாங்கள் காட்டும் அன்பு எம் மாத்திரம்?....சரி, சரி, தங்களைத் தூங்கச் சொல்லிவிட்டு

நான் பேசிக்கொண்டே இருக்கிறேனே; தயை செய்து இளைப்பாறுங்கள்."

கட்டிலும் மெத்தையும் உள்ள இடத்தைக் காட்டினார் அதிகாரி. உண்மையில் களைப்பாகத்தான் இருந்தது புலவருக்கு. படுக்கையில் படுத்தார்; தூங்கி விட்டார்; நன்றாகத் தூங்கினார். கண் விழித்துப் பார்க்கையில் ஏவலாளன் ஒருவன் இனிய பானத் துடன் அருகே நின்றான். முகத்தைக் கழுவிக்கொண்டு அந்தப் பானத்தை உண்டார். உடனே அவரை உபசரித்த அதிகாரியும் வந்துவிட்டார்.

"எங்கள் மன்னருக்குத் தங்கள் வரவைச் சொன் னேன். புதிய புலவர் ஒருவரைத் தெரிந்துகொள்வது என்றால் அவருக்கு எப்போதுமே மிக்க விருப்பம். தங்களைக் காணவேண்டும் என்று காத்திருக்கிறார்" என்றார்.

"அப்படியா! என்னை முன்பே எழுப்பியிருக்க லாமே!"

"தாங்கள் அயர்ந்து தூங்கும்போது எழுப்ப லாமா? என்ன அவசரம்? எப்படியும் தாங்கள் இங்கே வந்தாயிற்று, ஓய்வாகப் பார்த்துப் பேசி இன்புற லாம் என்ற எண்ணத்தால் தங்கள் தூக்கத் தைக் கலைக்கவில்லை. இப்போது மன்னரைக் காணலாமா?"

"கரும்பு தின்னக் கூலியா?" என்று வியந்த படியே புலவர் குமணனைக் காண எழுந்தார். அவனைக் காணும்போது அவர் ஏதேனும் கையுறை கொண்டு செல்லவேண்டாமா? பழமும் பண்டமும் கொண்டு சென்று மன்னரைக் காண்பது குடிமக்கள் செயல். புலவர்களிடம் எல்லாவற்றிற்கும் மேற்பட்ட தமிழ்க்

கனி இருக்கிறது அல்லவா? பெருஞ்சித்திரனாரும் குமணனைப் பாராட்டும் பாடலைக் கையுறையாகக் கொண்டு சென்றார். அதை அவர் தம் உள்ளத்தில் உருவாக்கி வைத்திருந்தார்.

புலவர் குமணன் வீற்றிருந்த அவைக்களத்தைக் குறுகினார். அவன் அவரை அன்புடன் வரவேற்று அருகில் இருந்த இருக்கையில் அமரச் செய்தான்.

"நீங்கள் வந்திருப்பதாக அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். புதிய நாடு ஒன்று கிடைத்தால் மன்னர்களுக்கு மிக்க இன்பம் உண்டாகும். புதிய புலவர் ஒருவரைக் கண்டு பழகுவதால் அதை விட மிகுதியான இன்பம் எனக்கு உண்டாகிறது. நெடுந்தூரத்திலிருந்து வந்திருப்பதாகக் கேள்வியுற்றேன். நன்றாக இளைப்பாறினீர்களா?" என்று தானே வலிந்து விசாரித்தான் குமணன். அவன் பேசிய மொழிகளிலே அன்பு கனிந்திருந்தது.

புலவர் அவனைக் கண்டவுடனே வாயடைத்துப் போனார். அவனுடைய அன்புரை அவரை வியப்பில் ஆழ்த்தியது. சிறிது நேரம் பேசவே இயலவில்லை. உணர்ச்சி அவர் உரைக்குக் காப்பிட்டது. பிறகு தெளிந்து பேசலானார்.

"எத்தனையோ காலமாக எளியேன் பண்ணிய புண்ணியத்தின் பயனாக இன்று மன்னர்பிரானைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தமிழ்ப் புலவர்களை வரவேற்று உபசரித்துப் பாராட்டும் வள்ளல்கள் வரவரக் குறைந்துகொண்டே வருகிறார்கள். இந்தக் காலத்தில் அரசர்பிரான் கற்பக மரம் போல அவர்களைக் காப்பாற்றக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாக முன்பே கேள்வியுற்றேன்."

"நீங்கள் இதற்குமுன் இங்கே வந்ததே இல்லையே!" என்றான் குமணன்.

"என் ஊழ்வினை தடுத்து நின்றது. நல்ல காலம் பிறவாமல் இருந்தது. இப்போதுதான் திருவருள் கூட்டுவித்தது. நான் வந்ததிலிருந்து இங்கே கிடைக்கும் நலன்களை எண்ணி எண்ணி இன்புறுகிறேன். குழந்தையைக் கண்ட தாய்க்கு அதன் வயிற்றின் வாட்டந்தான் முதலில் கண்ணில் படும். அப்படி இங்கே உள்ளவர்கள் என் பசியறிந்து உணவிட்டுத் தூங்க வைத்தார்கள்."

"புலவர்களுக்கு உபசாரம் செய்வதைக் காட்டிலும் பெரிய கடமை இங்கே யாருக்கும் இல்லை. இது என்ன சிறப்பான உபசாரம்? தமிழ் நாட்டில் புலவர்களுக்கு உள்ள மதிப்பை நான் ஓரளவு அறிந்திருக்கிறேன். அவர்களைத் தக்கபடி உபசரித்து அளவளாவ நான் என்ன பாரியா? காரியா?"

அரசன் இப்படிச் சொன்னபோது புலவருக்கு இன்பக் கிளுகிளுப்பு உண்டாயிற்று. அவர் பாரி முதலிய வள்ளல்களைப்பற்றித் தாம் கூற இருக்கும் பாட்டிலே சொல்லியிருந்தார். குமணனே அதற்குத் தோற்றுவாய் செய்துவிட்டான்.

அவர் பேசத் தொடங்கினார்: "அரசர் பெருமானே, நானும் பாரியையும் காரியையும் நினைத்தேன். தாங்கள் அவர்களைப்பற்றிச் சொன்னீர்கள். பாரி முதலிய ஏழு வள்ளல்களைப்பற்றித் தமிழ்நாடு நன்கு அறியும். அவருள் ஒருவனாகிய அதிகமானை நான் ஒருமுறை பார்த்துப் பழகியிருக்கிறேன். பாரி, புலவர்களுக்குக் கணக்கு இல்லாமல் வாரி வழங்கின பெரு வள்ளல் என்பது உண்மைதான். முடியுடை யரசர்கள்

பொறுமையால் அவனுடன் பொருதார்கள். வீரம் காட்டி அவனை வெல்வதற்கு அவர்களால் இயல வில்லை. அவனுடைய நெடிய மலையாகிய பறம்பை முற்றுகையிட்டார்கள். அதனால் அவனுக்கு ஒரு தீங்கும் உண்டாகவில்லை. அவனைப்பற்றி நான் பாடியிருக்கிறேன்."

"அப்படியா! எங்கே, அதைச் சொல்லுங்கள், கேட்கலாம். நல்லோர் பண்பைக் கேட்பதே பெரிய பேறு அல்லவா?"

புலவர் தம் பாடலைச் சொன்னார். அதில் பாரியின் புகழ் வந்தது. பாட்டின் தொடக்கமே அதுதான்.

*முரசுகடிப்பு இகுப்பவும் வால்வளை துவைப்பவும்*
*அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்*
*கறங்குவெள் அருவி கல்அலைத்து ஒழுகும்*
*பறம்பிற் கோமான் பாரியும்.**

*[முரசத்தைக் குறுந்தடி அடிக்கவும், வெள்ளையான சங்குகள் முழங்கவும் முடியரசர் மூவருடன் பொருதவனும், பெருமையும் உயரமும் உடையதும் ஒலிக்கின்ற வெள்ளருவியானது கற்களைப் புரட்டிக்கொண்டு விழுவதற்கு இடமானதுமாகிய பறம்பு மலைக்குத் தலைவனுமாகிய பாரியும்.]*

இந்த அடிகளைப் புலவர் சொல்லும்போது குமணன் கூர்ந்து கேட்டான். புலவர் சொல்லி நிறுத்தியவுடன், "பாரியும் என்று பாடியிருக்கிறீர்களே; அவனோடு வேறு சிலரையும் பாடியிருக்கும்

* கடிப்பு - முரசை அடிக்கும் குறுந்தடி. இகுப்ப - ஒலிக்கச் செய்ய. வால்வளை - வெண் சங்கு. துவைப்ப - முழங்க. பொருத - போர் செய்த. அண்ணல் - பெருமை. நெடுவரை - உயர்ந்த மலை. கறங்கு - ஒலிக்கின்ற. அலைத்து - புரட்டி. பறம்பு: பாரியின் மலை.

பாட்டாக அல்லவோ இது தோன்றுகிறது?'' என்றான்.

"உண்மைதான். ஓரியையும் பாடியிருக்கிறேன்."

"அப்படியா? புலவர் பாடும் புகழைப் பெற்ற அவர்கள் இறந்தும் இறவாதவர்களாக இருக்கிறார்கள். எங்கே, ஓரியைப் பாடியதைக் கேட்கலாம்."

புலவர் வல்வில் ஓரி என்ற வள்ளலைப்பற்றிப் பாடியுள்ள அடுத்த பகுதியைச் சொன்னார்.

**பிறங்குமிசைக்**

**கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்***.

*[உயர்ந்த உச்சியையுடைய கொல்லி மலையை ஆண்ட வல்வில் ஓரியும்.]*

"மறுபடியும் ஓரியும் என்று நிறுத்திவிட்டீர்களே! அடுத்தபடி மற்ற வள்ளல்களையும்பற்றிச் சொல்லியிருப்பீர்கள்போல் தெரிகிறது. அவர்கள் புகழையும் கேட்கலாம், சொல்லுங்கள்."

அடுத்தபடி மலையமான் திருமுடிக் காரியைப் பற்றிச் சொன்னார் புலவர். அவனுடைய குதிரைக்குக் காரி என்று பெயர். அதையும் அவனுடைய மாரி போன்ற வள்ளன்மையையும் பாராட்டி யிருந்தார்.

**காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த**

**மாரி ஈகை மறப்போர் மலையனும்.**

*[காரி என்னும் குதிரையின் மேல் ஏறிச் சென்று பெரிய போர்களிலெல்லாம் வென்றவனும், மேகத்தைப் போல வழங்கும் ஈகைக் குணமுடையவனும், வலிமை மிக்க போரைச் செய்வதையே தொழிலாக உடையவனுமாகிய மலையமான் திருமுடிக்காரியும்.]*

---

* *மிசை - உச்சி. வல்வில் ஓரி என்பவன், ஒருமுறை எய்த அம்பு பல இலக்குகளை ஒருங்கே ஊடுருவும்படி விடும் வில் வீரம் உடையவன். அதனால் வல்வில் என்ற சிறப்பு அவனுக்கு அமைந்தது.*

முடியுடை மன்னர்களுக்குத் துணையாகச் சென்று அவர்கள் போரில் உடனிருந்து பகைவரோடு பொருது வெற்றியைப் பெறச் செய்வதில் சிறந்தவன் மலையமான். அவ்வாறு துணை நின்று வென்ற காலங்களில் பேரரசர்கள் அவனுக்கு மிகுதியான பொருள்களை வழங்குவார்கள். அவற்றைக் கொண்டு வந்து தனக்கு என்று பாதுகாத்து வைத்துக்கொள்ளாமல் புலவர்களுக்கு அவ்வளவையும் வழங்கி இன்புறும் வள்ளன்மையுடையவன் அவன். ஆதலால் அவனை, "மாரி ஈகை மறப்போர் மலையன்" என்று பாடியிருந்தார் புலவர். அதைக் கேட்ட குமணன், "சுருக்கமாகச் சொன்னாலும் மலையமானின் பெருமையை நன்ருகச் சொல்லியிருக்கிறீர்கள். எத்தனை போர்களில் அவன் முடியுடை வேந்தர்களுக்கு வெற்றியை வாங்கித் தந்திருக்கிறான்!" என்று பாராட்டினான். "நீங்கள் அதிமான் நெடுமான் அஞ்சியைப் பார்த்துப் பழகியதாகச் சொன்னீர்களே. அவனைப் பாடவில்லையோ?" என்று கேட்டான்.

"அவனைப் பாடாமல் இருப்பேனா? அடுத்தபடி அவன் புகழைத்தான் பாட்டில் கோத்திருக்கிறேன்."

அதிகமானுக்கு எழினி என்று ஒரு பெயர் உண்டு. அவனுடைய மலைக்குக் குதிரை மலை யென்று பெயர்.

ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்.

*[ஏறிச் செலுத்தாமல் பிறரைத் தாங்கிய குதிரையாகிய மலையையும், கூரிய வேலையும், வில்வமாகிய தலையில் அணியும் அடையாள மாலையையும், வளைந்த அணிகலன்களையும் உடைய எழினியாகிய அதிகமானும்.]*

"நன்றாயிருக்கிறது. குதிரை மலையை, ஊராது ஏந்திய குதிரை என்று நயமாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஓடும் குதிரை பிறர் ஏறிச் செலுத்த அவர்களைத் தாங்குகிறது. இந்தக் குதிரையும் மக்களைத் தாங்குகிறது. ஆனால் அவர்கள் இதை ஊர்வதில்லை. ஊராது ஏந்திய குதிரை என்பது எவ்வளவு அழகாக இருக்கிறது! எழிலினியைப் பாராட்டினீர்கள். இங்கே சிறிது தூரத்தில் பொதினி மலை இருக்கிறதே, உங்களுக்குத் தெரியுமோ ? முருகன் எழுந்தருளியிருக்கும் திருமலை அது. அங்கிருந்த பேகனையும் பாடியிருக்கிறீர்களோ?"

"மன்னர் பெருமான் நான் அடுத்தபடி யாரைப் பாடியிருக்கிறேனே அவரையே கேட்பது வியப்பாக இருக்கிறது. முருகன் அடியாராகிய அந்த வள்ளலைப் பாடாமல் இருக்க முடியுமா?"

புலவர் பேகனையும், அவன் மலையையும், அந்த மலையின் உச்சியில் முருகன் கோயில் கொண்டிருப்பதையும் பாட்டில் புலப்படுத்தியிருந்தார்.

**ஈர்ந்தண் சிலம்பின் இருள் தூங்கு நளிமுழை**
**அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்**
**பெருங்கல் நாடன் பேகனும்.***

*[ஈரமான குளிர்ந்த மலைப் பக்கங்களில் இருள் தங்கியிருக்கும் செறிவான குகைகளையும் அரிய திறலையுடைய முருகக் கடவுள் திருக்கோயில் கொண்டு பாதுகாக்கும் உயர்ந்த உச்சியையும் உடைய பெரிய குன்றமாகிய பொதினியையுடைய நாட்டுக்குத் தலைவனாகிய பேகனும்.]*

---

* சிலம்பு - மலைப்பக்கம். நளி - செறிந்த. முழை - குகை. கடவுள் என்றது இங்கே முருகனை. சிமை - சிகரம்; உச்சி. பெருங்கல் - பெரிய குன்றம். இக்காலத்தில் பழனியென்று வழங்கும் குன்றமே இது. இதன் பழைய பெயர் பொதினி.

"ஐந்து பேர்களின் புகழைப் பாடியிருக்கும் நீங்கள் மற்ற இருவர் புகழை விட்டிருப்பீர்களா? ஆய் அண்டிரனும், நள்ளியும் உங்கள் பாட்டில் வருகிறார்கள் அல்லவா?"

"ஆம். வள்ளல்கள் எழுவர் என்று புலவர்கள் ஒரு வரிசைப்படுத்திச் சொல்லும் மரபை அறிந்த நான் அவ்விருவர்களையும் விடமுடியுமா?" என்று மற்ற இருவர் புகழைப் பாடிய பகுதியையும் புலவர் சொன்னார். ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர் ஆய்அண்டிரனைப் பாராட்டிப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். அதனைப் புலவர் தம் பாட்டில் எடுத்துச் சொன்னார். நள்ளி என்ற வள்ளலின் தகைசான்ற வள்ளன்மையையும் பகைவரை ஓட்டிய வீரத்தையும் புகழ்ந்தார்.

> .....................திருந்துமொழி
> மோசி பாடிய ஆயும், ஆர்வமுற்று
> உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
> தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
> கொள்ளார் ஓட்டிய நள்ளியும்
> எனஆங்கு எழுவர்.*

*[செவ்விய சொல்லையுடைய முடமோசியார் என்னும் புலவர் பாடிய ஆயும், விருப்புற்றுத் தன்னை எண்ணி வருபவர்களுடைய தளர்ச்சி நன்றாகப் போகும்படி வெறுப்பின்றிக் கொடுக்கும் தகுதி மிக்க வள்ளன்மையையுடையவனும், பகைவர்களை வென்று புறங்காட்டி ஓடும்படி செய்தவனுமாகிய நள்ளியும் என்று அவ்வாறு சொல்லப் பெற்ற ஏழு வள்ளல்கள்.]*

---

* திருந்து மொழி - குற்றமின்றிச் செம்மையாக அமைந்த சொற்கள். மோசி - உறையூரில் ஏணிச்சேரி என்ற பகுதியில் வாழ்ந்திருந்த முடமோசியார் என்னும் புலவர். ஆய் - ஆய் அண்டிரன்; இவன் பொதிய மலைக்குத் தலைவன். வருநர் - வருவோர். உலைவு - தளர்ச்சி. தகை - தகுதி; அழகு என்றும் சொல்லலாம். கொள்ளார் - பகைவர். நள்ளி : கண்டீரக்கோப் பெருநள்ளி என்னும் வள்ளல்.

பாட்டைக் கேட்ட குமணனுக்கு இப்போது ஓர் ஐயம் எழுந்தது. இந்த ஏழு பேரைப் பாடியும் பாட்டு நிறைவு பெறவில்லை. "இது எப்படி முடியப் போகிறது?" என்பதே அவன் ஐயம். "ஏழு வள்ளல் களையும் நன்றாகப் பாடியிருக்கிறீர்கள்; இந்தப் பாட்டு எப்படி முடிகிறது? இதில் எத்தகைய கருத்தை வைத் துப் பாட்டை நிறைவேற்றியிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் அரசன்.

"அதைத்தான் சொல்லப் போகிறேனே! எட்டா வது வள்ளல் ஒருவரைப்பற்றிப் பாடிப் பாட்டை நிறை வேற்றியிருக்கிறேன்."

"எட்டாவது வள்ளலா ? புதிதாக இருக்கிறதே! எழுவர் என்று கணக்குச் சொல்லி முடித்துவிட் டீர்களே!"

"உண்மைதான். ஆனல் அந்தக் கணக்கு அதோடு முற்றுப் பெறவில்லை. முற்றுப் பெறுவதாக இருந்தால் எழுவரும் என்று முற்றும்மை கொடுத் திருப்பேன். எழுவர் என்றுதானே சொன்னேன்? அதற்குமேல் எட்டாம் வள்ளலைச் சொல்லியிருக் கிறேன்."

"அந்த வள்ளல் யார்?" என்று ஆவலோடு கேட்டான் குமணன்.

"புலவர் உலகத்தில் இந்த ஏழு பேர்களையும் வள் ளல்களிற் சிறந்தவர்கள் என்று சொல்லிப் பாராட்டு வது வழக்கம். இப்போது இந்த ஏழு பேர்களில் ஒருவரும் இல்லை. எழுவரும் தம் புகழுடம்பை நிறுத்தி மாய்ந்து மறைந்தனர். பாடி வரும் புலவர் களாகிய பரிசிலர்களுக்குத் தாரகமாக இருந்த இவர் கள் போன பிறகு புலவர்களின் நிலை என்ன ஆகும்?

அவர்கள் யாரிடம் செல்வார்கள்? வள்ளல்கள் போய் விட்டாலும் புலவர்கள் போகவில்லையே! அவர்களில் மாய்பவர்கள் மாயப் புதிய புலவர்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்கப் புதிய வள்ளல்கள் பிறக்கவேண்டாமா? பலர் பிறக்கவில்லை. ஏழு பேர் போன பிறகு, 'பாடி வரும் புலவர்களும், பாணர் கூத்தர் ஆகிய பிறரும் வந்து இரப்பார்களே! அவர்களை நான் காப்பாற்றுவேன்' என்று ஒரு வள்ளல் இக்காலத்தில் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்."

"அவர் யார் என்று தாங்கள் சொல்லவில்லையே!"

"நெடுந்தூரத்திலிருக்கும் யான் அவரைப்பற்றிக் கேள்வியுற்றேன். ஏழு வள்ளல்களும் போய் விட்டார்களே என்று வருந்திய எனக்கு, இப்படி ஒரு வள்ளல் இருக்கிறார் என்று கேள்வியுற்றதும், எப்படியாவது அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஊக்கம் உண்டாயிற்று. அதனால் இங்கே விரைந்து வந்தேன்."

குமணனுக்குப் புலவருடைய கருத்துப் புலப்பட்டு விட்டது. தன்னையே அவர் புகழ்கிறாரென்பதை உணர்ந்துகொண்டான். புன்முறுவல் பூத்தான். புலவர், பாட்டை விட்ட இடத்தில் தொட்டுக்கொண்டு தொடர்ந்து சொன்னார்:

எழுவர் மாய்ந்த பின்றை, 'அழிவரப்
பாடி வருநரும் பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கு'என, விரைந்துஇவண்

**உள்ளி வந்தனென் யானே.***

*[ஏழு வள்ளல்கள் மறைந்த பிறகு, "மனத்தில் வறுமையால் வருத்தம் உண்டாக, பாடி வரும் புலவர் களும் பிறரும் கூடி இரந்து வரும் அவர்களுடைய தளர்ச்சியைத் தீர்ப்பேன்" என்று நீ உன் செய்கைகளால் புலப்படுத்த, அதனை உணர்ந்து இங்கே உன்னைக் காண எண்ணி விரைந்து யான் வந்தேன்.]*

குமணன் இப்போது ஒன்றும் பேசவில்லை. சான்றோனாகிய அவன் தன் புகழைக் கேட்டு, "நன்றாகச் சொன்னீர்கள்!" என்று பாராட்டுவானா? "சான்றோர் புகழும் முன்னர் நாணுப" என்று ஒரு புலவர் சொல்கிறார். தம் புகழைக் கேட்டு நாணம் அடைவதே உயர்ந்தோர் இயல்பு. குமணன், இந்தப் பாட்டுக்கு இத்தனை அடிப்படை போட்டது தன் புகழை அதன் மேல் கட்டுவதற்காக என்பதை உணர்ந்துகொண் டான். அதனால் ஒன்றும் பேசாமல் புன்முறுவல் பூத்தபடியே அதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

மேலே, குமணனுடைய முதிர மலையைப் புலவர் பாடினார். வரும்போது தாம் கண்ட காட்சியை அதில் இணைத்திருந்தார்; பலாப்பழத்தைப் பெற்ற கடுவன் மந்தியைக் கையைக் காட்டி அழைத்த அன்புக் காட் சியைச் சொல்லியிருந்தார்.

**........................விசும்புறக்**
**கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி**
**ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று**
**முட்புற முதுகனி பெற்ற கடுவன்**

---

* *அழிவர - அழிவு உண்டாக; அழிவு - வருத்தம். வருநர் - வரும் புலவர். அற்றம் - தளர்ச்சி. தீர்க்கு - தீர்ப்பேன். என - என்று புலப்படுத்த. உள்ளி - நினைந்து.*

***துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்***
***அதிரா யாணர் முதிரத்துக் கிழவ!****

*[வானை எட்டும்படி மூங்கில் வளரும் மலைப்பக்கத்தில் சுரபுன்னைகளோடு உயர்ந்து வளர்ந்து ஈரப் பலாவோடு அழகு பெற்று நின்ற பலா மரத்தில், ஆசைப்பட்டு வந்து முள்ளைப் புறத்திலே உடைய பழுத்த பழத்தைப் பெற்ற ஆண் குரங்கு, பஞ்சு போன்ற மயிரைப் பெற்ற தலையை யுடைய தன் மனைவியாகிய பெண் குரங்கைக் கை காட்டி அழைக்கும், தளராத புதிய புதிய பொருள்களாகிய வரு வாயை உடைய முதிரம் என்னும் மலைக்கு உரியவனே!]*

இப்படிப் பாடிவிட்டு மேலே குமணனை வாழ்த்திப் பாட்டை நிறைவேற்றினர் புலவர்.

***இவண்விளங்கு சிறப்பின் இயல்தேர்க் குமண!***
***இசைமேந் தோன்றிய வண்மையொடு***
***பகைமேம் படுகநீ ஏந்திய வேலே.*** †

*[இவ்வுலக முழுவதும் பரந்து விளங்கும் சிறப்பையும் இயலும் தேரையும் உடைய குமணனே! புகழால் மேம் பட்ட நின்னுடைய வண்மை ஓங்குக! அதனோடு பகைவ ரினிடையே நீ ஏந்திய வேல் மேம்பட்டு விளங்குக!]*

அவனுடைய வள்ளன்மையாகிய ஈரத்தையும், வீரத்தையும் வாழ்த்திப் பாடி முடித்தார் புலவர்.

---

* *விசும்பு - ஆகாயம். கழை - மூங்கில். சிலம்பு - மலைப் பக்கம். வழை - சுரபுன்னை. ஆசினிக் கவினிய - ஈரப் பலாவோடு சேர்ந்து வளர்ந்து அழகு பெற்ற. ஆர்வு உற்று - ஆசைப்பட்டு. கடுவன் - ஆண் குரங்கு. துய் - பஞ்சு போன்ற மயிர். மந்தி - பெண் குரங்கு. கையிடூஉ-கையைக் காட்டி. பயிரும் - அழைக்கும். அதிரா - தளராத. யாணர் - புதிய வருவாய்.*

† *இவண் - இவ்விடம்; என்றது உலகத்தை. இயல்தேர் - ஓடும் தேர். இசை - புகழ். மேந்தோன்றிய - மேலாக விளங்கிய. வண்மையொடு வேல் மேம்படுக. இது புறநானூற்றில் 158–ஆம் பாடலாக இருக்கிறது.*

"பாட்டில் அந்த எழுவரோடு என்னையும் சேர்த்து வைத்திருக்கிறீர்களே! அது பொருந்துமா?" என்று கேட்டான் குமணன்.

"பொருந்தும் என்பதை நானும் என்னைப் போன்ற புலவர்களும் நன்கு உணர்வோம்" என்று விடையிறுத்தார் புலவர்.

நெடுநேரம் வள்ளலும் தண்டமிழ்ப் புலவரும் பேசிக்கொண்டிருந்தனர். தமிழ்க்கவிதையின் சுவையை நுட்பமாக உணர்ந்து பாராட்டும் கலைஞன் குமணன் என்பதைப் பெருஞ்சித்திரனர் உணர்ந்துகொண்டார்.

# 3. பிரியா விடை

குமணன் பெருஞ்சித்திரனாரிடம் மிக்க அன்பு பூண்டு பழகினான். அவருடைய புலமையும் பண்பும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன. முதிரமலைக் குரங் கைப்பற்றிப் பாடியதை நினைக்கும்போதெல்லாம் அவனுக்கு உவகை உண்டாகும்; உடனே நகையும் எழும். "நீங்கள் குரங்கை எப்படிக் கவனித்தீர்கள்?" என்று கேட்டான்.

"மலையையும் மரத்தையும் விலங்கினங்களையும் கண் கண்டு இன்புறுவது எங்களுக்கு இயல்பு அல்லவா? மனிதர்கள் யாவரும் ஒரு மாதிரியே இருப்பதில்லை. அடிக்கடி மாறுகிறார்கள். ஆனால் மலை மாறுவதில்லை. மரம் கனி தருவதையும் நிழல் தருவதையும் நிறுத்துவதில்லை. விலங்குகள் அன்பு செய்வதில் மாறுபடுவதில்லை. அதனால் அவற்றைக் கண்டு கண்டு அவற்றைப் படைத்த இறைவன் பெருமையை உணர வழியிருக்கிறது. அந்தக் குரங் குக்குத் தன் மனைவியிடம் எத்தனை அன்பு!"

"ஆம்; மனிதனிடம் காணாத பல நல்ல இயல்பு களை விலங்குகளிடம் காண்கிறோம். உங்களைக் கண்டு பழகும் வாய்ப்புக் கிடைத்ததைப் பெரும் பேறாக நான் கருதுகிறேன். உங்களுக்கு மனைவி மக்கள் இருக் கிறார்களா?" என்று குமணன் மெல்ல விசாரிக்கத் தொடங்கினான்.

புலவர் அங்கே வந்து சில நாட்கள் ஆயின. குமணனும் அவரும் ஓரளவு நெருங்கிப் பழகினர்.

இந்த நிலையில் புலவருடைய நலந் தீங்குகளைத் தெரிந்துகொள்ள விரும்பினன் குமணன்.

கடுவனது பேச்சு வந்தபோதே புலவருக்குத் தம் மனைவியின் நினைவு உண்டாயிற்று. குமணன் தம் குடும்பத்தைப்பற்றிக் கேட்டுவிடவே, அந்த நினைவு வலிமையுற்றது. இங்கே வந்து தங்கிய சில நாட்களில் தமிழ்ச் சுவையைக் குமணனோடு நுகர்ந்தார். பல பாடல்களைச் சொன்னர். ஆனல் தம்முடைய வறுமையைப்பற்றிச் சொல்லவில்லை. தமக்கு உதவி புரிய வேண்டும் என்றும் கேட்கவில்லை. 'அதை எப்படிச் சொல்வது?' என்று தயங்கினர். எத்தனை காலம் அங்கே தங்கியிருந்தாலும் குமணன் சிறந்த வகையில் உபசாரம் செய்து பேணுவான். ஒவ்வொரு நாளும் இனிமையாகவே கழியும். ஆனல் ஊரில் அவருடைய தாயும் மனைவியும் மக்களும் உண்ண உணவின்றி வாடுவார்களே! அவர்கள் பசித்திருக்கப் புலவர் மட்டும் இங்கே விருந்து உண்டு கவலையின்றி இருப்பதா? அப்படி இருப்பது அறமாகுமா?

இந்த எண்ணம் பெருஞ்சித்திரனருடைய உள்ளத்தினூடே நின்று குத்திக்கொண்டே இருந்தது. தக்க சமயத்தில் தம் வறிய நிலையைத் தெரிவிக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். நல்ல வேளையாக அரசனே குடும்பத்தைப்பற்றிக் கேட்டுவிட்டான். இதைக் காட்டிலும் வாய்ப்பான செவ்வி வேறு ஏது?

குமணன் கேட்ட கேள்விக்கு விடை கூறப் புகுந்தார் புலவர்.

"எனக்கு மனைவி மக்கள் எல்லோரும் இருக்கிருர்கள். முதுமையால் தளர்வுற்ற தாய் ஒருத்தியும் இருக்கிருள். இங்கே நான் மன்னர்பெருமான் செய்

யும் உபசாரத்தைப் பெற்று நல்விருந்து உண்டு மகிழ்கிறேன். இடையிடையே அவர்களை நினைத்துக்கொள்கிறேன். அவர்கள், அங்கே என்ன செய்கிறார்களோ!"

"அவர்கள் உங்களைப் பிரிந்து வருந்துவார்கள். ஆனாலும் புலவர்கள் எப்போதும் வீட்டிலேயே இருக்க முடியுமா? இருந்தால் நாங்களெல்லாம் தமிழ் விருந்தை அருந்துவது எப்படி?"

"அவர்கள் என் பிரிவால் வருந்துவார்கள் என்பதை நான் எண்ணவில்லை. வறுமை என்னும் பேயினால் அலைப்புண்ட அவர்கள் என்ன நிலையில் வாடுவார்களோ என்றுதான் நினைத்து வருந்துகிறேன்."

"வறுமை நிலை என்று சொன்னீர்கள்? ஏன்?"

"ஏன்? புலவர்களுக்கு வள்ளல்கள் ஈயும் பொருளே பொருள். நான் எந்த வள்ளலையும் அணுக முடியாமல் தவித்தேன். இப்போதுதான் இங்கே வரும் வாய்ப்புக் கிடைத்தது."

"உங்கள் தாயார் மிக்க முதுமை உடையவர்களோ?"

"தலையெல்லாம் வெள்ளை நூல்போல நரைத்துப் போய்விட்டது. கோலை ஊன்றிச் சில அடிகள் வைத்து நடப்பாள். அதற்குள் தளர்ச்சி வந்துவிடும். 'இன்னும் பல ஆண்டுகள் தொல்லையுற வேண்டும் என்று விதித்திருக்கும்போது என் உயிர் போகுமா?' என்று தன்னைத் தானே நொந்துகொண்டு காலத்தைக் கழிக்கிறாள். எங்கும் வெளியிலே செல்வதில்லை. வீட்டு வாசலிலே சிறிது நடப்பாள். மறுபடி திண்ணையிலே முடங்கிக்கொள்வாள்."

"ஐயோ பாவம்! மிகவும் வருத்தத்தைத் தரும் செய்தி. உங்கள் குடும்பத்தைப்பற்றி நான் இவ்

வளவு நாட்கள் தெரிந்துகொள்ளாமல் இருந்தது பெரும் பிழை. உங்கள் மனைவியார் குடும்பத்தை எப்படித்தான் காப்பாற்றுகிறார்கள்?''

"அவள் உடம்பு பச்சை உடம்பு. சமீபத்தில் தான் குழந்தை ஒன்று பிறந்தது. முன்பும் குழந்தைகள் உண்டு. வீட்டில் ஓர் அரிசி இல்லை. கூழ் காய்ச்சக்கூட வகையில்லை. குப்பைக் கீரையைக் கொய்து உப்பில்லாமலே வேக வைத்து அதைத் தான் உண்டு, கிடைத்த கூழையோ மற்றப் பொருளையோ அந்தக் கிழவிக்கும் எனக்கும் குழந்தைக்கும் போட்டுக் காப்பாற்றுகிறாள்."

"நான் உடனே உணவுப் பண்டங்களையும் பிற வற்றையும் உங்கள் வீட்டுக்கு அனுப்புகிறேன். அவர் களைப்பற்றி இனிமேல் நீங்கள் கவலைப்படவேண் டாம். நீங்கள் இன்னும் சில காலம் இங்கே இருந்து செல்லலாம்" என்று மனம் கசிந்து கூறினான் குமணன்.

"இங்கே எவ்வளவு நாட்கள் இருந்தாலும் மன் னர்பிரான் என்னைப் போகும்படி சொல்லப்போவ தில்லை. ஆயினும் அங்கே நான் சென்று நிற்க, என் தாயும் மனைவியும் என் புதிய நிலை கண்டு உவப்பதை நான் பார்க்க வேண்டாமா?"

"நீங்கள் வந்து சில நாட்களே ஆயின. அதற் குள் போகிறேன் என்று சொல்கிறீர்கள். என் மனம் அதற்கு உடம்படவில்லையே! நீங்கள் வற்புறுத் திப் போகத்தான் வேண்டும் என்றால் மனம் கொள்ளா மல் விடை கொடுக்க வேண்டி வரும்."

"அப்படி நான் விடை பெற விரும்பவில்லை. மனம் மேவாமல் அரசர்பிரான் யானையைப் பரிசாகக்

கொடுத்து விடை தந்தாலும் கொள்ளமாட்டேன். மனமுவந்து, போய் வாருங்கள் என்று சொல்லி அனுப்புவதானல், சிறிது கொடுத்தாலும் பெற்றுக் கொண்டு போவேன். நான் இங்கே அரண்மனையில் உபசாரம் பெறப் பெற என் மனம் முதிர்ந்த என் தாயையும் 'அறக் கடவுளுக்குக் கண் இல்லையே!' என்று சொல்லிச் சோறின்றி வாடும் மனைவியையும் நினைக்கிறது. பசியினல் மெலிந்துபோன சுற்றத் தார் சிலரும் இருக்கிருர்கள், காட்டில் உள்ள மரங் களை வெட்டிக் கொளுத்தி, உழுது மலை நெல்லை விதைத்து அதோடு தினையையும் பயிராக்கி, அவை பூட்டை வாங்காமல் இருக்கும்போது, மழை பெய்தால் எப்படி இருக்கும்! அப்படி நான் தாங்கள் வழங்கும் பொருள்களைக் கொண்டு போனல் அவர்கள் எல்லோரும் பார்த்து மகிழ்ச்சியடைவார்கள். ஆகவே, மன்னர்பிரான் எப்போது மனம் விரும்பி என்னை அனுப்ப முடியுமோ, அப்போது நான் போகிறேன்" என்று புலவர் சொல்லித் தம் கருத்தை அமைத்து ஒரு பாடலையும் சொன்னர்:

---

* *வாழும் நாளோடு யாண்டுபல உண்மையின்*
*தீர்தல் செல்லாதுஎன் உயிர்எனப் பலபுலந்து*
*கோல்கால் ஆகக் குறும்பல ஒதுங்கி*
*நூல்விரித் தன்ன கதுப்பினள், கண்துயின்று*
*முன்றிற் போகா முதிர்வினள் யாயும்.*

[வாழவேண்டிய நாளும் ஆண்டுகளும் பல இருப்பதனலே என் உயிர் போகாமல் இருக்கிறது என்று பல சொற்களை வாழ்க்கையில் வெறுப்போடு சொல்லி, கோலை ஒரு காலாகக் கொண்டு குறுகிய பல அடி வைத்து நடந்து, நூலை விரித்தாற்போன்ற கூந்தலை உடையவளாகி, தூங்கி முற்றத்தை விட்டுப் போகாத முதிர்ச்சியை உடையவள் என் தாய்.]

இது அவர் தம் தாயின் நிலையைச் சொன்ன பகுதி.

அந்தப் பாட்டில் புலவர் தம்முடைய தாயின் நிலையையும் மனைவியின் நிலையையும் உள்ளது உள்ள படியே சொல்லியிருந்தார். அதைக் கேட்டுக் குமணன் மிக்க இரக்கம் கொண்டான்.

இன்னும் சில நாட்கள் பெருஞ்சித்திரனார் அங்கே தங்கினார்.

---

*குப்பைக் கீரை கொய்கண் அகைத்த*
*முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று*
*நீர்உலை யாக ஏற்றி மோர்இன்று*
*அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து*
*மாசொடு குறைந்த உடுக்கையள், அறம்பழியாத்*
*துவ்வா ளாகிய என்வெய் யோளும்.*

[குப்பையில் விளைந்த கீரையில் முன்பே பறித்த இடங்களில் மீண்டும் தழைத்த முற்றாத இளந்தளிரைக் கொய்துகொண்டு, உப்பில்லாமல் வெறும் நீரை உலையாக அடுப்பில் வேக வைத்து, மோரும் இல்லாமல், சோற்றுப் பருக்கையையே மறந்து போய், பச்சை இலையை உண்டு, அழுக்கினால் நைந்து கிழிந்த ஆடையை உடையவளாகி அறக் கடவுளைப் பழித்து, உணவின்றி இருப்பவ ளும் என்னை விரும்புபவளும் ஆகிய என் மனையாட்டியும்.]

இது தம் மனைவியைப்பற்றிச் சொன்ன பகுதி.

*உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்*
*தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் ; உவந்துநீ*
*இன்புற விடுதி ஆயின், சிறிது*
*குன்றியும் கொள்வல், கூர்வேற் குமண!*
*அதற்பட அருளல் வேண்டுவல்; விறற்புகழ்*
*வசையில் விழுத்திணைப் பிறந்த*
*இசைமேந் தோன்றல்நிற் பாடிய யானே.*

[கூரிய வேலையுடைய குமணனே! வெற்றியினால் உண்டான புகழைப் பெற்ற, குற்றம் இல்லாத சிறந்த குலத்தில் பிறந்த, புகழால் மேம்பட்ட தலைவனே! உன்னைப் பாடிய யான், முகம் காட்டாமல் திருப்தி தவிர்ந்து விடுக்கும் பரிசிலாக உயர்ந்து ஏந்திய கொம்பை யுடையதும் பகைவரைக் கொல்லுவதுமாகிய களிறு பெற்றாலும் கொள்ளமாட்டேன். மனம் மகிழ்ந்து நீ இன்ப மடையும்படி விடை தந்தால் குன்றியளவானாலும் ஏற்றுக் கொள் வேன். ஆதலின் அந்த மகிழ்ச்சி உண்டாகும்படி கருணைபுரிதலை வேண்டுகிறேன்.]

இது பாட்டின் முடிவு.

மறுபடியும் அவருக்குத் தம் குடும்பத்தின் நினைவு வந்துவிட்டது. நாள்தோறும் நல்ல சோற்றையும், பல வகைக் கறி முதலியவற்றையும் பல கலங்களில் இட்டு அருத்தினன் குமணன். அவர் உண்டு இன்புற்றாலும் தம் குடும்பத்தின் நிலை அவர் உள்ளத்தை உறுத்திக்கொண்டே இருந்தது.

மறுபடியும் குமணனிடம் விடை கேட்கப் புலவர் துணிந்தார். அவர் அங்கே தங்கிய சில நாட்களில் வேறு சில புலவர்களும் வந்து குமணனுடைய உபசாரத்தைப் பெற்றுச் சென்றார்கள். அவர்களிடம் அவன் அளவுக்கு மிஞ்சிய அன்போடு நடந்துகொள்வதைக் கண்டு கண்டு இன்புற்றார். எப்படியும் விடை பெற்றுச் செல்லவேண்டும் என்று முடிவு செய்துகொண்ட அன்று குமணனிடம் தம் குறிப்பைத் தெரிவிக்கலானார்.

" இங்கே புலவர்கள் பெறும் இன்பம் எவ்வளவு சிறந்ததாக இருக்கிறது! வெயிலால் தீய்ந்துபோன காட்டில் மழை பெய்தால் அக் காடு முழுவதும் பச்சைப் பசேலென்று தழைத்து வளம் பெறுகிறது. அதைப் போன்ற காட்சியைத்தான் இங்கே பார்க்கிறேன்" என்று தொடங்கினார்.

" நீங்கள் எதைச் சொல்கிறீர்கள் ?" என்று குமணன் வினவினன்.

" புலவர்களின் பழைய நிலை எனக்குத் தெரிந்த அளவுக்கு அரசர்பிரானுக்குத் தெரிந்திராது அவர்கள் தின்ன எதுவும் கிடைக்கிறதில்லை; பசி அவர்கள் உடம்பைத் தின்றுகொண்டே வருகிறது. சோறு காணாத குடல் அப்படி அப்படியே மடிப்பு மடிப்பாக இருக்கிறது. அத்தகைய அவர்கள் வயிற்றில் இப்போது தண்ணென்று உணவு புகுகிறது. தாளித்த பலவகைச்

சோறும் கறியும் புகுகின்றன. துவையல் என்ன, நெய் பிழியும் சோறு என்ன, பிற உண்டி வகைகள் என்ன—இவற்றை யெல்லாம் சிறிய சிறிய பொற் கலத்தில் நிறைத்துச் சுற்றிலும் வைத்து, 'பாடும் புலவர்கள் இவ்வற்றை உண்டு கேடு இல்லாமல் சுகமாக இருக்கட்டும்' என்று மன்னர்பிரான் உபசரிப்ப தாகக் கேள்வியுற்றேன். பிற மன்னர்களிடம் போரிட் டுப் பெற்ற அரிய பொன் அணிகளை மிக எளிதில் புலவர் கூட்டம் பெறும்படி வாரி வழங்குவதாகவும் சொன்னார்கள். தம்மிடம் வந்து நட்டவர்களைச் சமானமாக வைத்து நட்புச் செய்யும் பெருமை யுடையவர் என்றும் கேள்வியுற்றேன். முதிரத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே போனால் நிறையக் கொடுப்பார் என்றும் கூறினார்கள். ஒருவர் அல்லர், இருவர் அல்லர், பலர் மன்னர்பிரானுடைய புகழை வாயாரக் கூறினார்கள். அதைக் கேட்டு எனக்கு ஓர் ஊக்கம் உண்டாயிற்று. இங்கே வந்தேன்."

"எல்லாம் பொய் என்று தெரிந்துகொண்டீர்கள் அல்லவா ?" என்று சொல்லிப் புன்னகை பூத்தான் குமண வள்ளல்.

"அவர்கள் சொன்னது குறைவு என்று தெரிந்து கொண்டேன். ஒரே ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். வந்தவர்களை வாருங்கள் என்று சொல்லத் தெரிந்த மன்னர்பிரானுக்குப் போக வேண்டியவர்களைப் போய்விட்டு வாருங்கள் என்று சொல்லத் தெரியவில்லை. என் வீட்டு நிலையை மறு படியும் எடுத்துரைப்பதற்காக என்னைப் பொறுத்தருள வேண்டும். என் மனைவிக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாக இருக்கும்."

"நான் வேண்டிய பொருள்களை அனுப்புகிறேன் என்று அன்றே சொன்னேனே!"

"என்னையே அனுப்பிவிட வேண்டுகிறேன்."

"குழந்தையின் நினைவு வந்துவிட்டதோ?"

"குழந்தையின் மழலையும் அழகும் நினைவுக்கு வரவில்லை. அவனுடைய பசிதான் நினைவுக்கு வருகிறது. இதை மன்னர் பெருமான் சற்றே காது கொடுத்துக் கேட்க வேண்டும். என்னுடைய மகன் சிறிய குழந்தைதான். அவன் எப்போதும் வீட்டுக்கு வெளியிலே தான் இருப்பான். வீட்டில் உணவு போட்டால்தானே வீட்டு நினைவு வரும்? உணவு என்ற பொருளே வீட்டில் இல்லாமையால் அவன் தன் பரட்டைத் தலையோடு வெளியிலே உலாவிக்கொண்டிருப்பான். எப்போதாவது வீட்டுக்கு வந்தால் தன் தாயை அணுகிப் பால் உண்ண முயல்வான். அது கிடைக்காமையால், கூழ் இருக்கிறதா, சோறு இருக்கிறதா என்று ஒவ்வொரு சட்டியையும் திறந்து திறந்து பார்ப்பான். எல்லாம் சூனியமாக இருப்பதைக் கண்டு அழத் தொடங்குவான். அவன் அழுகை என் மனைவியின் உள்ளத்தை உலுக்கும். அவள் என்ன செய்வாள் பாவம்! அவனைச் சமாதானம் செய்யப் பார்ப்பாள். வயிறு கிண்டும்போது சமாதானப் பேச்சு என்ன செய்யும்? 'அதோ புலி வருகிறது! அழாதே. அழுதால் புலி கடித்துவிடும்' என்று பயமுறுத்துவாள். குழந்தை ஒரு கணம் பேசாமல் இருப்பான். பசியென்னும் புலி உண்மையாகக் கடிப்பதால் மறுகணம் அழுவான். உடனே அவனை இடுப்பில் எடுத்துக்கொண்டு வெளியில் வந்து, 'அதோ பார், நிலா. எங்கே, நிலா நிலா வா வா என்று கூப்பிடு பார்க்கலாம்' என்று நயமாகப் போக்

குக் காட்டுவாள். அதுவும் ஒரு கணந்தான் பயன் படும். மறுபடியும் அவன் அழுவதைக் கண்டு அவள் நொந்து சாம்புவதைக் கடவுளே அறிவார். 'உன் அப்பா, போனவர் வரவில்லையே! அவர் வந்தால் அவரை நீ எப்படிக் கோபிப்பாய்? எப்படி முகத்தை வைத்துக்கொள்வாய்? எங்கே காட்டு' என்று கூறிப் போது போக்க முயல்வாள். இப்படியெல்லாம் அல்லல் உழப்பவள் தன் துன்பம் தீர்ந்து சுகம் அடையும்படி மிகுதியான பொருளைக் கொடுத்து என்னை விரைவில் அனுப்பவேண்டும். இந்த உலகத்தில் தங்கள் புகழ் ஓங்குக என்று வாழ்த்துகிறேன். யான் போய் அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து இன்புறச் செய்துவிட்டு மீட்டும் இங்கே வருகிறேன். கருணை புரிய வேண்டும்."

இதைக் கேட்ட குமணன் உருகிப் போனான். புலவர் தம் கருத்தைப் பாட்டிலும் அமைத்துச் சொல்லி விட்டார்.

*இல்உணத் துறத்தலின் இல்மறந்து உறையும்*
*புல்உளைக் குடுமிப் புதல்வன், பன்மாண்*
*பால்இல் வறுமார்பு சுவைத்தனன் பெறாஅன்,*
*கூழும் சோறும் கடைஇ ஊழின்*
*உள்இல் வறுங்கலம் திறந்துஅழக் கண்டு,*
*மறப்புலி உரைத்தும், மதியம் காட்டியும்*
*நொந்தனள் ஆகி, "நுந்தையை உள்ளிப்*
*பொடிந்தநின் செவ்வி காட்டு" எனப் பலவும்*
*வினவல் ஆனா ளாகி, நனவின்*
*அல்லல் உழப்போள் மல்லல் சிறப்பச்*
*செல்லாச் செல்வம் மிகுத்தனை வல்லே*
*விடுதல் வேண்டுவல்.*

*[வீடு உணவைத் துறந்திருப்பதனால் வீட்டையே மறந்து வெளியே உறையும் பொலிவற்ற தலைமயிரையுடைய என் புதல்வன் பலமுறை தன் தாயின் பால் இல்லாத வறிய மார்பைச் சுவைத்தும் பாலைப் பெறுமல், கூழையும் சோற்றையும் வேண்டி வரிசையாக உள்ளே ஒன்றும் இல்லாத பாழும் கலங்களைத் திறந்து பார்த்து அழ, அதைக் கண்டு கொடுமையுடைய புலியின் பேரைச் சொல்லிப் பயமுறுத்தியும், சந்திரனைச் காட்டி நயந்து பேசியும், எதனாலும் அழுகை அடங்காதது கண்டு வருத்தமடைந்து, "உன் அப்பாவை எண்ணி, அவரைக் கோபிக்கும் கோலத்தைக் காட்டு" என்று பல பல கேட்பதை நிறுத்தாதவளாய், நனவில் துன்பம் அடைகிற என் மனைவி பொருள்வளம் பெற்று இன்புறும்படியாக, குறையாத செல்வத்தை மிகுதியாகத் தந்து விரைவில் என்னை அனுப்புதலை வேண்டுகிறேன்.]*

இது அவர் தம் இல்லில் தம் மனையாள் படும் பாட்டை எடுத்துரைத்த பகுதி. இதைக் கேட்பவர்கள் யாரானாலும், கல் நெஞ்சராக இருந்தாலும், உருகி விடுவார்கள் என்பதில் ஐயமே இல்லை.

குமணன் இப்போது உண்மையை நன்றாக உணர்ந்துகொண்டான். இனி ஒரு கணமும் பெருஞ்சித்திரனாரை நிறுத்தி வைக்கக்கூடாதென்று எண்ணிப் பலவகைப் பொருள்களை ஒரு வண்டியில் போட்டுப் புலவருக்கு ஆடை அணிகளை வழங்கி அனுப்பினான். "நீங்கள் இங்கே அடிக்கடி வருவதாகச் சொன்னதை நினைப்பூட்டுகிறேன். அதைச் சொன்ன பிறகுதான் உங்களை அனுப்பலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதற்குமுன் அந்த எண்ணம் தோன்றவில்லை. தோன்றியிருந்தால் நான்கு நாட்களுக்கு முன்பே விடை கொடுத்து அனுப்பியிருப்பேன். உங்களுடைய

நட்புக் கிடைத்தது எனக்குப் பெருமை. இது மேன் மேலும் வளரும்படி இறைவன் அருள் செய்ய வேண் டும்" என்று கூறி வழியனுப்பினன்.

புலவருக்குப் பேச்சு எழவில்லை. குமணன் கொடுப்பவனைப்போலப் பேசவில்லை. தனக்குப் புல வர் இன்பத்தைக் கொடுத்தார் என்ற எண்ணத்தோடு பேசினன்.

"*இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்*
*கனவிலும் தேற்றுதார் மாட்டு*"

என்று வள்ளுவர் இத்தகைய வள்ளல்களை நினைந்து தான் கூறியிருக்க வேண்டும்.

கண் நீரைக் கக்க, வாய் தடுமாற, ஒருவாறு விடை பெற்றுக்கொண்ட பெருஞ் சித்திரனர் தம் ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

# 4. "எல்லோர்க்கும் கொடு"

பெருஞ்சித்திரனர் தம்முடைய ஊருக்கு வந்து சேர்ந்தபோது அவர் வீட்டில் உள்ளவர்கள் அவரைக் கண்டு வியப்பில் மூழ்கினர்கள். அவர் முகத்தில் தெளிவும், உடம்பில் பொலிவும் உண்டாகியிருந்தன. அவர் அணிந்திருந்த ஆடையும் அணிகளும் அவரை மணக்கோலத்தில் இருப்பவரைப்போலத் தோற்றச் செய்தன.

கொண்டு வந்த பொருள்களால் அவர்களுடைய வறுமை அப்போதைக்கு நீங்கியது. அவர் மனைவி அறிவுடையவளாதலின் அவற்றை வைத்துக்கொண்டு செட்டாக வாழத் தொடங்கினள். அன்றுமுதல் அந்தக் குடும்பத்தில் ஒளி புகுந்தது. உணவும் உடையும் பிற பண்டங்களும் நிரம்பின. குழந்தைகள் உரமும் எழிலும் பெற்றார்கள்.

ஒவ்வொரு நாளும் குமணனை வாழ்த்திய படியே உணவு கொண்டார் பெருஞ்சித்திரனர். அவருடைய மனைவி தனக்கு இயல்பாக உள்ள உடல் நலத்தையும் வன்மையையும் பெற்றாள். அவர்களுடைய இன்பத்தில் பங்கு பெறப் பல உறவினர்கள் வந்து சில நாட்கள் தங்கிச் சென்றார்கள்.

பல காலமாகத் தன்னைச் சார்ந்தவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்து வரவேண்டும் என்ற விருப்பம் பெருஞ்சித்திரனருடைய மனைவிக்கு இருந்து வந்தது.

தங்களுக்கே போதிய உணவு கிடைக்காதபோது விருந்தினர்களை அழைப்பது எப்படி? அப்போது அவளுக்கு உண்டான விருப்பத்தை இப்போது அவள் நிறைவேற்றிக்கொண்டாள். இவ்வாறு அவர் வீட்டில் அழைப்பின் மேல் வந்த விருந்தினர்களும், அழையா விருந்தினர்களும் வந்து நிரம்பினர்கள். வீடு கல்யாண வீடு போலப் பொலிவுடன் விளங்கியது.

ஏழை யென்றால் அயல் வீட்டுக்காரர்கூட ஏனென்று கேட்காத உலகம் இது. பணக்காரன் என்றால் வலியச் சென்று நட்பாடுவார்கள் மக்கள். வறுமை மலிந்திருந்த பழங்காலத்தில் எட்டிக்கூடப் பாராத ஊர்க்காரர்கள் இப்போது தாமே வந்து வந்து பழகினர்கள். பெருஞ்சித்திரனர் குமணனைக் கண்டு பரிசில் பெற்ற வரலாற்றைச் சொல்லச் செய்து கேட்டுப் பாராட்டினர்கள். ஊர்ப் பெண்கள் அவருடைய மனைவியுடன் பழகத் தொடங்கினர்கள்.

'என்ன விசித்திரமான உலகம்!' என்று புலவர் தமக்குள்ளே எண்ணி வியந்தார்.

எப்படியோ ஊரவர் பழக்கம் உண்டானது நல்லதாகப் போயிற்று. புலவர், அவர் மனைவியார் இருவருடைய நல்லியல்புகளையும் மற்றவர்கள் உணர்ந்து கொண்டார்கள். ஊரவரிலும் நல்லவர்கள் இருப்பார்கள் அல்லவா? அவர்கள் நெருங்கிப் பழகினர்கள்.

'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' என்று சொல்வார்கள். குமணன் கொடுத்தனுப்பிய பொருள்கள் சில மாதங்களுக்கு வந்தன. வர வர அவை குறைந்தன.

அயலில் உள்ளவர்கள் வேண்டிய பண்டங்களைக் கொடுத்தார்கள்; புலவர் மனைவியிடம், "இவற்றை நீ

திருப்பித் தர முடிகிறபோது தந்தால் போதும்" என்று சொல்லி அளித்தார்கள். அவர்களுக்கு அவளிடம் அத்தகைய அன்பு வளர்ந்திருந்தது. அவள் பண்டங்கள் குறைந்து வருவதை அறிந்து செலவைக் குறைத்தாள். இல்லாத பொருள்களைத் தனக்குத் தெரிந்தவர்களிடம் கடனாக வாங்கிக்கொண்டாள். அவற்றை அளந்து வாங்கிக்கொண்டு, குறிப்பிட்ட அந்த அளவுப்படியே மீட்டும் அளந்து தருவதாகச் சொன்னாள். இதற்குக் குறியெதிர்ப்பை என்று பெயர்.

இப்படி இன்னும் பல நாட்கள் வாழ முடியாது என்பதைப் புலவர் மனைவி உணர்ந்தாள். பெருஞ்சித்திரனாரோ ஒரு கவலையும் இல்லாமல் இருந்தார். ஒரு நாள் அவர் மனைவி அவரிடம், "மறுபடியும் ஒரு முறை குமண வள்ளலிடம் போய்விட்டு வாருங்கள்" என்று மெல்லத் தெரிவித்தாள்.

"ஏன்? அவரிடம் போய் வந்து நெடுநாட்கள் ஆகவில்லையே!" என்றார் புலவர்.

"அவர் உங்களை அனுப்புவதற்கு மனம் இல்லாதவராக இருந்தார் என்று சொன்னீர்களே; மறுபடியும் அவரைப் போய்ப் பார்க்கவில்லையா?"

"பார்க்கத்தான் வேண்டும். இன்னும் சில நாட்கள் போகட்டும்."

"மறுபடியும் பழைய நிலை வந்த பிறகு போகலாம் என்று நினைத்திருக்கிறீர்களோ?"—அவள் சற்றே பரிகாசம் தொனிக்கும் குரலில் பேசினாள். மனைவிக்கு அந்த உரிமைகூட இல்லையா ?

"நான் வாங்கி வந்த பொருள்கள் எல்லாம் ஆகிவிட்டனவா?"

"ஆகாமல் அப்படியே உட்கார்ந்திருக்குமா? இன்னும் பத்து நாட்களில் பானையெல்லாம் சூனியமாகிவிடும். அதற்குமுன் நீங்கள் போய் வந்தால் நல்லது."

புலவருக்குப் பழைய நிலை மறுபடியும் வந்துவிடப் போகிறதே என்ற அச்சம் உண்டாயிற்று. குமணனுடைய பேரன்பை நினைத்துப் பார்த்தார். எப்போது போனாலும் புலவரை அவன் அன்புடன் வரவேற்க ஆயத்தமாக இருந்தான்.

★

இரண்டாவது முறையும் குமணனைக் காணும் பொருட்டுப் பெருஞ்சித்திரனார் புறப்பட்டார். நன்றாகப் பழகிய இடமாதலின், நிச்சயம் தமக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று வரலாம் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. முதிரத்தை அடைந்தார். குமணனைக் கண்டார். அவரைக் கண்டவுடனே குமணன், "என்ன காரியம் செய்தீர்கள்? இவ்வளவு காலம் என்னை அடியோடு மறந்துபோய்விட்டீர்களே!" என்று கேட்டான்.

"நான் போய்ச் சில வாரங்களே ஆயின. இது பெரிய இடையீடு ஆகுமா?" என்றார் புலவர்.

"குழந்தையையும் மனைவியாரையும் அன்னையாரையும் பார்த்துவிட்டு வருவதாகப் போனீர்கள். என்ன இருந்தாலும் புதிய நட்புப் பழைய அன்புக்கு எதிராக நிற்க முடியுமா? அங்கே போனவுடன் குழந்தைகளோடு குலாவியும் மனைவியாரோடு அளவளாவியும் தாயாரோடு உரையாடியும் பொழுது இனிதாகப் போயிருக்கும். இரண்டு மூன்று நாள் பழகிய என் நினைவு வரக் காரணமே இல்லை."

புலவர், "அப்படிச் சொல்லக் கூடாது. நான் ஒவ்வொரு நாளும் மன்னர்பிரானை நினைத்துக்கொண்டே இருந்தேன். நான் உண்ணும் உணவு மன்னர்பெருமான் அளித்ததாக இருக்க, நான் எப்படி மறக்க முடியும்? நன்றியறிவு இல்லாதவனாக வாழ்வதிலும் இறந்துபடுவது நன்று என்று நினைக்கிறவன் நான்...." என்று சொல்லி வரும்போது, குமணன் இடைமறித்தான்.

"நான் உங்களை நன்றியறிவு இல்லாதவர் என்று சொல்ல வரவில்லை. இங்கே இதுகாறும் வராததற்குக் காரணம் எதுவாக இருக்கும் என்று ஆராய்ந்து, எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். உங்கள் மனத்தில் வருத்தம் உண்டாக வேண்டுமென்று சொல்லவில்லை. இதை நீங்கள் மறந்துவிடுங்கள்."

"நான் செய்த பிழையை உணர்கிறேன். மன்னர் பிரானை முன்பே வந்து கண்டு மகிழ வேண்டியவன் நான். என்னவோ வராமல் இருந்துவிட்டேன். மன்னர்பிரான் இதைப் பெரிதாக எண்ணக்கூடாது."

இருவரும் ஒருவரிடம் ஒருவர் வைத்திருந்த பேரன்பினால் இப்படிப் பேசிக்கொண்டார்கள்.

"இந்த முறை என் விருப்பப்படி பல நாள் இங்கே தங்கி எனக்குத் தமிழின்பத்தை ஊட்டும் எண்ணத்தோடுதானே வந்திருக்கிறீர்கள்?"

"ஆம். மன்னர்பிரான் எப்போது, இவன் இங்கிருந்தது போதும் என்ற நினைப்போடு விடை கொடுக்க நேர்கிறதோ அப்போதுதான் போவதென்று தீர்மானித்துக்கொண்டு வந்திருக்கிறேன். என்ன செய்யச் சொன்னாலும் செய்யக் காத்திருக்கிறேன்."

புலவரும் புரவலனும் பல நாள் உரையாடி இன்புற்றனர். முதிரமலைக் காட்சிகளைக் கண்டுவந்தனர். அந்தக் காட்சிகளைச் சொல்லோவியமாக்கிப் புலவர் பாடினார். அவர் பாடிய கவிதைகளைக் குமண வள்ளல் கேட்டு மகிழ்ந்தான். "பெருஞ்சித்திரனார் என்ற பெயர் உங்களுக்கு அமைந்தது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! வண்ண ஓவியங்களில்கூட இத்தனை நன்றாகக் காட்ட முடியாது. உங்கள் கவிதை கண்ணாற் கண்டதை மாத்திரமா சொல்கிறது? கருத்தால் கருதுவதையும் சித்திரம் போலக் காட்டுகிறது" என்று பாராட்டினான். ஒவ்வொரு நாளும் மிக இனிதாகப் பொழுது போய்க்கொண்டிருந்தது. புலவர் வந்து பல வாரங்கள் ஆயின. தாம் வீட்டை விட்டு வரும்போது மனைவி சொன்னது புலவருடைய நினைவுக்கு வந்தது. மறுபடியும் பழைய நிலை வந்துவிடக் கூடாதே என்ற அச்சம் உண்டாயிற்று. ஆனாலும் அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை.

குமணன் அவருடைய உள்ளக் குறிப்பை உணர்ந்துகொண்டான். சில நாட்களாகப் புலவருடைய பேச்சில் அவருடைய குடும்பத்தைப்பற்றிய செய்திகள் இடையில் வருவதை அவன் கவனித்தான். 'இவ்வளவு நாள் இவர் இங்கே தங்கியதே பெரிய காரியம். இவரை நாம் சோதனை செய்யக்கூடாது' என்ற எண்ணம் அவனுக்கே உண்டாகிவிட்டது. ஆதலின், புலவரை அனுப்புவதற்குரிய ஆயத்தங்களைச் செய்தான். இந்த முறை அளவற்ற பரிசில்களை வழங்கினான். ஆடையாகவும் அணிகளாகவும் அவன் வழங்கியவை பல. இரண்டு மூன்று வண்டிகள் நிறைய வாழ்வுக்குரிய பண்டங்களை நிரப்பினான்.

"உங்களுக்கு எப்போது எது வேண்டுமானாலும் சிறிதும் தயக்கமின்றி எனக்குத் தெரிவித்தால் உடனே அனுப்புகிறேன். உங்கள் வீட்டில் உள்ளவர்கள் வாழ்க்கை நிலை குறையக் கூடாது. அதை எண்ணியே இவற்றை அனுப்புகிறேன். நீங்கள் சென்று வாருங்கள்" என்று குமண வள்ளல் பெருஞ்சித்திரனாருக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

அவன் அளித்த பரிசில்களைக் கண்டு புலவர்க்கு மூர்ச்சை போடாததுதான் குறை. 'இனிப் பல மாதங்கள் நம் குடும்பத்துக்கு ஒரு விதமான குறையும் இல்லை' என்ற பெருங் களிப்புடன் அவர் ஊரை அடைந்தார். அவர் நடையிலே என்றும் இல்லாத பெருமிதம் உண்டாயிற்று.

வீட்டுக்கு வந்து, தாம் பெற்ற பரிசில்களைத் தம் அன்னையாருக்குக் காட்டினார். பின்பு தம் மனைவியை அணுகி, "அதோ பார், அந்த வண்டிகளில் உள்ள பண்டங்களை இறக்கி வைத்துக்கொள்" என்றார்.

அவற்றை ஏறெடுத்துப் பார்த்தாள் அந்தப் பெண்மணி. "எல்லாம் குமண வள்ளல் தந்தவையா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"எல்லாம் அந்தப் பெருமான் வழங்கியனவே. இவை எல்லாவற்றையும் ஒழுங்காக எடுத்து வை. வைத்துவிட்டு வா. உன்னிடம் சில செய்திகளைச் சொல்லவேண்டும்."

அவள் சுறுசுறுப்பாக, வீடு தேடி வந்த திருமகளைப்போல எண்ணி அவற்றையெல்லாம் எடுத்து வைத்தாள். வீடு கொள்ளாத பண்டங்கள்! தெரிந்தவர் வீடுகளில் சில பண்டங்களை இறக்கும்படி ஏற்பாடு செய்தாள். ஒருவாறு எல்லாவற்றையும்

ஒழுங்கு செய்த பிறகு தன் கணவரிடம் வந்தாள். "எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டேன். ஏதோ சொல்ல வேண்டும் என்று சொன்னீர்களே! என்ன அது?" என்று கேட்டாள்.

"அதுவா? இப்படி உட்கார், சொல்கிறேன். இவ்வளவு பண்டங்களையும் என்ன செய்யப் போகிறாய்?"

"என்ன செய்வார்கள்? வைத்துக்கொண்டு செட்டாகக் குடித்தனம் செய்வேன்."

"அது வேண்டாம் என்று சொல்லத்தான் உன்னை அழைத்தேன். குமண வள்ளல் இருக்குமட்டும் நமக்கு ஒரு குறைவும் வராது. இந்தப் பொருள்களையெல்லாம் வேண்டியவர்களுக்குக் கொடு."

"யாருக்குக் கொடுப்பது ?"

"அதை நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஆனாலும் சொல்கிறேன் கேள்: உன்னைத் தேடிக்கொண்டு தாமே இங்கே வந்து தங்கும் ஏழை உறவினர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு வேண்டியதைக் கொடு. நீயாக விரும்பிச் சிலரை அழைத்தாயே, அவர்களுக்கும் கொடு. நான் சொல்வதைக் கேட்டு அப்படியே நடக்கும் மாட்சிமையுள்ள கற்புடையவள் நீ ஆதலால் இதைச் சொல்கிறேன். உனக்குச் சொந்தக்காரர்கள் யார் உண்டோ அவர்களுக்கும் எடுத்துக் கொடு. பல காலமாக எத்தனையோ பண்டங்களை அயலாரிடம் அளந்து வாங்கி யிருக்கிறாய்; திருப்பித் தருவதாகச் சொல்லி வாங்கி யிருக்கிறாய். அப்படிப் பெற்ற குறியெதிர்ப்பைகளை யெல்லாம் ஒன்றுகூட மிச்சமின்றித் திருப்பிக் கொடுத்துவிடு. இவருக்குக் கொடுக்கலாமா, அவருக்குக் கொடுக்கலாமா, என்று என்னைக் கேட்க வேண்டுமென்று

வைத்துக்கொள்ளாதே. அது வேண்டியதில்லை. இன்னார், இனியார் என்னாமல் கொடு. இவற்றை வைத்துக் கொண்டு சாமர்த்தியமாக வாழலாம் என்று எண்ணாதே. இவற்றை அளித்த குமணன் இருக்கிறான். அவனைக் கொடுக்கும்படி செய்த இறைவன் இருக்கிறான். ஆதலின், கொடுத்தால் குறைந்துவிடுமே என்று எண்ணாமல் கொடு. என்னிடம் யாராவது எதை யாவது கேட்டாலும் கொடுக்கிறேன். நீயும் கொடு. நீதானே வீட்டுக்குத் தலைவி? உன்னிடந்தான் எல்லோரும் வந்து கேட்பார்கள். பழங்கள் நிரம்பிய முதிரமலைத் தலைவனாகிய குமணன் வழங்கிய இந்தப் பொருள்களை நீ பிறருக்கு வழங்கி அதனால் வரும் இன்பத்தை அடைவாயாக!''

இந்த நீண்ட அறிவுரையைக் கூறிய புலவர் அதைப் பாட்டாகவே அமைத்துவிட்டார்.

*நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்*
*பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீர யாழநின்*
*நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்*
*இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும் என்னாது. நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!*
*பழம்தூங்கு முதிரத்துக் கிழவன்*
*திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.*

*[நின்னை விரும்பி வந்து தங்கும் இயல்புடையவர்களுக்கும், நீ விரும்ப உன் அழைப்பை ஏற்று வந்து தங்குபவர்களுக்கும், பலவாக மாட்சிமைப்பட்ட கற்பையுடைய நின் சுற்றத்தார் முதலியவர்களுக்கும், நம் சுற்றத்தாரின் கடுமையான பசி தீரும் பொருட்டு நினக்குப் பண்டங்களைக் கடன்*

*கொடுத்தவர்களுக்கும், இன்னாருக்கு என்று ஆராய்ந்து பாராமல், என்னோடு கலந்து யோசனை செய்யாமல், சாமர்த்தியமாக இதை வைத்துக்கொண்டு வாழலாம் என்று நினையாமல், வீட்டுக்குத் தலைவியே, பழங்கள் தொங்கும் முதிர மலைக்கு உரியவனும் செம்மையான வேலை உடையவனுமாகிய குமணன் வழங்கிய பொருளை, நீயும் யாவருக்கும் கொடுப்பாயாக.]*

புலவர் இவ்வாறு கூறுவதைக் கேட்ட மனைவி முதலில் சிறிது தடுமாறினாள். அவர் மறுபடியும், "குமணன் செல்வம் எல்லாம் நம் செல்வந்தான். இறைக்க இறைக்க ஊறும் கிணறுபோல் கொடுக்கக் கொடுக்கத்தான் நமக்கும் செல்வம் வரும். செல்வத்தைப் பெற்றவர்கள் யாராக இருந்தாலும் அதைப் பாதுகாத்து வைப்பதால் பயன் இல்லை. பிறருக்கும் கொடுத்துத் தாமும் உண்ணவேண்டும். அதில்தான் உண்மையான இன்பம் இருக்கிறது. ஆதலால் நீ யாவருக்கும் கொடு. வாங்கும் இன்பத்தை நன்கு அறிந்த நமக்குக் கொடுக்கும் இன்பத்தையும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருக்கும்போது அதை விடலாமா?" என்றார்.

அவர் தாம் பட்ட வறுமையை மறந்தார். கிடைத்த செல்வத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உலோப குணம் அவரிடம் இல்லை. உயிர்களுக்கெல்லாம் அன்பு பாலிக்கும் உள்ளமுடையவர் அவர். நல்ல கவிதை பிறக்கும் உள்ளம் அல்லவா அது? அவருக்கு இந்தப் பொருள் பெரிது அன்று. இதை அவர் எப்போதும் போற்றிப் பாதுகாத்துச் சேமிப்பதற்குரியதென்று கருதவில்லை. அவருக்கும் வண்மைப் பண்பு இருந்தது.

தன் கணவர் கூறியதைக் கேட்ட அப்பெருமாட்டி அவ்வாறே செய்யத் தொடங்கினாள். வறிய நிலை மாறி வள நிலையில் இருந்த அந்த வீடு இப்போது வண்மை நிலையும் பெற்று விளங்கியது.

புலவர்கள் வறியவர்களாக இருந்ததற்குக் காரணமே இதுதான். அவர்களுக்குப் பொருள் கிடைக்காமல் இருப்பதில்லை. புலவர்களிடம் அன்பு பூண்ட புரவலர்கள் பலர் இருந்த தமிழ் நாட்டில் புலவர்களுக்கு வேண்டியவற்றை அவர்கள் நல்கிவந்தார்கள். தமக்குக் கிடைத்த பொருளை, இது பல நாளுக்கு இருக்க வேண்டும் என்று சேமித்து வைக்கும் இயல்பைப் புலவர்கள் அறிய மாட்டார்கள். எப்படிக் கிடைத்ததோ, அப்படிச் செலவிட்டு விடுவார்கள். துறவி கையில் கிடைத்த பொருளும் புலவர் கையில் கிடைத்த பொருளும் பலருக்குப் பயன்படும்.

இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த பெருஞ்சித்திரனார் தம் மனைகிழவோளுக்கு இத்தகைய அறிவுரையைச் சொன்னது வியப்புக்கு உரியது அன்று.

# 5. வெளிமானும் இளவெளிமானும்

எப்போதும் ஒருவனையே அண்டி இரந்து பொருள் பெற்று வாழ்வது முறையாகுமா? உலகத்தில் வள்ளல் ஒருவன்தானா? எல்லோரும் குமணனைப் போலப் பெருவள்ளலாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஓரளவு புலவர்களை ஆதரிக்கும் இயல்புடைய செல்வர்களும் குறுநில மன்னர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். அவர்களையும் பார்த்துப் பழக்கம் செய்துகொண்டால் என்ன?' என்ற எண்ணம் ஒரு நாள் பெருஞ்சித்திரனாருக்கு உண்டாயிற்று.

'நம்மிடம் இருப்பது தமிழ்; அவர்களிடம் இருப்பது செல்வம். அதை நமக்குக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நம் செல்வம் என்றும் குறை படாது. யார் தமிழ் நயம் தெரிந்து பழகுகிறார்களோ, யார் உள்ளங்கலந்து நட்புப் பூணுகிறார்களோ அத்தகையவர் சிலரைத் தெரிந்துகொண்டு அவர்களையும் பார்த்துப் பரிசில் பெறுவதில் தவறு இல்லை' என்று அவருடைய எண்ணம் படர்ந்தது. அது செயலாவதற்கு முன், பெருஞ்சித்திரனார் தம்மோடு பழகும் புலவர்களை விசாரித்தார். பறவைகளுக்குப் பழம் உள்ள மரங்கள் இன்ன இடத்தில் இருக்கின்றன என்று தெரியும்; புலவர்களுக்கும் புரவலர்கள் உள்ள இடம் தெரியும். அவர் அப்படி விசாரிக்கையில் வெளிமான் என்ற குறுநில மன்னனைப்பற்றித் தெரிந்துகொண்டார். அவன் குமணனைப் போன்ற செல்வனல்லாவிட்டாலும் புல

வர்களைப் போற்றி ஈயும் பண்புடையவன் என்று தெரிய வந்தது. அவன் ஊருக்குச் செல்லும் வழியையும் தெரிந்துகொண்டார்.

ஒரு நாள் பெருஞ்சித்திரனார் வெளிமானை நாடிப் புறப்பட்டார். அவனை அடைந்தபோது அவனும் மிக்க அன்புடன் வரவேற்றான். குமணனுக்கு வேண்டியவர் அவர் என்பதை அவன் தெரிந்துகொண்டிருந்தான். "அமுதத்தைச் சுவைத்தவர்கள் பிறிதொன்றை நாட மாட்டார்கள். குமணனை நண்பனாகப் பெற்றவர்கள் வேறு இடத்துக்குப் போவதில்லை. நீங்கள் கருணை கூர்ந்து என்னிடம் வந்தீர்கள். இதனால் எனக்குத்தான் பெருமை" என்று பணிவோடு சொன்னான். குமணனைக் காட்டிலும் முதியவன் வெளிமான். அவனுடைய நல்லியல்புகளை அறிந்து அவனோடு புலவர் பழகினார்; பாடினார்; பரிசிலும் பெற்றார். புலவருடைய பழக்கம் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதினான் வெளிமான். அவன் புலவருக்கு விடை கொடுத்து அனுப்பியபோது, "ஒன்று சொல்ல விரும்புகிறேன். தங்களிடத்தில் எனக்கு இருக்கும் அன்பைத் தாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அது ஒன்றையே கருதி இங்கே அடிக்கடி வந்து தங்களுடன் அளவளாவும் இன்பத்தை எனக்கு அளிக்க வேண்டும். நான் கொடுக்கும் சிறிய பொருளை நினைந்தால் தங்களுக்கு இங்கே வரத் தோன்றாது. இங்குள்ளவர்கள் யாவருமே தங்களிடம் அன்புடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல இயலாது. தமிழ் அருமை தெரியாத பலர் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் சில சமயம் தங்கள் மனத்துக்கு உவப்பல்லாத காரியங்களைச் செய்யலாம். அவற்றையெல்லாம் பொருட்

படுத்தாமல் என்னுடைய அன்பைக் கருதித் தாங்கள் வரவேண்டும்" என்று கூறினன். புலவர் மீட்டும் வருவதாகச் சொல்லி வந்தார். மறுபடியும் ஒரு முறை போனர்.

இடையில் சில காலம் செல்லாமல் பின்பு ஒரு முறை சென்றபோது அவன் உலக வாழ்வை நீத்து விட்டான். இந்தச் செய்தியை அவர் கேள்வியுற்று மிக்க துயரத்தை அடைந்தார். அடிக்கடி வந்து பழகலாம் என்ற நினைவுடன் வந்தவர், விதி வேறு விதமாக முடிவு கட்டியதை எண்ணி எண்ணி இரங்கினர். புலவர் பலரைப் பாதுகாக்கும் இயல்புடையவன் வெளிமானென்பதை உணர்ந்தவர் பெருஞ்சித்திரனர். அப்புலவர்களெல்லாம் அவனைக் காணமல், தம்மைப் பேணுவார் இன்றி வருந்துவார்களே என்பதை எண்ணித் துன்புற்றார். கண்ணீர்க் கடலிடைச் சுழன்று வருத்தப்படுவதைவிட இறந்து போவதே மேல் என்று அவர்கள் நினைத்தல் கூடும் என்ற எண்ணமும் வந்தது. *

வெளிமானுக்கு யாரேனும் மக்கள் இருக்கிறார்களா என்று விசாரித்தார். அவனுக்கு ஒரு தம்பி இருக்கிறானென்றும், அவனே இப்போது நாட்டை ஆளுகிறானென்றும் கேள்வியுற்றார். அவனையாவது பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று நினைத்தார்.

அப்படியே அரசன் மாளிகைக்குச் சென்று வெளிமான் தம்பியாகிய இளவெளிமானைக் காண முயன்றார். அங்கே இருந்தவர்கள் எளிதில் அவருக்கு வேண்டிய செய்திகளைச் சொல்லவில்லை. "இங்கே இருப்பவர்களிற் பலர் தமிழருமை அறியாதவர்கள்" என்று

* புறநானூறு, 238.

முன்பு வெளிமான் சொன்னதை அவர் நினைத்துக் கொண்டார். மற்ற நாட்களாக இருந்தால் அவர் பேசாமல் திரும்பி வந்திருப்பார். வெளிமான் இறந் தான் என்ற துயரத்தைத் தாங்கிய அவர் அவன் தம்பியைக் கண்டு பேசி ஆறுதல் பெறலாம் என்று எண்ணியே நின்றார். கடைசியில் இளவெளிமானைக் கண்டார்.

"தங்கள் தமையனாரோடு பழகியவன் நான். அவ ருடைய வண்மையை நன்கு உணர்ந்திருக்கிறேன்" என்று பேச்சைத் தொடங்கினார் பெருஞ்சித்திரனார்.

"இப்படித்தான் பல பேர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்" என்று கூறினான் இளவெளிமான்.

அப்படிச் சொன்னது அவனது அலட்சிய புத்தி யைப் புலப்படுத்தியது. புலவர் அவன் குரலில் இருக் கும் அன்பற்ற தன்மையைத் தெரிந்துகொண்டார். ஆனாலும், 'வந்தாயிற்று; பேசிவிட்டுப் போவோம்' என்று மேலும் பேசினார்.

"அவருடைய வள்ளன்மையை அறிந்த புலவர் பலர் அவரை அடைந்து பரிசில் பெற்றார்கள். அவரைக் காணலாம் என்ற ஆசையோடு வந்தேன். தம்மை நாடிய புலவர்களெல்லாரும் பொலிவு அழியும்படியாக, புகழுடம்பை நிறுத்திவிட்டு அவர் போய்விட்டார். அவரை இழந்த துயரம் தங்களுக்குப் பொறுத்தற்கரிய தாக இருக்கும்."

"அதை நினைத்துக்கொண்டிருந்தால் வாழ்வது எப்படி? போகிறவர்கள் போனால், இருக்கிறவர்களும் உடன் போய்விடுவார்களா? அவரவர்களுக்கு வாழ்வு, சுகம் எல்லாம் இல்லையா?" என்ற சொற்கள் இள வெளிமானிடமிருந்து வந்தன.

அவற்றில் அன்புப் பசை இல்லை; வருத்தமும் இல்லை. 'ஏன் இவனிடம் வந்தோம்!' என்று உள்ளுக்குள் வருந்தினர் புலவர்.

"அவரை அண்டிப் பரிசில் பெற்று வாழலாம் என்று புலவர்கள் இருந்தார்கள். அவர்களை அவர் அன்புடன் வரவேற்று உபசரித்தார். நான் வந்தபோது எத்தனை அன்பு காட்டினர்! அடிக்கடி வந்து பார்க்கலாம் என்ற ஆசையோடு இருந்தேன். அந்த ஆசையில் மண் விழுந்துவிட்டது. சோறு உண்ணலாம் என்று அடுப்பில் வைத்த பானையில் நெருப்புப் பற்றியதுபோல அவருடைய மறைவுச் செய்தியைக் கேட்கும் துர்ப்பாக்கியம் எங்களுக்கு உண்டாகிவிட்டது. சிறிதும் அறம் இல்லாத கூற்றுவன் முறையற்ற காரியத்தைச் செய்துவிட்டான்..........."

புலவர் பேசிக்கொண்டிருக்கும்போதே இளவெளிமான் எழுந்தான். உள்ளே சென்றான். சிறிதளவு பொருளை ஒரு கிழியில் வைத்துக் கொணர்ந்தான். "இந்தாருங்கள்; இதைப் பெற்றுக்கொள்ளுங்கள். என் தமையனரிடம் அன்புள்ளவர் என்று சொன்னீர்கள். அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். இதுதான் நான் அளிக்கக்கூடிய பரிசில்" என்று கொடுத்தான். புலவர் அதை வாங்கிப் பார்த்தார். கீழே வைத்தார். அவர் தலை நிமிர்ந்தது. வெளிமானுடைய பெருந்தன்மையையும் இவனுடைய சிறுமையையும் ஒப்பிட்டுப் பார்த்தார்.

'பரிசில் பெறுவதற்கு நாம் வந்ததாக எண்ணி இந்தச் சிறிய பொருளை நாய்க்கு இரை வீசுவதுபோல அன்பு இன்றிக் கொடுக்கிறனே!' என்ற கோபம்

அவருக்கு உண்டாயிற்று. அவனை நேரில் பார்த்துப் பேச விரும்பவில்லை. தம் நெஞ்சைப் பார்த்துப் பேசுபவரைப் போலச் சொல்லத் தொடங்கினார்.

"என் நெஞ்சமே! பசித்திருந்த காலத்தில் இங்கே வந்து பாடினேன். நான் பாடிய பாட்டு அந்த வள்ளலுடைய காதில் விழுந்தது. அது இன்பமாக விளைந்தது; கொடையாக விளைந்தது. இனியும் விளையும் என்று நச்சியிருந்தேன். அந்த ஆசை பழுதாகிவிட்டது. அறம் இல்லாத கூற்றம் முறையல்லாததைச் செய்யத் துணிந்துவிட்டது. பெண்கள் வருந்தவும் பரிசிலர் புலம்பவும் அவ்வீரன் போய் விட்டான். அவன் உயிரைக் கொண்டு போன யமன் பிழைத்துப் போகட்டும்! புலவர்கள் உலகில் வாழத்தான் போகிறார்கள். அவர்கள் புலியைப் போல மிடுக்கு உடையவர்கள். புலி களிற்றை அட்டு உண்ணும் வீரம் உடையது. களிறு கிடைக்காமற் போனால் எலியைப் பார்த்து அடிக்கும் சிறுமை அதற்குத் தெரியாது. நெஞ்சே! வா போகலாம். பள்ளம் உள்ள இடத்துக்குப் போகும் புனலைப்போல அன்பும் வண்மையும் உடைய இடத்துக்குப் போகலாம் வா" என்று அவர் சொல்லித் தம் கருத்தை ஒரு பாட்டாகவே பாடி விட்டார்.*

அதைக் கேட்ட இளவெளிமான் சிறிதாவது நாணத்தை அடையவில்லை. புலவர் கூறிய சொற்கள் அவன் உள்ளத்தைப் புண்படுத்தவில்லை. "நான் தந்த பரிசில் சிறிதென்று நீங்கள் நினைக்கிறீர்கள் போல் இருக்கிறது. இதுகூடக் கிடைக்காமல் வாடுகிறவர் பலர் இருக்கிறார்கள். இதைப் பெற்றுக்

*புறநானூறு, 237.

கொண்டு மிக்க மகிழ்ச்சியோடு செல்பவர்களும் இருக்கிறார்கள். எப்போதும் ஒரேமாதிரி கிடைக்கும் என்று எண்ணலாமா? அவ்வப்போது கிடைத்ததைப் பெற்றுக் கொண்டு போகவேண்டியதுதான்'' என்று அவன் சொன்னான்.

'அட பாவி! நீயும் வெளிமானுக்குத் தம்பியாகப் பிறந்தாயே!' என்று புலவர் மனத்துக்குள் வைதார். அவருக்குத் துயரமும் சினமும் பொங்கின. 'இவன் முன் வந்து நிற்கும்படி, போதாத காலம் நமக்கு வந்ததே!' என்று இரங்கினாலும், 'இவனுக்குப் புத்தி கற்பிக்கவேண்டும்' என்ற ஆத்திரமும் உண்டாயிற்று. மறுபடியும் நெஞ்சைப் பார்த்துச் சொல்வதாகப் பேசினார்; பாடினார். அந்த இழிகுணமுடையவனை விளித்துப் பேசக்கூட அவருக்கு மனம் வரவில்லை.

"நெஞ்சமே! புறப்படு. போவோம், பருகுவது போன்ற ஆர்வம் உடையவர்களிடம் பழகியிருக்கிறோம். அத்தகைய வேட்கையின்றி, அருகிலே வந்து அன்பை எதிர்பார்த்து நிற்கும்போதும் அறியாதவரைப் போல முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளத்தில் சிறிதும் அன்பு இல்லாமல் கொடுக்கும் பரிசிலைப் பெறும் சோம்பேறிகள் இல்லாமற் போகவில்லை; அப்படியும் சிலர் இருக்கிறார்கள். ஆனால் நாம் அந்த வகையைச் சேர்ந்தவர் அல்லோம். வா என்று அன்போடு அழைத்து உபசரிப்பவர்களிடம் போவோம். வரிசையறிந்து பேணுபவர்களைத் தேர்ந்து செல்வோம். உலகம் பெரிது. புலவர்களைப் போற்றிப் பேணுகிறவர்களும் பலர் இருக்கிறார்கள். இன்னும் அத்தகையவர்களுக்குப் பஞ்சம் உண்டாகவில்லை. சிங்கத்துக்குத் தன் காடு பிறன் காடு என்பது இல்லை. சிங்கத்தைப்

போலத் துள்ளிக் குதித்துக் கொண்டு வா, போவோம். இப்படி யெல்லாம் நடக்கிறதே என்று வருந்த வேண்டாம். தம்முடைய நிலை கண்டு சிறிதேனும் வருத்த மடையாதவன் முன் நின்று தம் மெலிவைக் காட்டிக் கொண்டு ஏங்கி நிற்பவர்களும் மனிதர்களா? தானே கனியாத பழத்தைத் தடிகொண்டா கனிய வைப்பார்கள்? அன்பில்லாதவர்களைச் சார்ந்து மனம் கலங்குபவர்களும் புலவர்களா? நமக்கு அவர்களைப்பற்றிக் கவலை இல்லை. வா, போவோம்." *

இப்படிச் சொல்லிவிட்டுத் திரும்பிக்கூடப் பாராமற் புறப்பட்டுவிட்டார் புலவர். இளவெளிமான் அவர் செய்கை கண்டு திகைப்படைந்தான். 'இரவலனுக்கு வந்த இறுமாப்பைப் பார்!' என்று நினைத்தாலும், பெருஞ்சித்திரனாருடைய பேச்சும், அதில் இருந்த வீரமும் அவனுக்கு அச்சத்தை உண்டாக்கின. முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"பெரிதே உலகம், பேணுநர் பலரே" *

என்று அவர் சொன்ன வார்த்தை அவன் காதில் இன்னும் ஒலித்துக்கொண்டே இருந்தது.

பெருஞ்சித்திரனார் தம் சினத்தைக் காட்டிவிட்டுப் புறப்பட்டுப் போனார். அவருக்குப் பல விதமான எண்ணங்கள் தோன்றின. 'வேம்பும் மாவும் ஓர் இடத்திலே வளர்வதுபோல வெளிமானைப் பெற்ற வயிற்றிலே இவனும் தோன்றியிருக்கிறான். செல்வத்தைப் படைத்துப் பாதுகாத்து வாழ்வதுதான் வாழ்வு என்று இவன் நினைத்திருக்கிறான் போலும்! புலவர்களுடைய

* புறநானூறு, 207.

அருமை தெரியாத விலங்காக அல்லவா இருக்கிறான்? பிச்சைக்காரனுக்குச் சொல்வதுபோல, பெருங்குடிப் பிறந்த மக்கள் சொல்ல அஞ்சும் வார்த்தைகளைச் சொல்கிறான். இவனுக்குப் புலவருடைய பெருமையையும் கொடுப்போருடைய பெருந்தன்மையையும் அறிவுறுத்த வேண்டும். இவன் அவற்றைத் தெரிந்து நாணிக் குலையவேண்டும்' என்று அவர் யோசனை படர்ந்தது. 'என்ன செய்தால் இவனுக்குப் புத்தி உண்டாகும்?' என்று சிந்தித்தார். அவருடைய அகக் கண்முன் குமணன் நின்றான். 'ஆம்! அந்தப் பெருமானைக் கொண்டே இதைச் சாதிக்கவேண்டும்' என்று திட்டமிட்டார்.

# 6. யானைப் பரிசில்

பெருஞ்சித்திரனார் வெளிமானூரை விட்டுப் புறப்பட்டவர் தம் ஊருக்குக்கூடப் போகவில்லை. நேரே குமணனது ஊரை அடைந்தார். அங்கே சென்றாலே அவருக்குப் புதிய ஊக்கம் உண்டாகும். அவரைக் கண்டவுடன் அன்போடு வரவேற்கும் கரங்கள் அங்கே இருந்தன. அன்பு கனியப் பார்க்கும் குளிர்ந்த கண்கள் இருந்தன. முன்மொழி புகன்று நயங்காட்டும் வாய்கள் இருந்தன. நல்ல நெஞ்சங்கள் இருந்தன. அதனால் முதிரத்தின் காற்றுப் படும் எல்லைக்குள்ளே வரும் போதே அவருக்கு உள்ளம் குளிர்ந்தது. உலகிலுள்ள எல்லா உயிர்களுமே அன்புக்காக ஏங்கி நிற்பவை. புலவர்களோ வரிசை அறிந்து பாராட்டி அன்பு செய்பவர்களுக்காக ஏங்கி நிற்பவர்கள். வரிசை அறியாதவர்களையும் அன்பு இல்லாதவர்களையும் காணும்போது அந்த ஏக்கம் அவர்களுக்கு அதிகமாகிறது. அந்த நிலையில் தான் இப்போது பெருஞ்சித்திரனார் இருந்தார்.

வழக்கம்போலக் குமணன் தாயைக் கண்ட குழந்தை போலக் களிக் கூத்தாடினான். "வீட்டில் யாவரும் சுகமாக இருக்கிறார்களா?" என்று கேட்டான்.

"மன்னர் பிரானுடைய அருளால் யாவரும் சுகந்தான்!" என்று விடையிறுத்தார் புலவர்.

பிரிந்தவர் கூடினார்கள்; பேசினார்கள். அன்பு பொங்கப் பொங்கப் பேசினார்கள். புலவர்களின் நிலையைப்பற்றியும், உத்தமமான கொடையாளிகளைப் பற்றியும் மாறி மாறிப் பேசினார்கள். விருந்துண்ணு

வது, புறத்தே சென்று இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறுவது, தமிழின்பம் நுகர்வது, மனங் கலந்து பேசி மகிழ்வது, குமணனைக் காண வரும் பிற புலவர்களோடு பேசிக் களிப்பது—இப்படியாக ஒவ்வொரு நாளும் பெருஞ்சித்திரனருக்கு இனிமையாகப் போய்க் கொண்டிருந்தது.

ஆயினும், இளவெளிமானுக்குச் சூடு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் புலவர் மனத்தில் இருந்துகொண்டே இருந்தது. குமண வள்ளலிடம் யானையைப் பெற்றுக்கொண்டு போய், "இதோ பார், நான் பெற்ற பரிசிலை" என்று அவனுக்குக் காட்ட வேண்டும் என்பது அவருடைய ஆசை. அதை நிறைவேற்றிக்கொள்ளும் செவ்வியை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் மாலை நேரத்தில் காலாரக் குமணனும் புலவரும் முதிரமலைப் பக்கத்திற்குச் சென்று உலாத்திக் கொண்டிருந்தார்கள். பேச்சுக்கு நடுவிலே கங்கை வந்தது. அது எந்தக் காலத்திலும் வற்றாமல் இருப்பது என்று குமணன் சொன்னான். புலவர் அது கேட்டு, "நான் அந்தக் கங்கையைக் கண்டதில்லை. ஆனால் என்றும் வற்றாத வேறு ஒரு கங்கையைக் கண்டிருக்கிறேன்" என்றார்.

"காவிரியைச் சொல்கிறீர்களோ?

"இல்லை; இல்லை. மேகங்கள் எல்லாம் சமுத்திரத்திலுள்ள தண்ணீரை முகந்துகொண்டு மலை முகடுகளிற் கூடி நிறைய மழை பெய்கின்றன, மாரிக் காலத்தில். கோடை வந்தால் அந்த மழை மாறி விடுகிறது. கதிரவன் தன் வெம்மைக் கதிர்களை வீச, மக்கள் வெப்பத்தால் நலிகிறார்கள். பல ஆறுகள் தண்

ணீர் இன்றி வறண்டு போகின்றன. அப்படி மழை மாறினாலும் பிற ஆறுகள் வறண்டு போனாலும் மக்கள் யாவரும் ஒருங்கே சென்று உண்ணும்படியாக இரு கரையையும் தொட்டுக்கொண்டு நீர் நிரம்பிச் செல்லும் கங்கையைப்போல—"

குமணன் அதுவரையில் புலவர் ஏதோ ஆற்றைச் சொல்லப் போகிறார் என்று எதிர்பார்த்தவன், கங்கையை உவமையாக்கி எதையோ சொல்ல வருகிறார் என்பதைத் தெரிந்துகொண்டான்.

"கங்கையைப் போல வேறு ஆறு ஒன்று இருக்கிறது என்று சொல்லப் போகிறீர்களா? அல்லது—" குமணன் பேச்சை முடிக்கவில்லை; புன்முறுவல் பூத்தான்.

புலவரும் புன்னகை செய்தபடியே கூறலானார். "ஆம்; நான் உயிரற்ற ஆற்றைச் சொல்ல வரவில்லை. ஆற்று நீரைவிட மக்களைக் காப்பாற்றும் நல்லவர் நீர்மை சிறந்தது. வள்ளல்களுடைய தண்ணளி இல்லாவிட்டால் உலகம் உய்யாது. கங்கை கோடையிலும் நிரம்பிச் சென்று பயன் தருவதுபோல, என்னைப் போன்ற புலவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேறு இடங்களில் எந்த விதமான உதவியும் கிடைக்காமல் இருந்தாலும், வேண்டியவற்றை எங்களுக்கு நிரம்பத் தரும் வள்ளன்மை இங்கே மன்னர் பெருமானிடம் இருக்கிறது."

"கடைசியில் கங்கையைப்பற்றிய பேச்சு இப்படி வந்துதான் முடிய வேண்டுமா?"

"கங்கையானாலும் எந்த ஆறானாலும் கடலிலே போய்ச் சேர வேண்டும். அப்படியே நாங்கள் எதைப் புகழ்ந்தாலும் அந்தப் புகழ் இங்கே வந்துதான் நிற்கும்."

"நீங்கள் பேசுவதைப் பார்த்தால் ஊருக்குப் போக அடிகோலுகிறதாக நினைக்கிறேன். உங்களுக்கு இப்போது என்ன குறை வந்துவிட்டது? திடீரென்று கங்கையை உவமையாக்கி என்னைப் புகழ்கிறீர்களே!"

"பைத்தியக்கார ஆசை ஒன்று என் நெஞ்சில் உதித்தது. அதைச் சொல்லலாமா, கூடாதா என்று அச்சம் தோன்றுகிறது."

"இவ்வளவு நாள் பழகியும் என்னிடம் சொல்வதற்கு என்ன தடை?"

"நான் எங்காவது சென்று தங்கினால் ஒரு வாரம் வரையில் என்னைப்பற்றி என் குடும்பத்தினர் அதிகமாகக் கவலைப்பட மாட்டார்கள். அதற்குப் பிறகு என் மனைவி ஒவ்வொரு நாளும் என் வரவை எதிர்நோக்கிக் கொண்டே இருப்பாள். வழிமேல் விழி வைத்துப் பார்த்து, வராவிட்டால் சிறிது சோர்வு அடைவாள்."

"இப்போதே புறப்பட்டுப் போகவேண்டும் என்று சொல்லப் போகிறீர்களா?"

"இல்லை; இல்லை. என் ஆசையை அல்லவா சொல்ல வந்தேன்? நான் இங்கிருந்து ஒவ்வொரு முறையும் பரிசுப் பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் கொண்டு போகும்போது அவள் மிக்க ஆர்வத்தோடு அவற்றைப் பார்த்துப் பிரமிப்பை அடைவாள்; மன்னர் பெருமானை நன்றியறிவுடன் வாழ்த்துவாள். இவ்விடத்துப் பழக்கம் எனக்கு ஏற்பட்ட பிறகு ஒரு முறைக்கு ஒரு முறை நான் கொண்டு செல்லும் பொருள்கள் மிகுதியாவதை அவள் கண்டு களிக்கிறாள். இத்தகைய பொருட் குவியல்களை அவள் எங்கே பார்த்திருக்கிறாள்? இந்த முறை நான் திரும்பிப் போகும்போது அவள் வியப்பி

னால் மூர்ச்சை போடும்படி ஒரு காரியம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்."

"ஆசை, ஆசை என்று சொல்கிறீர்களே அன்றி, இன்னது வேண்டும் என்று சொல்லவில்லையே!"

"சொல்கிறேன். நான் வரும் வழியை நோக்கி நோக்கிக் கண் மங்கிய அவள்முன் போய் நான் நிற்க வேண்டும். மன்னர்பிரான் வழங்கும் செல்வங்களோடு செல்வது மாத்திரம் அன்று; பனையைப் போன்ற துதிக்கையையும் முத்து உண்டாகும்படி முற்றிய தந்தத்தையும் மலையைப் போன்ற தோற்றத்தையும் உடைய யானையை முகபடாம் முதலியவற்ருல் அலங்காரம் செய்து, இருபுறமும் மணிகள் ஒலிக்க, நான் ஏறிச் செம்மாப்புடன் சென்று நிற்கவேண்டும்."

குமணன் அதைக் கேட்டு நகைத்தான்.

"இந்தப் புலவனுக்குள்ள பேராசை எவ்வளவு என்று எண்ணவேண்டாம். வறுமை யொன்றுதான் என்னிடம் உள்ள ஆற்றல். அது கழுத்தைப் பிடித்துத் தள்ள இங்கே வந்து அரசர்பிரானுடைய வள்ளன்மையைப் புகழ்ந்து பாடுகிறேன். கவிதையாற்றலில் நான் சிறந்தவனே, அல்லனே அறியேன். எப்படி இருந்தாலும் என்னுடைய திறமையை நோக்குவதானல் என் ஆசை பேராசையாகவே தோன்றும். ஆனல் ஒன்றை விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன். என் சிறுமையை மன்னர்பிரான் நினைக்கக்கூடாது. தம்முடைய பெருமையை நினைந்து அதற்கு ஏற்ற வகையில் அளிக்கலாம் அல்லவா? மற்றப் பொருள்களை எல்லோரும் வழங்குகிருர்கள். அவர்கள் அனைவரினும் மேம்பட்ட சிறப்பு உடையவர் முதிரமலைத் தலைவர் என்று புலவர்கள் பாடுகிருர்கள்.

ஆதலால் அந்தப் பெருமைக்கு ஏற்ற வகையில் மன்னர்பிரானது கொடை இருக்கவேண்டாமா? என்னை அளவிட்டு நோக்காமல் அரசர்பிரான் தம்மை அளவிட்டுப் பார்த்தால் நான் கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை என்பது புலப்படும்."

"இத்தனை பேச்சு எதற்கு? உங்களுக்குப் பேராசை என்று நான் சொன்னேனா? போயும் போயும் யானையைத்தானே கேட்கிறீர்கள்? இது ஒரு பெரிய பொருளா? என் நாட்டையே கேட்டாலும் கொடுத்து விடுவேனே! உங்கள் புலமையை அளவிட உங்களுக்குத் தகுதி இல்லை. உங்களுக்கு யானையின் மேல் ஆசை உண்டென்று தெரிந்திருந்தால் முன்பே தந்திருப்பேனே! அதைக் கொண்டு போய்க் கட்டிப் போட்டுத் தீனி போடவேண்டுமே! இப்போது உங்களுக்கு எத்தனை யானை வேண்டும்?"

"ஒன்றை நான் கொண்டு போய்க் காப்பாற்றினால் போதாதா?"

"அப்படியே தருகிறேன். அதைப் பாதுகாக்க ஆளும் பொருளும் தருகிறேன்."

புலவர் அதைக் கேட்டுப் பெற்ற மகிழ்ச்சியை அளவிட முடியுமா? 'யானை, அதற்கு ஆள், அதை வளர்க்கப் பொருள்! அடே அப்பா! வள்ளன்மையின் பெருமைதான் என்னே!' என்று வியந்தார்.

"நான் யானையின்மேல் போகும்போது கண்டவர்கள் யானை ஏது என்று கேட்பார்கள். நான் மன்னர்பிரான் வழங்கியதாகச் சொல்வேன். மற்றப் புலவர்களிடமும் சொல்வேன். எல்லோரும் சேர்ந்து மன்னர் பெருமானை வாழ்த்துவோம். அதுமட்டும் அன்று; மற்றொரு பயனும் உண்டு."

"என்ன அது?" என்று கேட்டான் குமணன்.

"புலவனுக்கு முதிரமலைத் தலைவர் யானை கொடுத்தார் என்ற செய்தி மற்ற அரசர் காதிலும் விழும். பணத்தைப் பூதம் போலக் காக்கின்ற வேந்தர்களும், புலவர்கள் வந்தால் பிச்சை யிடுவதுபோலச் சிறிது கொடுத்தனுப்புகிற அரசர்களும் இருக்கிறார்கள். அவர்க ளெல்லோரும் நாணும்படியாக நான் போவேன். 'குமண வள்ளல் யானை தந்தார்; அதைப் பெற்ற புலவர் அதோ போகிறார்' என்று நாலுபேர் மதிப்போடு சொல்லப் பெருமிதத்தோடு செல்வேன்."

குழந்தை உள்ளத்தோடு புலவர் பேசினார். அதைக் கேட்கக் கேட்கக் குமணன் மகிழ்ச்சி அடைந்தான். தன் குழந்தை அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்பதைத் தந்தை கேட்டு மகிழ்வதில்லையா?

"எப்போது புறப்பட எண்ணியிருக்கிறீர்கள்?"

"மன்னர்பிரான் மனமுவந்து விடை கொடுக்கும் போது."

"உங்களுக்கு வீட்டு நினைவு வந்துவிட்ட பிறகு உங்களை நிறுத்திவைப்பது பாவம். நீங்கள் நாளைக்கே யானையுடன் புறப்படலாம்."

புலவர் களி பொங்க நின்றார். தம் கருத்தை யெல்லாம் பாடல் வடிவத்தில் வடித்துச் சொன்னார்.*

மறுநாளே யானை ஒன்றை அலங்காரம் செய்து, அதன்மேல் புலவரை ஏற்றி, ஒரு பாகனையும் அனுப்பினான் குமணன். வழக்கப்படி பல வண்டிகளில் பரிசுப் பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் நிரப்பிப் பின் செல்லும்படி ஏற்பாடு செய்தான்.

*புறநானூறு, 161.

புலவர் யானையின்மேல் ஏறிக்கொண்டார். தாம் நினைந்தபடியே காரியம் நிறைவேறுவதை எண்ணி எண்ணி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார். யானை புறப் பட்டது. குமணன் அவர் தம்முடைய ஊருக்குச் செல்லுகிறார் என்றுதான் நினைத்தான்.

இளவெளிமானுக்கு முன்னே சென்று, தாம் யானைப் பரிசில் பெற்றதைச் சொல்லவேண்டும் என்பதே புலவருடைய அவா. ஆதலின் நேரே யானையை வெளிமானூர்க்கு ஓட்டச் சொன்னார். அதன் வழியாகவும் புலவருடைய ஊருக்குப் போகலாம்.

யானையும் வண்டிகளும் வெளிமானூர் எல்லையை அடைந்தவுடன் புலவர் வண்டிகளை அங்கே நிறுத் தச் சொன்னார். யானையை மாத்திரம் ஊருக்குள் ஓட்டிச் செல்லச் செய்தார். ஊரில் அரண்மனையைச் சார்ந்த ஓரிடத்தில் வெளிமான் பிறந்த குலத்தின ருக்கு உரிய காவல் மரம் நின்றது. தமிழ் நாட்டில் பழங்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் தங்கள் குலத் துக்கு அடையாளமாக மாலை, கொடி முதலியவற்றைத் தனித் தனியே வைத்திருந்தார்கள். அத்தகைய அடையாளங்களுள் ஒன்று காவல் மரம். கோயிலில் தலத்துக்குரிய மரம் இருப்பதுபோல அரச குலத்துக் குக் காவல் மரம் இருந்தது. அதை அரசர்கள் கண்ணைப்போலப் பாதுகாத்தார்கள். பகைவரோடு போர் புரியும்போது மன்னர்கள் அப்பகைவர்களுக் குரிய காவல் மரத்தை வெட்டிவிடுவார்கள். அதி லிருந்து போர் மூளுவதும் உண்டு. தோற்ற மன்னர் களுடைய காவல் மரத்தை வெட்டி வெற்றி முரசு செய்ய அதைப் பயன்படுத்திக்கொள்வது பழங்கால மன்னர்களுக்கு வழக்கமாக இருந்தது.

வெளிமானூரில் அந்நாட்டுச் சிற்றரசனுக்குரிய காவல் மரம் தக்க பாதுகாப்பில் இருந்தது. அதைச் சுற்றிக் காவலர் நின்றுகொண்டிருந்தனர். பெருஞ்சித்திரனார் யானையை ஓட்டிச் சென்று அந்தக் காவல் மரத்தில் கட்டும்படி செய்தார்; அவர் புலவராதலின் காவலாளர்கள் அவரைத் தடுக்கவில்லை. வெளிமான் வாழ்ந்திருந்த காலத்தில் அவர் அந்த ஊருக்கு வந்து பழகினவர் அல்லவா?

யானையைக் காவல் மரத்தில் கட்டிவிட்டு, பாகனை அங்கே நின்று பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார். அப்பால் அவர் நேரே அரசனுடைய மாளிகையிற் புகுந்தார். இளவெளிமான் ஓரிடத்தில் அமர்ந்திருந்தான். அவனைப் புலவர் அணுகினார்.

"நான் அளித்த பரிசில் வேண்டாம் என்று ஓடினீரே! மறுபடியும் ஏன் வந்தீர்? கிடைத்த மட்டும் லாபம் என்ற அறிவு இப்போது வந்துவிட்டதோ?" என்று அந்தப் பண்பிலி கேட்டான்.

புலவருக்கு வரும்போதே ஆத்திரம் இருந்தது. அவன் கூறியதைக் கேட்டவுடன் கோபம் மூண்டது.

"நான் உங்களிடம் பரிசில் வாங்க வரவில்லை. என்னைப் போன்றவர்களுக்கு உலகம் விரிந்திருக்கிறது, காப்பாற்றுவோர் பலர் இருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றேனே; அதை மெய்ப்பிக்க வந்திருக்கிறேன்" என்று அவர் சொன்னார்.

"உமக்கு இப்போது என்ன பாக்கியம் கிடைத்துவிட்டது?" என்று அவன் அலட்சியமாகக் கேட்டான்.

"உலகத்தில் புலமை பெற்ற எங்களைப்போன்ற இரவலர் பலர் இருக்கிறார்கள். அவர்களை வரவேற்று உபசரித்துப் போற்றும் புரவலர்களும் பலர் இருக்

கிறார்கள். ஆனால் நீங்கள் இரவலர்களைக் காப்பாற்றும் புரவலர் ஆகமாட்டீர்கள். உங்கள் உதவி இல்லாவிட்டால் புலவர்களைக் காப்பாற்றுவார் இல்லாமற் போகவில்லை. இப்போது, நல்ல வள்ளல்களிடம் சென்று வேண்டிய பொருளைக் கேட்கும் இரவலர் உலகத்தில் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்; அந்த இரவலர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் கொடையாளர் இருப்பதையும் அறிந்துகொள்ளுங்கள். நான் ஒரு பரிசில் பெற்று வந்திருக்கிறேன். அதை வந்து உங்கள் கண்ணால் பாருங்கள். உங்கள் காவல் மரம் தளரும்படி நான் பெற்ற பரிசிலாகிய நெடுநல் யானையை அதில் கட்டி விட்டு வந்திருக்கிறேன். அதை வந்து பார்த்த பிறகாவது இரவலருடைய பெருமையையும் புரவலருடைய இயல்பையும் தெரிந்துகொள்ளுங்கள். சரி, உங்களிடம் நின்று பேசுவதில் பயன் ஒன்றும் இல்லை. அரசரே! போய் வருகிறேன்" என்று சொல்லி ஒரு பாடல் எழுதிய ஓலையையும் அவனிடம் கொடுத்து விட்டு வேகமாய்த் திரும்பினார். தம் யானையைக் காவல் மரத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டு ஊர் எல்லையை அணுகி, அங்கிருந்த வண்டிகளுடன் புறப்பட்டு விரைவாக ஊர் போய்ச் சேர்ந்தார்.

இளவெளிமான் புலவர் மிடுக்குடன் பேசிவிட்டுச் சென்றதைக் கண்டு செயலிழந்து இருந்தான். அவருடைய நெஞ்சத் திண்மை அவனை அப்படி ஆக்கி விட்டது. அவர் வந்து படபடவென்று பேசிவிட்டுப் போனது ஒரு வேளை கனவாக இருக்குமோ என்று கூட அவனுக்கு ஐயம் உண்டாயிற்று. ஆயினும் பெருஞ்சித்திரனார் விட்டுச் சென்ற ஓலை முன்னே

கிடந்தது. அதை மெல்லக் கையில் எடுத்துப் படித்தான்.

*இரவலர் புரவலை நீயும் அல்லை:*
*புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;*
*இரவலர் உண்மையும் காண்இனி; இரவலர்க்கு*
*ஈவோர் உண்மையும் காண்இனி; நின்ஊர்க்*
*கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த*
*நெடுநல் யானைஎம் பரிசில்;*
*கடுமான் தோன்றல்! செல்வல் யானே.*

[நீயும் இரவலர்களாகிய புலவர் முதலியவர்களைப் பாதுகாக்கும் தன்மை உடையாய் அல்லை; இரவலர்களும் உன்னையன்றி வேறு புரவலர்கள் இல்லை என்று இருப்பவர்களும் அல்லர்; இப்போது இரவலர்கள் இருப்பதையும் பார்; இரவலர்க்கு ஈபவர்கள் இருப்பதையும் காண்பாயாக. உன் ஊரில் உள்ள காவல் மரத்தில் கொண்டு வந்து யாம் கட்டியிருக்கும் உயர்ந்த நல்ல யானை யாம் பெற்ற பரிசில்; விரைவான குதிரையுடைய அரசனே! நான் போகிறேன்.]

பாட்டைப் படிக்கப் படிக்க இளவெளிமானுக்குக் கோபமும், நாணமும், இரக்கமும் மாறி மாறி உண்டாயின. புலவருடைய பெருமைக்குமுன் மன்னன் பெருமை எம்மாத்திரம்? செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்புப் பெறுகிறவர்கள் புலவர்கள். அவர்கள் பெருமையை மன்னர்கள் அறிந்து போற்றினால் அவர்களால் புகழ் பெறுவார்கள். இல்லையானால் மணம் இல்லாத மலரைப்போல வாழ்வார்கள்.

இளவெளிமான் பின்பு, தன் காவல் மரத்தில் புலவர் யானையைக் கொண்டுவந்து கட்டியிருந்தார் என்ற செய்தியைக் காவலரும் கூறத் தெரிந்துகொண்டான்.

" நீங்கள் ஏன் அப்போதே வந்து சொல்லவில்லை ?" என்று கேட்டான். " பகையரசராக இருந்தால் உடனே வந்து சொல்லியிருப்போம். அதனை அணுகவே விடமாட்டோம். புலவர் பகைவர் அல்லவே! அவர் தவருக ஏதும் செய்யமாட்டார். அதனால் நாங்கள் ஒன்றும் செய்யவில்லை" என்றார்கள் அவர்கள்.

'இவர்களுக்குத் தெரிந்த அளவுகூட உனக்குத் தெரியவில்லையே! உன் அடி நிழலில் வாழும் இவர்களுக்கே புலவர்களிடம் மதிப்பு இருக்குமானால் உலகத்தில் மிகுதியான மதிப்பு இருப்பது என்ன வியப்பு? இதை நீ உணரவில்லையே!' என்று அவன் நெஞ்சம் குத்திக் காட்டியது.

ஊர் சென்ற பெருஞ்சித்திரனார் தம் மனைவியிடம் எல்லாக் கதையையும் சொன்னார். ஊரே அவர் தைரியத்தையும் பெருமையையும் அறிந்து பாராட்டியது.

பெருஞ்சித்திரனார் அடுத்த முறை குமணனிடம் சென்றபொழுது யானையைத் தாம் கேட்டதற்குக் காரணத்தையும், நடந்த நிகழ்ச்சியையும் சொல்லித் தாம் பாடிய பாடலையும் சொன்னார். "வீரமும் படைப் பலமும் உடைய மன்னர்களால் செய்ய இயலாத செயலை நீங்கள் செய்துவிட்டீர்கள். உங்களிடம் வாளையும் வேலையும் விட அஞ்சுவதற்குரிய கவிதை இருக்கிறது. அதனால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்" என்று குமணன் கொண்டாடினன்.

" கவிதை இருப்பதுமட்டும் போதாது. அதை அறிந்து சுவைத்துப் புலவரைப் புரக்கும் புரவலர்களும் இருப்பதனால்தான் எங்களுக்கு இத்தகைய வீரம் உண்டாகிறது" என்று சொல்லிப் புலவர் குறிப்பாகக் குமணனைப் புகழ்ந்தார்.

# 7. குமணன் அரசு துறத்தல்

குமணன் பெருஞ்சித்திரனரிடம் அன்பு பூண்டதுபோலவே வேறு பல புலவர்களையும் ஆதரித்தான். வர வர அவனைத் தேடி வரும் புலவர்கள் கூட்டம் அதிகமாயிற்று. அவர்களுக்கு வேண்டியவற்றை வாரி வாரி வழங்குவதில் அவ் வள்ளல் சிறிதும் சளைக்கவில்லை. புலவர்களுடன் பேசி இன்புறுவதும் விருந்து அருந்துவதும் பரிசில் வழங்கி விடை கொடுப்பதுமே அவனுடைய பொழுது போக்காக இருந்தன.

அரசனுக்கு நாடுகாவல் முதலிய கடமைகளும் உண்டு. அவற்றையும் கவனித்துச் செய்யாவிடின் பகைவர்கள் அவனை வீழ்த்துவதற்கு வேண்டிய சூழ்ச்சியைச் செய்வார்கள். குமணனுடைய நிலையும் அப்படி ஆயிற்று. ஆனல் அவனுக்குப் புறப் பகைவர் யாரும் இல்லை. அயல் வேந்தர்களும் அயல் நாடுகளில் உள்ளவர்களும் அவனிடம் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். புலவர்கள் பரப்பிய புகழ் அவர்கள் காதில் விழுந்து அத்தகைய மதிப்பை உண்டுபண்ணியது.

ஆனல் அவனுடைய சொந்தத் தம்பிக்கு அவன் செய்வது பிடிக்கவில்லை. புலவர்களுக்குக் கொடுத்துக் கொடுத்துக் குமணன் ஓட்டாண்டி யாகிவிடுவான் என்று அவன் அஞ்சினன். 'இன்னும் சில காலத்தில் இவன் தன் நாட்டை விற்றுக் கொடுக்க வேண்டியது தான். வரும் புலவர்களுக்கு யானையையும் குதிரையையும் நெல்லையும் பொன்னையும் கொடுத்துக் கொண்

டிருந்தால், எவ்வளவு வருவாயுள்ள நாடாக இருந் தாலும் ஒரு நாள் வரவு வற்றிப் போய்விடும். அப்படி வந்தால் இவன் எப்படியாவது வாழ்வான்; அல்லது மானம் கருதித் தற்கொலை செய்துகொண்டாலும் செய்துகொள்வான். இவனோடு சேர்ந்து நாமும் துன்புற வேண்டியிருக்கும். அதற்குமுன் நாம் அறுத் துக்கொண்டு போவதே நலம்' என்ற எண்ணம் அவ னிடம் வன்மையாக உண்டாயிற்று.

அண்ணனிடம் பணிவாக நடந்துகொண்டிருந்த வன் எதிர்த்துப் பேசத் தொடங்கினான். அவன் செய்யும் ஒவ்வொரு செயலையும் தடுத்தான். அரண் மனைக்கு வரும் புலவர்களிடம் கடுகடுவென்று நடந்து கொண்டான்.

குமணனுக்கு அவன் ஒருவன்தான் தம்பி. யாவ ரும் அவனை இளங் குமணன் என்று வழங்கி வந்த னர். நாளுக்கு நாள் அவனுடைய முரண்பாடு மிகுதி யாகி வந்தது. அதைக் குமணன் கவனித்தான். அவனுக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று.

"இப்படியே வாரி இறைத்துக்கொண்டிருந்தால் எல்லாவற்றையும் இழந்துவிட்டு நீயும் ஒரு நாள் புல வனைப்போல நாலு தமிழ்ப் பாட்டைப் பாடிக்கொண்டு யாரிடமாவது போய் இரந்து வாழ வேண்டியதுதான். உன்னைச் சார்ந்தவர்களெல்லாம் ஆலாய்ப் பறப்பார் கள்" என்று அவன் நேரிலே தன் தமையனைக் கண்டிக்கத் தொடங்கினான்.

"தமிழ்ச்சாதி கொடையிலும் வீரத்திலும் இணை யற்ற சாதி, அப்பா. இந்த நாட்டில் மன்னர் குலத் தில் பிறந்து செல்வமும் பெற்று வாழ்வது அச் செல் வத்தை நாமே துய்ப்பதற்காக மாத்திரம் அன்று. இல்

வாழ்பவன் யாராக இருந்தாலும் செல்விருந்து ஓம்பி வரு விருந்து பார்த்திருக்கும் இயல்புடையவனாக இருக்கவேண்டும். செல்வனாக இருந்தால் செழுங்கிளை தாங்கி விருந்தினர்களைப் பேணி அறம் செய்ய வேண்டும். மன்னராகப் பிறந்துவிட்டாலோ ஆலமரம் பல பறவைகளுக்கு இடமும் உணவும் கொடுப்பதுபோலச் சுற்றத்தாரையும், விருந்தினர்களையும், புலவர்களையும், பாணர் கூத்தர் ஆகியவர்களையும் பாதுகாக்க வேண்டும். அவர்களை ஆதரிப்பதனால் நாம் கெட்டுப் போக மாட்டோம். ஒருகால் நம் செல்வம் குறைய, வறுமை வந்தாலும் அந்த வறுமையை நாம் வரவேற்க வேண்டும். ஒருவருக்கும் கொடுக்காமல் சேமித்துவைத்து வாழும் செல்வத்தைவிடப் பிறருக்குக் கொடுத்து உண்டாகும் வறுமை சிறந்தது."

"இந்த அறிவுரைகள் எல்லாம் கேட்பதற்கு நன்றாக இருக்கின்றன. இவற்றையே புலவர்கள் பாட்டாகப் பாடி உன்னைப் போன்றவர்களை ஏமாற்றுகிறார்கள். உண்மையில் அவர்கள் பாட்டாக உனக்கு ஓதியதைத்தான் இப்போது பேச்சாக என்னிடம் சொல்கிறாய். அரசன் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறாய். ஆனால் அதற்கு ஓர் அளவு இல்லையா? அரசன் தன் நாட்டைப் பாதுகாக்க வேண்டாமா? சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திரம் எழுதவேண்டும்? பொழுது விடிந்து பொழுது சாய்கிற மட்டும் புலவர்களோடு இருந்து பேசிப் பேசிக் கழித்துவிட்டால் நாடு வளம் சுரக்குமா? பகைவர்கள் சும்மா இருப்பார்களா? இவன் கையாலாகாதவன் என்று கருதிச் சமயம் பார்த்து நம் நாட்டைக் கைப்பற்றுவதற்குரிய சூழ்ச்சியைச் செய்ய மாட்டார்களா? அவர்கள் ஒருநாள்

திடீரென்று படையெடுத்து முற்றுகையிட்டால் இந்தப் புலவர்கள் ஏட்டையும் எழுத்தாணியையும் ஏந்திக் கொண்டு நமக்குப் போரில் வெற்றி வாங்கித் தரப் போர்க்களம் புகுவார்களா?"

இளங்குமணன் தன் வாதத்தை வளர்த்துக் கொண்டே போனான். குமணன் எதிர் பேசவில்லை. அவன் சொல்வனவற்றில் நியாயம் இருக்கிறதா, இல்லையா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவில்லை. 'கொடையையும் புலவரையும் இவன் விரும்பவில்லை. நம்மையும் விரும்பவில்லை' என்பது ஒன்றையே அவன் சிந்தித்தான். 'இனி இவன் நம்முடன் மனம் பொருந்தி வாழமாட்டான்' என்பதையும் தெரிந்துகொண்டான்.

"உனக்கு உள்ள கவலைகளை நான் ஒருவாறு உணர்ந்தேன். என்னுடைய செயல்கள் உன் மனத்துக்குப் பொருந்தவில்லை என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. நான் வறியவனாகிவிட்டால் நீயும் வறுமையால் வாட நேரும் என்ற அச்சம் உனக்கு உண்டாவது இயல்புதான். நான் எப்படிப் போனாலும் என்னைப்பற்றிய கவலை உனக்கு வேண்டியதில்லை. நீ சுகமாக வாழ வழி வகுக்கிறேன்" என்று குமணன் சொன்னான். அவன் தன் மனத்தில் ஏதோ ஒன்று செய்ய முடிவு கட்டினான்.

"என்ன வழி வகுக்கப் போகிறாய்? என்னையும் பாட்டுப் பாடும் புலவனாக்கிவிடலாம் என்ற எண்ணமோ?" என்று சொல்லித் தன் இகழ்ச்சி தோன்றச் சிரித்தான் இளங்குமணன்.

"புலவர்கள் என்றால் உனக்கு ஏன் அப்பா அவ்வளவு இழிவாக இருக்கிறது? மன்னர்களுடைய

புகழை நிலைநிறுத்தும் பெருமையுடையவர்கள் அவர்கள். இது உனக்குத் தெரியவில்லையே! அது கிடக்கட்டும். நீ என்னுடன் பிறந்தவன். நான் கெட்டுப் போவேன், அதோடு உனக்கும் கேடு வரும் என்ற அச்சம் உனக்குத் தோன்றியிருக்கிறது. நீ வறுமையை அடையாமல் உன்னைப் பாதுகாத்துக்கொண்டால் போதும் என்று நினைக்கிறேன். அதற்கு ஏற்ற வழி ஒன்று செய்ய எண்ணுகிறேன்."

"என்ன வழி?" என்று பரபரப்புடன் கேட்டான் இளங்குமணன்.

"உன்னைத் தனியாக வாழும்படி வகை செய்கிறேன்."

"புலவர்களுக்கு அவ்வப்போது பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்புவது போல எனக்கும் கொடுத்துத் தனியே இருக்கும்படி செய்யலாம் என்ற எண்ணமோ?"

"அதற்குள் அவசரப்படுகிறாயே! நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை நாளைக்குத் தெளிவாகச் சொல்கிறேன்" என்று அன்றைப் பேச்சைக் குமணன் அதனோடு நிறுத்தினான்.

அன்று இரவு முழுவதும் குமணனுக்குத் தூக்கமே வரவில்லை. சில காலமாகத் தன் தம்பி தன்னிடத்தில் மனம் மேவாமல் இருக்கிறான் என்பதை அவன் தெரிந்துகொண்டிருந்தான். இப்போது நேருக்கு நேரே அவன் தன் வெறுப்பைக் காட்டிக்கொண்டுவிட்டான். 'அவனை என்ன செய்வது? ஒறுப்பதா? தமையன் தன் தம்பிக்குத் தீங்கு இழைத்தான் என்று உலகம் பழிக்காதா? தான் சுகமாக வாழ வேண்டுமென்று அவன் விரும்புகிறான். அப்படி விரும்பும் உரிமை அவனுக்கு

உண்டு. அவன் அப்படியே வாழட்டும். நம்முடைய நாடு விரிந்தது. இதில் ஒரு பகுதியை அவனுக்கு வழங்கி, அவன் விருப்பப்படியே வாழும்படி செய்துவிட லாம். தந்தையின் நிலபுலன்களை மக்கள் பிரித்துக் கொண்டு வாழ்வதில்லையா? அதுபோல இதுவும் இருக்கட்டுமே!' என்று தீர்மானம் செய்தான்.

மறு நாள் இளங்குமணனிடம் முதிரத்துத் தலை வன் தன் கருத்தை வெளியிட்டான். அதை அவன் எதிர்பார்க்கவில்லை. சிறிது நேரம் அவனும் யோசித் தான். "இப்படிச் செய்ய அமைச்சர்களும் சான்றோர் களும் ஒப்புக்கொள்வார்களா?" என்று கேட்டான்.

"அவர்களை உடன்படும்படி நான் செய்கிறேன். இந்த நாட்டை நான் ஒருவனே ஆள்வதைவிட இரண்டு பேர் பிரித்துக்கொண்டு ஆள்வது நல்லது தானே?" என்று குமணன் கூறினான்.

அன்றுமுதல் நாட்டைப் பிரித்துத் தன் தம்பிக்கு ஒரு பகுதி வழங்கும் வேலையில் ஈடுபட்டான் குமணன். இளங்குமணன் தன் கட்சி வென்றதை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். இன்னபடி யெல்லாம் வாழ வேண்டும் என்று மனத்தில் கோட்டை கட்டினான்.

**நா**டு இரண்டாயிற்று. குமணன் ஒரு பகுதியை யும், அவன் தம்பி இளங்குமணன் மற்றொரு பகுதியை யும் ஆளத் தொடங்கினர். குமணனது அரண்மனையில் புலவர்கள் வழக்கம்போல் வந்து பரிசில் பெற்றுச் சென்றார்கள். இளங்குமணனோ தானும் தன் மனைவி மக்களும் எவ்வளவு மிகுதியான இன்பத்தை நுகர லாமோ அவ்வளவும் நுகர முயன்றான். புலவர்களுக்கு அவனிடம் வேலை இல்லை. தமிழ் நாட்டில் எங்கும்

இல்லாதபடி குமணன் தன் நாட்டைத் தம்பிக்குப் பிரித்துக் கொடுத்தான் என்ற செய்தி பரவி அவ்வள்ளலுடைய பெருமையை மிகுதியாக்கியது.

தனியாகப் பிரிந்து அரசனாக வாழ்ந்த இளங்குமணனுக்கு மண்ணாசை மிகுதியாயிற்று. தான் பெற்ற நாடு போதாதென்று எண்ணினான். தன் தமையனுடைய நாட்டையும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற பொல்லாத எண்ணம் அவன் மனத்தில் முளைத்தது. குமணனும் அவனும் ஒன்றாக வாழ்ந்தபோது அவனுக்கு இருந்த அச்சம் இப்போது மாறியிருக்கும் என்றுதான் குமணன் நினைத்தான். அதற்கு மாறாக இளங்குமணன் இருந்தான். 'குமணன் மக்கள் இன்றி இறந்தால் இந்த நாடு முழுவதையும் ஆளும் உரிமை எனக்குத்தானே கிடைக்கும்? இப்போது எனக்குக் கிடைத்திருப்பது ஒரு பகுதிதானே?" என்று நினைக்கும் அளவுக்குத் தம்பி மாறிவிட்டான் என்பதை அண்ணன் உணர்ந்து கொள்ளவில்லை.

இளங்குமணன் தன் அண்ணனுடைய நாட்டையும் எப்படிப் பறிக்கலாம் என்று யோசித்துப் பார்த்தான்; 'கேட்டு வாங்க முடியாது. தன்னிடம் நாடு இருந்தால்தான் புலவர்களுக்கு விருப்பப்படி அவன் பொருளை வீச முடியும். அவன் நாடு வைத்திருப்பது இதற்காகத்தான். அவன் ஈகையை நிறுத்தவும் மாட்டான். அதற்கு ஏற்ற செல்வ வருவாயையுடைய நாட்டைத் தரவும் மாட்டான். வஞ்சகத்தினாலோ, போரினாலோ அந்த நாட்டை வௌவிக்கொள்வதுதான் வழி' என்று தெளிந்தான். 'என்ன செய்வது? எப்படிச் செய்வது?' என்று ஆலோசனை செய்தான். அவனுக்கு

ஏற்ற அமைச்சர்கள் இருக்கமாட்டார்களா? அவர்களோடும் சேர்ந்து சூழ்ச்சி செய்தான்.

"உங்கள் தமையனுர் இப்போதும் தம்முடைய கொடையை நிறுத்தவில்லை. இப்படியே இருந்தால் ஏதேனும் ஒரு நாள் நாட்டையே விற்றுவிட வேண்டியதுதான்" என்ருன் ஓர் அமைச்சன்.

"நான் அதை முன்பே எதிர்பார்த்தேன். என் கருத்தை வெளிப்படையாகவும் அவனிடம் சொன்னேன்" என்ருன் இளங்குமணன்.

"வேற்று நாட்டு மன்னன் அவருக்குப் படைப் பலம் ஒன்றும் இல்லாமல் இருப்பதை அறிந்தால் அவரை எதிர்த்துப் போர் செய்ய முயன்ருலும் முயலலாம்" என்று வேறு ஓர் அமைச்சன் சொன்னுன்.

"அதையும் நான் முன்பே அவனுக்குச் சொல்லியிருக்கிறேன்" என்று இளங்குமணன் கூறினுன்; "அப்படி வேறு ஒருவன் படை எடுத்து வந்து கைக்கொள்ளும் அந்த நாட்டை நாமே கைப்பற்றினுல் என்ன என்றுதான் எண்ணமிடுகிறேன். எப்படியும் அவன் தன் நாட்டைத் தொலைத்துவிடப் போகிருன். அது வேறு யாருக்காவது போவதைவிட உரிமையுள்ள எனக்கு வருவது முறை அல்லவா? வேறு அரசன் படையெடுத்து வந்து போரிட்டு நாட்டைத் தன்னுடையதாக்கிக் கொண்டால் அவன் எதிர்க்கப் போவதில்லை. அதற்குரிய வலிமை அவனிடம் இல்லை. அயலான் நாளைக்குச் செய்கிற காரியத்தை நாம் இன்றே செய்தால் என்ன என்று யோசிக்கிறேன்" என்று அவன் மீண்டும் கூறினுன்.

"அப்படிச் செய்வது நல்லதுதான். ஆனுல் அதற்கு ஏற்ற வகையில் நாம் நம்முடைய படைப்

பலத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்" என்று அமைச்சன் ஒருவன் சொன்னான்.

"ஆம்; அதுவே தக்க வழி" என்று முடிவு செய்தார்கள்.

அன்று முதல் இளங்குமணன் படை கூட்டினான். இவன் எந்த நாட்டின்மேல் படையெடுக்கப் போகிறான்?' என்று மக்கள் எண்ணமிட்டார்கள். அவர்களுக்கு அவனுடைய தீய நினைவு தெரியவில்லை. போதிய படைகள் சேர்ந்துவிட்டன என்று தெரிந்துகொண்டபோது, 'இனி நம் சூழ்ச்சியை நிறைவேற்றப் புகவேண்டும்' என்ற ஆசை இளங்குமணன் உள்ளத்தில் இடம் கொண்டது. படையைப் பெருக்கிய அரசனும் ஆயுதம் பிடித்த வீரனும் இரும்பு பிடித்த கையும் சும்மா அமைதியாக இருக்குமா?

குமணனுக்கு தன் தம்பி செய்து வரும் சூழ்ச்சி எள்ளளவும் தெரியாது. தம்பி படை சேர்க்கிறான் என்ற செய்தியை யாரோ அவன் காதில் போட்டார்கள். "புதிய நாடு ஆதலால், யாரேனும் வந்து தாக்குவார்கள் என்ற அச்சம் இருக்கலாம். அதனால் பாதுகாப்பின் பொருட்டுச் சேர்க்கிறான் போலும்" என்று அந்த நல்லோன் கூறினான்.

ஒரு நாள் திடீரென்று இளங் குமணனிடமிருந்து ஓலை ஒன்று வந்தது. "உங்கள் நாட்டின்மேல் நாம் படையெடுப்பதாக முடிவு கட்டியிருக்கிறோம். நாட்டை நம்மிடம் விட்டுவிட்டால் போர் செய்ய வேண்டிய அவசியம் இராது. இல்லையானால் போரிட்டுக் கைப்பற்றத் துணிந்தோம்" என்ற அறைகூவலைத் தாங்கி வந்தது அது. அதைப் பார்த்தான் குமணன். 'தம்பியா இதனை அனுப்பியிருக்கிறான் ?' என்று அவ

தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்? இதை அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. சற்றே யோசித்துப் பார்த்தான். இளங்குமணன் கொண்ட மண்ணாசை அவன் மன இயல்புக்கு ஏற்றபடியே வளர்ந்து விட்டதை ஒருவாறு உணர முடிந்தது. ஓலையை மறு படியும் வாசித்தான். அவன் அறிவு சுழன்றது. தலையில் கைவைத்து யோசித்தான்.

'போர்! என் தம்பி என்னைப் போருக்கு அழைக்கிறான்! இந்தா. உனக்கு என் நாட்டைப் பிரித்துக் கொடுக்கிறேன் என்று சொல்லித் தனியே வாழ வைத்த என்னோடு போர் தொடுக்கத் துணிந்திருக்கிறான். அட மண்ணாசையே! அப்பொழுதே நாடு முழுவதும் வேண்டுமென்று கேட்டிருக்கலாமே! ஒரேயடியாகக் கொடுத்திருப்பேனே! இப்போது, அண்ணனும் தம்பியும் போர்க்களத்தில் நின்று உலகம் கைகொட்டிச் சிரிக்கப் போரிடவேண்டும் என்று அவன் விரும்புகிறான். இந்தக் குலத்தின் பெருமை எங்கே! இந்த நினைவு எங்கே! அண்ணனும் தம்பியும் போர்க்களத்தில் சந்தித்து உலகையே அழிவுப் பாதையில் செலுத்திய கதைதான் இன்று பாரதமாக வளர்ந்திருக்கிறதே! அது போதாதென்று மற்றொரு குட்டிப் பாரதப் போரை நிகழ்த்த வேண்டுமென்று இவன் எண்ணுகிறானா? அந்தப் பழைய பாரதத்தைப் பாட ஒரு வியாசர் இருந்தார். இந்தப் போரை யாரும் புகழமாட்டார்கள். அண்ணன் தம்பிகளுக்குள் சண்டையா என்று காறித் துப்புவார்கள். இதுகாறும் புகழில் வளர்ந்து வந்த இந்தக் குலத்துக்கே மாசு உண்டாகிவிடும். அவன் இளமை மிடுக்கில் இப்படிச் செய்யத் துணிந்தான் என்றால், நாமும் அது சரியென்று போர் செய்யப்

புகுவதா? அவன் உள்ளத்தில் பெரும் புயல் அடித்தது. உலகமே அவன் அகக் கண் முன்னே சுழன்றது. 'வேறு அரசன் இப்படி ஓலை அனுப்பியிருந்தால், நம் அமைச்சர்களையும் சான்றோர்களையும் படைத் தலைவர்களையும் கூட்டி என்ன செய்வது என்று யோசனை செய்யலாம். இந்த வெட்கக் கேட்டை யாரிடம் சொல்வது? என் தம்பி போருக்கு வரப் போகிறான், வாருங்கள் எல்லோரும்; அவனை எதிர்த்து அழிக்கலாம் என்று திட்டமிடுவதா? என்னுடன் பிறந்தவனை நானே அழிப்பதா!' அவன் உடம்பு சற்றே குலுங்கியது. அப்படி நினைக்கவே அவன் அஞ்சினான்.

'அவனை வென்று நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு ஓட்டிவிடலாம் என்று சிலர் சொல்லக் கூடும். நானே கொடுத்த நாட்டை நானே மீண்டும் பெற்றுக்கொள்வதா? கொடுத்ததை வாங்கும் இழிவான செயலை இதுவரையில் நான் செய்ததில்லை. இரந்தவர்களுக்கு எதிரே இல்லை என்று சொல்வதை விட அது மிகவும் இழிந்த செயல்.' அவன் தன் தம்பிக்காக இரங்கினான்; பின்பு சினங் கொண்டான். 'போர் செய்வதா, இல்லையா?' என்ற கேள்வி அவன் உள்ளத்தைக் கொக்கி போட்டு இழுத்தது.

'போர் செய்தால் ஒன்று வெல்ல வேண்டும்; அல்லது தோல்வியுறவேண்டும். வென்றால் கொடுத்ததை மீட்டும் பெற்ற பாவம் வரும்; தோற்றால் பழி உண்டாகும். வென்றாலும் பாவம், தோற்றாலும் பழி என்பது உறுதியானால் ஏன் போர் செய்யவேண்டும்?' இப்படி அவனுடைய சிந்தனை திரும்பியது. நீர்ச் சுழியிலே சிக்கிச் சுழலும் துரும்பு போல உள்ளம் சுழன்று தடுமாறியது.

அவன் நன்றாக வாழவேண்டுமென்று விரும்பினான்; அந்த விருப்பத்தை அறிந்து நாமே அவனுக்கு நாட்டின் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுத்தோம். இப்போது, இந்த நாடு முழுவதையும் அவன் ஆள வேண்டும் என்று விரும்புகிறான். அந்த விருப்பத்தையும் நிறைவேற்றிவிட்டால் ஒரு தொல்லையும் இல்லையே! அவன் போர் செய்து வெல்வதானால் அவனுக்கும் பழிதான் உண்டாகும். அவனுக்கு நாடு முழுவதையும் நல்கிவிட்டால் போரால் விளையும் தீங்கினின்றும் இரு நாட்டினரும் உய்வதோடு, நமக்கும் புகழ் உண்டாகும்.'

இந்த எண்ணம் அவனுடைய மயக்கத்திலே ஓரளவு தெளிவை உண்டாக்கியது. அந்தக் கருத்தையே உறுதி செய்துகொண்டான். தன் தம்பிக்கு அவன் மறுமொழி எழுதியனுப்பினான். "போர் செய்வது எதற்கு? உனக்கு நாடு முழுவதும் வேண்டும் என்றால் நீயே எடுத்துக்கொள். நமக்குள் போர் உண்டானால் யார் வென்றாலும் யார் தோற்றாலும் உலகம் பழிக்கும். இந்த நாட்டை நீ ஆண்டால் என்ன? நான் ஆண்டால் என்ன? இரண்டும் எனக்கு ஒன்றுதான்" என்று ஓலை எழுதி ஒரு தூதுவனிடம் கொடுத்தனுப்பினான்.

ஓலை இளங் குமணனை அடைந்தது. அவன் அதைப் பார்த்தான். அவனுக்கு ஒரு வகையில் ஏமாற்றம் உண்டாயிற்று. 'இவ்வளவு முயன்று நாம் ஒரு படையைச் சேர்த்தோமே! அதற்கு வேலை இல்லாமல் போய்விடும்போல் இருக்கிறதே!' என்ற ஏமாற்றந்தான் அது. தன்னுடைய அமைச்சர்களை

அழைத்து வைத்துக்கொண்டு மேலே செய்யவேண்டியதைப்பற்றி ஆராய்ந்தான்.

"இதில் சூழ்ச்சி ஒன்றும் இராதே?" என்று கேட்டான் ஓர் அமைச்சன்.

"அவனுக்குச் சூழ்ச்சியே தெரியாது" என்று இளங்குமணன் சொன்னான்.

"அப்படியானால் அவர் எங்கே இருப்பார்?"

"நம் அரண்மனையில் அவனும் இருக்கிறான். அவனுக்குச் சோறு போடுவதனால் நமக்குக் குறைந்து விடுமா?" என்று இளங்குமணன் சொன்னான்.

"அவர் நல்லவராக இருந்தாலும் அவரைச் சேர்ந்தவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். அவரை உடன் வைத்துக்கொள்வது எப்போதும் தீங்கு பயக்கும்" என்று ஒருவன் கூறினான்.

"பின்னே என்ன செய்யலாம்?"-யாவரும் சேர்ந்து ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன் விளைவாக மற்றோர் ஓலை குமணனுக்குச் சென்றது.

"நாட்டை நம்மிடம் ஒப்பித்துவிடுவதாக எழுதியதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் குமணனுக்கு நாட்டில் எந்த விதமான உரிமையும் இராது. நமக்கு அடிமையாய் வாழ வேண்டும். இல்லையானால் நாட்டைவிட்டு ஓடிவிடவேண்டும்" என்பது ஓலையின் வாசகம். என்ன கொடுமையான உள்ளம்!

குமணன் அந்த ஓலையைக் கண்டு திடுக்கிடவில்லை. இளங்குமணனுடைய போக்கை அவன் தெளிவாக உணர்ந்துகொண்டான். 'நாட்டை அவனிடம் கொடுத்துவிட்டு அவன் போடும் சோற்றை உண்டு வாழ்வதைவிடக் காட்டிற்குப் போய்க் கனி கிழங்குகளை உண்டு உயிர் வாழலாம். இறைவனைத் தியானித்துத்

தவம் புரியலாம்' என்ற நெறியில் அந்தக் குண மலையின் உள்ளம் எண்ணமிட்டது. 'இனி நமக்குத் துறவியைப் போன்ற வாழ்க்கையே தக்கதென்று இறைவனே நியமித்திருக்கிருன். அரசனுகப் பிறந் தமையால் பொருளும் இன்பமும் நமக்கு உரிமையாக இருந்தன. பொருளைக் கொண்டு அறம் செய்தோம். இனி வீட்டு நெறிக்கு வேண்டியதைச் செய்யவேண் டும் என்பது இறைவனது திருவுள்ளம்போலும்!' என்று நினைந்து அமைதி பெற்ருன். அரசைத் துறப்ப தற்கு ஆயத்தமானுன்.

இந்தச் செய்தியைக் கேட்ட மக்கள் உள்ளம் குலைந் தனர். இராமரைக் காட்டுக்கு ஓட்டிய கைகேயியிடம் அயோத்திவாசிகளுக்கு உண்டானது போன்ற கோபம் இளங்குமணனிடம் மூண்டது. "என் தம்பி நாட்டை ஆளும் திறத்தில் சிறந்தவன். அவன் உங்களையெல் லாம் நன்ருகப் பாதுகாப்பான். நான் அவனுக்கு நாட் டைக் கொடுத்துச் செல்வதனுல் உண்டாகும் பயன் நீடிக்க வேண்டுமானுல் என்னிடம் நீங்கள் காட்டும் அன்பை அவனிடமும் காட்ட வேண்டும். ஒரு குளத் தில் பூத்தவர்கள் நாங்கள். எங்களுக்குள் வேறுபாடு இல்லை. ஆகையால், எனக்கு விடை கொடுங்கள்" என்று குமணன் வேண்டிக்கொண்டான். அதைக் கேட்டுக் கல் மனமும் உருகியது. மகளிர் இரங்கினர். குழந்தைகளும் அழுதன.

குமணன் நாடு துறந்து காட்டுக்குப் போய்விட் டான். இளங்குமணன் போரின்றியே நாடு முழுவதை யும் தனதாக்கிக்கொண்டு ஆட்சி புரியலானுன்.

# 8. வாள் தந்த வளம்

இளங் குமணன் தன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டான். நாடு முழுவதும் இப்போது அவனுடையது ஆகிவிட்டது. நாட்டில் உள்ள மக்கள் அவனை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவன் அவர்களை ஆளும் உரிமையைப் பெற்றுவிட்டான். அவனுடைய போக்குக்கு ஏற்பப் பேசி அவன் தீய எண்ணங்களுக்கு உரமூட்டித் துணை நிற்கும் நண்பர் பலர் சேர்ந்தனர். புலவர்கள் ஒவ்வொரு நாளும் வந்து அளவளாவியதால் எப்போதும் தமிழ் ஓசை கேட்ட அந்த அரண்மனையில் இப்போது தமிழ்ப் புலவர்களின் காட்சி அரிதாகிவிட்டது.

மக்கள் அவனுடைய இழிகுணத்தை எண்ணி வெறுத்தனர். அவன் உண்டு, அவனுடைய நண்பர்கள் உண்டு; அவர்களோடு பேசிப் பேசிக் காலம் கழித்தான். எங்கும் போவதில்லை.

அவனும் அவன் நண்பர்களும் பேச என்ன இருக்கிறது? நல்ல செயல்களைப்பற்றி எண்ணும் உள்ளங்களானால் எத்தனையோ நினைக்கலாம்; செய்யலாம். கொடுமனக் கசடருக்குத் தோன்றுவன யாவும் பிறருக்குத் தீங்கு உண்டாக்கும் நினைவாகவே இருக்கும்.

அவர்கள் கூடிக்கூடிப் பேசினார்கள். "என்னுடைய அண்ணன் காட்டில் இருக்கிறானே; அவன் மறுபடியும் நாட்டுக்கு வந்து ஆட்சியைப் பெற முயன்றாலும் முயலலாமோ?"—இப்படி ஓர் ஐய வினாவை இளங்குமணன் எழுப்பினான்.

"ஆசை யாரை விட்டது? அப்படிச் செய்யவும் கூடும்" என்று அவனுடைய நண்பன் ஒருவன் கூறினன்.

"தானே எல்லாவற்றையும் கொடுத்து விட்டுப் போனவன், திரும்பி வர எண்ணுவதற்கு இடம் இல்லை" என்ருன் இளங்குமணன்.

"அப்படி எண்ணக்கூடாது. அந்தச் சமயத்தில் அவரிடம் போதிய படை இல்லை. போரிட்டால் நிச்சயமாகத் தோல்வி உண்டாகும் என்பதைத் தெரிந்துகொண்டார். போரில் ஒருகால் தாம் உயிர் இழந்தாலும் இழக்கலாம் என்ற அச்சமும் உண்டாகியிருக்கும். அதனால் தாமே வலியக் கொடுத்துவிட்டார். நெடுநாள் ஆட்சி புரிந்த பற்று விடுமா? காட்டில் இருந்தபடியே சூழ்ச்சி செய்து வேறு மன்னன் யாருடனாவது சேர்ந்துகொண்டு இந்த நாட்டின் மேற் படையெடுத்து வந்தாலும் வரலாம்."—இப்படி ஒருவன் சொன்னான்.

அதைக் கேட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தான் இளங் குமணன்.

"அப்படியும் நடக்கலாம். அதற்கு ஏற்ற பாதுகாப்பை நாம் செய்துகொள்ளத்தான் வேண்டும்" என்று அவன் தெரிவித்ததை மற்ற நண்பர்கள் ஆதரித்தார்கள்.

"இந்த நாடு முழுவதும் தங்களுக்கு உரியதாகி விட்ட பிறகு படையைப்பற்றிய கவனம் நமக்குக் குறைந்துவிட்டது. மீட்டும் நம் படைப்பலத்தை மிகுதியாக்கி, எந்தச் சமயத்தில் யார் எதிர்த்தாலும் போரிட ஆயத்தமாக இருக்க வேண்டும். நாட்டின் ஒரு பகுதியை ஆண்டபோதே, தங்கள் தமையனார்

கண்டு அஞ்சும் படையைக் குவிக்க முடிந்தது. நாடு முழுவதும் நம் கைவசப்பட்ட இப்போது முயன்ருல் எளிதில் பெரிய படையைச் சேர்த்துவிடலாம். நம்முடைய அரண்களையும் பலப்படுத்த வேண்டும்" என்பது ஒருவனுடைய யோசனை.

"இவ்வளவு காரியத்தையும் விரைவாகச் செய்ய முடியாது. சில காலமாவது ஆகும். இந்த நாட்டில் உள்ளவர்கள் பழைய ஒட்டுறவை இன்னும் மறக்கவில்லை. அண்ணனிடம் வைத்திருக்கும் பாசம் போவதற்கு இன்னும் சில காலம் ஆகும். ஆதலின், படையைப் பெருக்குவது, அரண்களை வலியுறச் செய்வது என்ற பெரிய காரியங்களைச் செய்யாமலே ஏதாவது குறுக்கு வழியைக் கண்டுபிடித்தால் நலமாக இருக்கும்" என்று மற்ருெருவன் சொன்ஞன்.

"குறுக்கு வழி என்ன இருக்கிறது? என் அண்ணன் இறந்தொழிந்தால்தான் இத்தகைய அச்சத்துக்கு இடம் இல்லாமல் போகும். அவனைத் தொலைப்பதற்கு வழி ஏதாவது இருந்தால் கவனிக்கலாம்" என்று வன்கண்ணணுகிய இளங்குமணன் கூறியபோது அவனுடைய நண்பர்களே சிறிது நடுங்கிஞர்கள்.

மறுபடியும் நெடு நேரம் யோசித்தார்கள். "நாம் நம் கையால் கொல்வதைவிட யாரையாவது கொல்லும்படி ஏவலாம்" என்ற முடிவுக்கு வந்தான் அந்தக் கொடுங்கோலன்.

"யார் அதைச் செய்வார்கள்? அவரைத் தீய எண்ணத்தோடு அணுகும் துணிவு யாருக்கும் வராது" என்று ஒருவன் கூறிஞன்.

"ஏன் வராது? பணம் என்ருல் பிணமும் வாய் திறக்கும். அவனுடைய தலையைக் கொண்டு வருகிற

வர்களுக்கு நூறாயிரம் பொன், கோடி பொன் என்று கொடுப்பதாக இருந்தால் நாளைக்கே நம் காலில் அவன் தலை வந்து உருளும்" என்று இளங் குமணன் சொன்னான்.

அந்தப் பேய்ச் சபையில், குமணன் தலையைக் கொணர்பவருக்கு நூறாயிரம் பொன் கொடுப்பதென்று தீர்மானமாயிற்று. இந்தச் செய்தியைத் தூதுவர்கள் மூலம் பரப்புவதென்றும் முடிவு செய்தனர்.

செய்தி பரவியது. மக்கள் துடித்தனர். "அவன் தலையைக் கேட்கும் இந்தப் பாவியின் தலையை உருளச் செய்வோம்" என்று கோபத்தால் குதித்தனர் பலர். படை வீரர்களைக் கொண்டு அத்தகையவர்களை அடக்கினான் இளங் குமணன். நல்லோர், 'இனி இங்கே இருப்பது தகாது' என்று எண்ணி வேற்று நாட்டுக்குப் போய் வாழத் தலைப்பட்டனர். 'மாபாவி! அசுரன்! பேய்! கொலைகாரன்!' என்ற விருதுப் பெயர்களை மக்கள் தம் மன்னனுக்குச் சூட்டினர்.

காட்டில் குமணன் துறவு வாழ்க்கை வாழ்ந்தான். அங்கும் அவனைப் பார்க்க மக்கள் வந்தனர். புலவர்களும் வந்தார்கள். செல்வர் அவனை அறியாமலே அவனுக்கு வேண்டிய பொருள்களை வைத்துச் சென்றனர். தனக்கு நாடாட்சி இல்லாமற் போய்விட்டதே என்று அவன் வருந்தவில்லை. நல்ல உணவு உண்டு பஞ்சணையில் படுத்து உறங்கவில்லையே என்றும் கவலைப்படவில்லை. புலவர்களோடு பழகி அவர்களுக்குத் தக்க வண்ணம் பரிசில் வழங்கி இன்பமுற வழியில்லையே என்றுதான் அவன் வருந்தினான்.

யாரேனும் புலவர்கள் வருவார்கள். பெருஞ் சித்திரனார் தேடி வந்து பேசிச் சென்றார். புலவர் களைக் காணும்போதெல்லாம் அவர்களுடன் பேசி இன்புறுவதைக் காட்டிலும், 'இவர்களுக்கு ஒன்றும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோமே!' என்ற வருத்தமே மிகுதியாக உண்டாகும். அந்த நிலையிலும் தன்னிடம் ஏதாவது இருந்தால் அதை வற்புறுத்திப் புலவர்களிடம் கொடுத்துவிடுவான்.

நாட்டிலுள்ள மக்களிற் சிலர் அவனிடம் வந்து அழுதார்கள். இளங் குமணன் தமக்கு ஏதேனும் தீங்கு புரிவான் என்ற அச்சத்தால் அவர்கள் வரு வதை நிறுத்திக்கொண்டார்கள். ஒரு நாள் அங்கே வந்த ஒருவர், குமணன் தலையைக் கொண்டு வருபவர் களுக்குப் பரிசு தருவதாக இளங் குமணன் அறிவித் திருக்கும் செய்தியைச் சொல்லி, "இந்த மாபாவி இன் னும் வாழ்கிறானே! கடவுள் இதையும் பார்த்துக்கொண் டிருக்கிறாரே! அறம் இருக்கிறதா, செத்துப் போய் விட்டதா?" என்று புலம்பினார்.

குமணன் அதைக் கேட்டு வருந்தவில்லை. அவன் வரவரத் துறவுள்ளம் பெற்று வந்தான். "அப்படியா சொல்லியிருக்கிறான்? அதுவும் நல்லதுதான். இந்த உடம்பு எதற்கும் உதவாதது என்று பெரியவர்கள் சொல்வார்கள். இதில் ஓர் உறுப்பாகிய என் தலைக்கு விலை கொடுப்பதாகச் சொல்லுகிறானா? நல்லது. இந்தத் தலை ஒரு வறியனுடைய துன்பத்தைப் போக்குமானால், அவன் சொன்னதைப் பாராட்டு கிறேன். இறைவன் திருவருளாணையின்படியே எல் லாம் நடக்கும்" என்று அமைதியாகப் பேசினான் அவன்.

சோழ நாட்டில் ஆவூர் என்பது ஓரூர். அங்கே மூலங்கிழார் என்ற தமிழ்ப்புலவர் ஒருவர் வாழ்ந்தார். அவருடைய புதல்வராகிய பெருந்தலைச் சாத்தனார் என்பவரும் தமிழ்ப் புலமை உடையவரே. அவருடைய இயற்பெயர் சாத்தனார் என்பது. அவர் தலை சற்றே பெரிதாக இருந்தமையால் பெருந்தலைச் சாத்தனார் என்று அவரை வழங்கி வந்தனர். அவருடைய தந்தையார் இறந்துவிட்டார். சாத்தனாருக்குப் பெரிய குடும்பம். குடும்பத்தில் உள்ளவர்களைக் காப்பாற்ற இயலாமல் திண்டாடினார். வறுமைப் பிணியால் அவர் பட்ட வேதனை சொல்லும் தரம் அன்று.

அவர் எங்கே போனாலும் அவருடைய துரதிருஷ்டம் தொடர்ந்து சென்றது. கோடைக்கானலில் கடிய நெடுவேட்டுவன் என்ற ஒரு செல்வன் வாழ்ந்தான். அவனிடம் போய் ஏதாவது பெற்று வரலாம் என்று சாத்தனார் போனார். அவனை எளிதிலே காண முடியவில்லை. கண்டும் உடனே பரிசில் பெற இயலவில்லை. பல காலம் காத்திருந்த பிறகே அவன் கொடுத்ததைப் பெற்று வந்தார். கடற்கரையிலுள்ள ஊர் ஒன்றில் மூவன் என்ற உபகாரி வாழ்ந்திருந்தான். புலவர்களுக்கு உதவி புரிகிறவன் அவன் என்பதைக் கேள்வியுற்றார் பெருந்தலைச் சாத்தனார். அவன் நல்லவன்தான். ஆனாலும் அவர் சென்ற வேளை சரியாக இல்லை. அவனிடம் பரிசில் கிடைக்க நெடுங்காலம் ஆயிற்று. தம்முடைய கோபத்தைக் காட்டிப் பாடிய பிறகே அந்தப் பரிசிலும் கிடைத்தது.† மறுபடியும் அவர்களிடம் போக மனம் வருமா? மானம் உள்ளவ

* புறநானூறு, 205. † புறநானூறு, 209.

ராகையால் மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் என்று இருந்துவிட்டார்.

மானத்துக்கு முதல் பகை வறுமை என்பதை அவர் தம் வாழ்க்கையில் உணர்ந்தார். வறுமை மறுபடியும் அவரை முடுக்கித் துரத்தியது. எங்கே போவது? குமணன் புலவர்களை மதித்துக் கொடுப்பவன் என்று யாரோ சொன்னார்கள். சொன்னவருக்குக் குமணன் இப்போது எந்த நிலையில் இருக்கிறான் என்ற செய்தி தெரியாது. சோழ நாட்டளவும் இன்னும் குமணனுடைய காட்டு வாழ்க்கையைப் பற்றிய செய்தி எட்டவில்லை.

பெருந்தலைச் சாத்தனார் கொங்கு நாட்டை நோக்கிப் புறப்பட்டார். குமணனது நாட்டை அடைவதற்கு முன்பே அவன் காட்டில் மறைந்து வாழ்கிறான் என்று கேள்வியுற்றார். அவர் மனநிலை எப்படி இருக்கும்! 'நம்முடைய ஊழ்வினையை நொந்துகொள்ளாமல் யாரை நோவது?' என்று வருந்தினார். 'இவ்வளவு தூரம் வந்துவிட்டோமே. அவனைப் பார்த்துவிட்டாவது போகலாம். அவனைப் பெரிய வள்ளல் என்று பல பேர் சொன்னார்களே. அவன் காட்டில் வாழ்ந்தாலும் அங்கும் சில பொருள்களை வைத்திருந்தால் தானே வாழ முடியும்? நான் போய்க் கேட்கிறேன். நல்லவர்களிடம் எத்தனை கெஞ்சிக் கேட்டாலும் தவறு இல்லை. அவன் கொடுப்பதைக் கொடுக்கட்டும்; பெற்று வரலாம்' என்று ஒரு நினைவு அவருக்கு உண்டாயிற்று. அவர் எவ்வளவோ இடங்களுக்குப் போய்ப் போய்ச் சலிப்படைந்தவர். இங்கும் சென்று பார்த்துவிடலாம் என்று எண்ணினார். 'ஒன்றும் இல்லை என்று சொல்லக்கூடும். அப்போது, போன

படியே வெறுங்கையோடே திரும்பி வந்துவிடலாம். அப்படி வருவது நமக்குப் புதிதல்லவே!' என்று மனத்துக்குள் ஆறுதல் செய்துகொண்டார்.

எப்படியோ குமணன் இருந்த காட்டைக் கண்டு பிடித்து அவன் இருந்த இடத்தை அடைந்தார். அரண்மனையில் வாழ்ந்தவன் சிறு குடிசையில் வாழ்ந்தான். அவனைக் கண்டு வணங்கினார் புலவர். "நான் ஆவூர் மூலங்கிழாருடைய மகன்; சாத்தன் என்று பெயர்" என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். ஆவூர் மூலங்கிழாரைப்பற்றிக் குமணன் கேள்வியுற்றிருந்தான். "அப்படியா? நான் உங்களைப் பார்த்ததில்லை. நான் காட்டில் வாழ்ந்தாலும் தமிழ்த் தாய் எனக்கு அருள் செய்வதை மறக்கவில்லை. உங்களைப் போன்ற புலவர்களை அவ்வப்போது அனுப்புகிறாள்" என்றான்.

"தங்களைக் காணவேண்டுமென்று முதிரத்துக்குப் போனேன். தாங்கள் இங்கிருப்பதாகத் தெரிந்து இங்கே ஓடி வந்தேன். என் துரதிருஷ்டம் எங்கே போனாலும் என்னைத் துரத்தி வருகிறது. தங்களை முன்பே பார்த்துப் பழகியிருந்தால் என் கலி தீர்ந்திருக்கும். என்ன செய்வது? அவரவர்களுக்குக் கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்?"

"நீங்கள் இவ்வளவு தூரம் வருந்துவதைக் கண்டால் உங்களுக்கு ஏதோ துன்பம் இருப்பதாகத் தோன்றுகிறது" என்று அன்புடன் குமணன் கூறவே, புலவருக்கு அடக்க முடியாத் துயரம் உண்டாகிவிட்டது தம்முடைய வறுமை நிலையைச் சொல்ல அது ஏற்ற சமயமா என்பதை நினைத்துப் பார்க்கக்கூட அவரால் முடியவில்லை. கீழே விழுந்த குழந்தையைத் தாய் தேற்ற

வந்தால் ஓவென்று அழுவதுபோல, அவர் தம் வறுமையைப்பற்றிக் கூறிப் புலம்பத் தொடங்கிவிட்டார்.

"எனக்கு ஏதோ துன்பம் இருப்பதாகத் தாங்கள் உய்த்துணர்ந்து சொன்னீர்கள். துன்பம் என்பதற்கு ஒரு வடிவம் உண்டென்றால் அது நான்தான். ஒன்றா, இரண்டா, பல பல துன்பங்கள்."

"அவ்வளவு தூரம் சோர்வடையாதீர்கள். உலகில் பிறந்தவர்கள் துன்பம் அடைவது இயற்கை. அதற்காக மனம் தளரலாமா? அப்படி என்ன துன்பம் வந்துவிட்டது உங்களுக்கு?"

"அப்படிக் கேளுங்கள்; சொல்கிறேன். என் குடிசையில் அடுப்பு மூட்டி எத்தனையோ நாட்கள் ஆயின. போட்ட அன்று எப்படி இருந்ததோ, அப்படியே அது தேயாமல் இருக்கிறது. அதன் மேல் பாத்திரங்களை ஏற்றி இறக்கினால்தானே தேயும்? அதற்குள் நெருப்புக் கொழுந்துவிட்டு எரியவில்லை. காளான் முளைத்திருக்கிறது. என் மனைவி எலும்பும் தோலுமாய் இருக்கிறாள். போதாக் குறைக்கு ஒரு குழந்தை வேறு. அதற்குப் பால் கொடுக்க அவள் உடம்பில் என்ன இருக்கிறது? குழந்தை பசியால் அழ அழ அவளால் பொறுக்க முடியவில்லை. அவளுக்கும் துயரம் பொங்குகிறது; அழுகிறாள். இந்த அவல வாழ்க்கையில் எத்தனை நாளைக்குத் திண்டாடுகிறது? தங்களைப் பார்த்துவிட்டுக் கிடைத்ததைப் பெற்றுப் போகலாம் என்று வந்தேன். என்னுடைய நிலையை அப்படியே எடுத்துச் சொல்வது அரிது. தங்களை வற்புறுத்தி எதையாவது பெற்றுப் போனாலன்றி எனக்கு ஆறுதல் உண்டாகாது."*

* புறநானூறு, 164.

பெருந்தலைச் சாத்தனார் கண்ணை அவருடைய வறுமை திரைபோட்டு மறைத்தது. இல்லையானால் குமணன் இருந்த நிலை கண்டும் இப்படிச் சொல்லத் துணிவாரா?

குமணன், புலவர் அறியாமையுடையவர் என்று எள்ளி நகைக்கவில்லை. அவருடைய வறுமை அவரை எத்தகைய பாடு படுத்துகிறதென்பதை உணர்ந்தான். 'இவருக்கு ஒன்றும் கொடுக்க முடியாமல் இருப்பதை விட உயிரையே துறந்துவிடலாம்' என்றே அவனுக்குத் தோன்றியது.

"புலவர் பெருமானே, உங்கள் நிலையைக் கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். இப்படிச் சொல்வதனால் உங்கள் வறுமை எள்ளளவும் குறையப் போவதில்லை. நான் என்ன செய்வேன்! நாட்டை இழந்தது பெரிய துன்பமாக எனக்குத் தோன்றவில்லை. என்னிடம் ஒரு புலவர் வந்து ஒன்றும் பெறாமல் போவது இருக்கிறதே, அதைக் காட்டிலும் கடுமையான துன்பமே இல்லை. அப்படிச் செல்லுவதைப் பார்த்துக் கொண்டு வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா?" குமணன் சற்றுப் பேச்சை நிறுத்தினான். அவன் உள்ளம் வேதனையினால் சாம்பியது. கண்ணில் நீர் முட்டியது. சற்றே திரும்பித் துடைத்துக்கொண்டான். சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு கனைத்துக் கொண்டான்.

"நான் ஒன்று சொல்கிறேன். அதைத் தாங்கள் செய்தால் நல்ல பயன் கிடைக்கும். என் நாட்டை விட்டு வந்தபோது என் உடம்பையும் உடையையும் உடன்கொண்டு வந்தேன். அந்த உடையோடு இதோ இந்த வாளையும் கொண்டுவந்தேன். இது ஒன்றுதான்

இப்போது என் கையில் உள்ள பொருள். காட்டுவாழ்க் கையில் பாதுகாப்புக்காக இருக்கட்டும் என்று கொண்டு வந்தேன். இதைத் தருகிறேன். இதைக் கொண்டு நீங்கள் பெரிய ஊதியத்தைப் பெற வழி இருக்கிறது" என்று சொல்லித் தன் உடைவாளை உறையினின்றும் உருவி நீட்டினான்.

"நான் இதைக் கொண்டு போய் என்ன செய் வேன்? இதை விற்றால் என்ன விலை தருவார்கள் என்று எனக்குத் தெரியாதே!" என்றார் புலவர்.

"இதை வாங்கிக்கொள்ளுங்கள். நான் வழி சொல் லுகிறேன். ஆனால் நீங்கள் நான் சொல்லுகிறபடி செய்யவேண்டும். அதனால் உங்களுக்கும் நன்மை உண்டு. எனக்கும் இப்போது இருக்கும் அவலநிலை நீங்கும்."

குமணன் எதை நினைந்து இப்படிச் சொல்கிறான் என்று புலவருக்கு விளங்கவில்லை. அந்த வாளைக் கையில் வாங்கிக்கொண்டார்.

"என் தம்பி ஒரு வாக்குக் கொடுத்திருக்கிறான். அவன் சொன்னதைச் செய்பவர்களுக்கு நூறாயிரம் பொன் கொடுப்பதாக உறுதி மொழி அளித்திருக் கிறான். நீங்கள் அந்தப் பரிசைப் பெறலாம். அவன் சொன்னபடி செய்வீர்களா?"

பெருந்தலைச் சாத்தனாருக்கு அந்தச் செய்தி தெரி யாது. ஆதலால் ஒன்றும் விளங்காமல் விழித்தார்.

"என் தலையைக் கொண்டு வருகிறவருக்கு நூறா யிரம் பொன் தருவதாகச் சொல்லியிருக்கிறான் என் தம்பி. இந்த வாளினால் என் தலையைக் கொய்து சென்று அவனிடம் காட்டுங்கள். உங்களுக்குக்

கிடைக்கும் பொன் பல காலத்துக்கு வறுமையைத் தலை காட்டாமல் அடித்துவிடும்."

"என்ன!" என்று இடி விழுந்தவரைப் போலக் கூவினார் புலவர்.

"உங்களுக்கு இந்தச் செய்தி தெரியாதா? அல்லது இதைச் செய்யக்கூடாது என்று எண்ணுகிறீர்களா? என் நாற்ற உடம்பில் ஒரு பகுதியினால் ஒரு புலவர் சுகப்படப் போகிறார் என்ற திருப்தியோடு நான் உயிர் விடுவேன். ஆதலால், நீங்கள் தயங்கவேண்டாம். நான் சொன்னபடி செய்யுங்கள்."

புலவருக்குக் கண்ணிலிருந்து நீர் வழிந்தது. "மன்னர்பிரானே, போதும் உங்கள் பரிசுப் பேச்சு. என்னைக் கொலைகாரனுக்குவது கிடக்கட்டும். அப்படி ஒரு கொடுஞ் செயல் நிகழ்ந்தால் கடல் கரையை உடைத்துக்கொண்டு உலகையே விழுங்கிவிடாதா? பூமி வெடித்துப் போகாதா?" அவர் அழத் தொடங்கி விட்டார். குமணனுக்கும் ஒன்றும் தோன்றவில்லை; பேசவும் இயலவில்லை.

சிறிது நேரம் ஆயிற்று. புலவர் நிமிர்ந்தார். அவர் மனத்துக்குள் ஏதோ ஒன்று செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தோற்றியது.

"சரி; இந்த வாளைப் பயன்படுத்திக்கொள்ள எனக்குத் தெரியும். ஆனால் வெறும் வாள் போதாது. அந்த உறையையும் தாருங்கள்" என்று கேட்டார் பெருஞ்~~சித்திரனார்.~~

ஏனென்று கேளாமல் அறத்தின் உருவாகிய அண்ணல் அதை அவிழ்த்து அளித்தான்.

"கடவுள் தங்களைக் காப்பாற்றட்டும். தாங்கள் செய்த தர்மம் தங்கள் தலையைக் காக்கும் என்ற துணி

வுடன் விடை பெற்றுக்கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, வாளை உறையில் போட்டு எடுத்துக் கொண்டு அங்கிருந்து விரைவாகப் புறப்பட்டார் சாத்தனார். அவர் ஏன் அப்படி விரைந்து போகிறார் என்பதைக் குமணனால் தெரிந்துகொள்ள முடிய வில்லை.

சாத்தனார் முதிரத்துக்குப் போனார். இளங் குமணனைப் பார்க்க வேண்டுமென்று வாளை மறைத்துக்கொண்டு போனார். ''அரசனிடம் மிகவும் இரகசியமான செய்தியைச் சொல்லவேண்டும்'' என்று காவலரிடம் சொல்லி அரண்மனைக்குள் புகுந்தார். ஒரு காவலன் அவரை இளங் குமணனுக்கு முன் கொண்டு போய் நிறுத்தினான்.

''நீர் யார்? எங்கே வந்தீர்?'' என்று கேட்டான் அரசன்.

புலவர் விடையொன்றும் சொல்லாமல் மறைத்து வைத்திருந்த வாளை உறையோடு எடுத்தார். ''இதைப் பாருங்கள்; இது யாருடையதென்று தெரிகிறதா?'' என்று அதைக் காட்டிக் கேட்டார்.

இளங் குமணன் அதைக் கூர்ந்து நோக்கினான். குமணனுடைய வாள்! ''அண்ணாவின் வாளா?'' என்று கேட்டான்.

''ஆம்!'' என்று புலவர் கூறக் கேட்டவுடனே அவன், ''அவனைக் கொன்றுவிட்டீரா?'' என்று கூவி னான். அவன் உள்ளத்திற்குள் மறைந்திருந்த பாசம் வெடித்துக்கொண்டு கிளம்பியது. புலவர் சற்று வேடிக்கை பார்க்கவேண்டுமென்று பேசாமல் நின்றார்.

''என் அண்ணாவைக் கொன்று இதை எடுத்துக் கொண்டு வந்தீரா? ஐயோ தெய்வமே! இப்படியா

ஆயிற்று? அண்ணு.... அண்ணு.... என் அண்ணு.... கடைசியில் என்னுல் உன் உயிருக்குக் கேடு வந்ததா?"—அவன் புலம்பினுன். தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடும் என்ற பழமொழி பொய்யாகுமா?

புலவர் இப்போது மெல்லப் பேசத் தொடங்கினுர். "அரசே, நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள். நான் தங்கள் தமையனுரைக் கொல்லவில்லை."

"என்ன? கொல்லவில்லையா? அப்படியானுல் இந்த வாள் எவ்வாறு உம்மிடம் வந்தது?" என்று அலறிக்கொண்டு கேட்டான் இளங்குமணன்.

"அவர் உயிரோடுதான் இருக்கிருர். நான் சொல்வதை நிதானமாகக் கேட்டால் எல்லாவற்றையும் சொல்கிறேன். என்ன நடந்தாலும் சரி, இதைச் சொல்லிவிட்டுத்தான் வேறு காரியம் பார்க்கிறது என்று ஓடி வந்திருக்கிறேன். சொல்லட்டுமா?"

"சொல்லும்" என்று பெருமூச்சு விட்டான் இளங்குமணன். அவனுக்கு உண்டான அதிர்ச்சி இன்னும் அடங்கவில்லை.

"உலகத்தில் எதுவும் நிலைத்து நிற்பதில்லை. எதுவும் மன்னுத உலகம் இது. இங்கே சிலர் இறந்தும் இறவாமல் வாழ்கிருர்கள். புகழ் ஒன்றுதான் நிற்குமென்பதை அறிந்த சில நல்லோர் அதை இங்கே நிறுவிவிட்டு மாய்ந்து போனுர்கள். எவ்வளவோ உயர்ந்த செல்வம் பெற்றவர்களுங்கூட, வறுமை காரணமாகத் தம்மிடம் வந்து இரப்பவர்களுக்குக் கொடுக்காமல் செல்வத்தை வைத்துக்கொண்டு வாழ்ந்து இறந்து போகிருர்கள். அவர்களை உலகம்

நினைப்பதில்லை. வரிசையாக முன்பு வாழ்ந்த பெரு மக்களை எடுத்துச் சொல்லும்போது அத்தகையவர் களின் பெயர்கள் அவ்வரிசையில் வருவதில்லை."

"இதற்கும் நீர் சொல்ல வந்ததற்கும் என்ன சம்பந்தம்?"

"சொல்கிறேன், பொறுமையோடு கேட்க வேண்டும். இந்த உண்மையை உணர்ந்து தம் மைப். பாடி வந்தவர்களுக்கு யானை கேட்டாலும் கொடுத்துத் தாம் உள்ளபோதே தம் புகழைப் பரவும்படி செய்தவர் குமண வள்ளல். அவர் காட்டில் இருப்பதை அறிந்து நான் அவர் புகழைப் பாடிச் சென்றேன். அவரிடம் எனக்குக் கொடுக்க ஒன்றும் இல்லை. 'ஐயோ! நான் நாடு இழந்ததை விட, என்னிடம் வந்த புலவன் ஒன்றும் பெறுமல் வாடிச் செல்வதைப் பார்ப்பது பெரிய துன்பமாக இருக்கிறதே!' என்று வருந்தினர். பிறகு இந்த வாளைக் கொடுத்து, 'இதனால் என் தலையைக் கொய்து என் தம்பியிடம் ஈந்தால் நிறையப் பொன் கிடைக்கும்' என்று கூறினர். * பொன்னைக் கொடுத்தும், பொருளைக் கொடுத்தும், அணியைக் கொடுத்தும், ஆடையைக் கொடுத்தும், குதிரையைக் கொடுத்தும், யானையைக் கொடுத்தும் புகழை மொண்டு கொண்ட அண்ணல் எல்லாவற்றினும் அரியதாகிய தம் உயிரையே கொடுக்க இப்போது முன் வந்தார். அதைக் கண்டபோது என் உள்ளம் உருகிவிட்டது. அவருடன் பிறந்து ஒன்றுக உண்டு ஒன்றுக வாழ்ந்த தங்களுக்கா இந்தக் கல் நெஞ்சம் வந்தது என்று எண்ணிப் பார்த்தேன். அவர் கையில் இந்த வாள் இருந்தால்

* புறநானூறு, 165.

வேறு யாருக்கேனும் தாமே கொய்து தந்தாலும் தருவார் என்றுதான் இதை உறையுடன் கேட்டேன்; கொடுத்துவிட்டார். இனி இவர் தற்கொலை செய்து கொள்ள வழியில்லை என்ற மகிழ்ச்சியோடு இங்கே ஓடி வந்தேன். இத்தகைய பெரிய உள்ளம் படைத்த தர்ம தேவதையை அண்ணனாகப் பெற்ற தங்களுக்கு ஏன் அவர் அருமை தெரியவில்லை என்று கேட்டு விட்டுப் போக வந்தேன். சொல்வதைச் சொல்லி விட்டேன். இந்தாருங்கள், இந்த வாள். இதைக் கொண்டு என்னை ஒறுக்க எண்ணினாலும் நான் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன்."

வாளை இளங் குமணன் தன் கையில் வாங்கிக் கொண்டான்; கண்ணில் ஒற்றிக்கொண்டான். அவன் உள்ளத்துக்குள் ஏழு கடல்களும் குமுறிக்கொண் டிருந்தன. "புலவரே!" என்று மெல்லப் பேசத் தொடங்கினான். வார்த்தைகள் தொடர்ந்து வெளி வரவில்லை.

தன் அண்ணன் கொலை செய்யப்படவில்லை என் பது தெரிந்த பிறகு அவன் நிதானத்துக்கு வந்தாலும், அவன் உள்ளம் அவனைச் சுட்டது. புலவர் கூறிய உருக்கமான நிகழ்ச்சி அவனையும் பாகாய் உருக்கி விட்டது.

"புலவரே, எனக்கு ஓர் உபகாரம் செய்ய வேண்டும்."

"என்ன?"

"என் அண்ணாவின் காலில் என் தலையை வீழ்த்த எண்ணுகிறேன். நீங்கள் வழிகாட்டுவீர்களா?"

"என்ன!"—புலவர் வியப்பில் மூழ்கினார்.

"ஆம்! இந்தப் பாவி அவரை அணுகிக் காலில் விழுந்து கதறித் துடிதுடித்தாலன்றிப் பாவம் தீராது. வாருங்கள், போகலாம்."

புலவர் இத்தனை விரைவில் நன்மை உண்டாகு மென்று எதிர்பார்க்கவில்லை. இளங்குமணனை அழைத்துக்கொண்டு சென்றார். அண்ணனும் தம்பியும் கூடினர். தம்பி அழுது புரண்டான். கன்னத்தில் அறைந்துகொண்டான். மன்னிக்க வேண்டுமென்று கதறினான்.

சாந்தமும் அன்பும் நிறைந்த குமணன், "தம்பி, வருந்தாதே! நீ என்னை இராமபிரானாகச் செய்து விட்டாய். அவர் சிலகாலம் காட்டில் வாழ்ந்து மீண்டும் நாட்டுக்கு வந்தார். நானும் அப்படியே இருக்கிறேன்" என்று கூறினான்.

"அண்ணா, நீங்கள் இராமபிரானுக்கு ஒப்பானவர் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. நீங்கள் எங்கே இருந்தாலும் அது அயோத்திதான். ஆனால் இந்தப் பாவி பரதனாக நடந்துகொள்ளவில்லையே!" என்று மறுபடியும் அழுதான் தம்பி.

மீட்டும் குமணன் தன் நாட்டை அடைந்தான். கார் பெற்ற தோகை போலவும் கண் பெற்ற வாண் முகம் போலவும் நீர் பெற்று உயர்ந்த நிறைபுலம் போலவும் நாட்டு மக்கள் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்தனர். குமணன் பெயரளவில் அரசனாக இருந்தாலும் ஆட்சிப் பொறுப்பில் பெரும் பகுதியைத் தன் தம்பியிடமே கொடுத்துவிட்டான். அவன் கை வாள் தம்பியிடமே இருந்தது. கொடுத்ததை மீண்டும் வாங்கிக்கொள்ளக்கூடாது அல்லவா?

## கி. வா. ஜகந்நாதன் எழுதியவை

**பாரி வேள் :** ரூ. 1 2 0

*"....கபிலர் பாடல்களுக்கு விளக்கம் தந்து பாரியின் பெருமையை விளக்குமிடம் அழகாக அமைந்துள்ளது."*

*தினமணி :* 6—2—'55

**கோவூர்கிழார்:** ரூ. 1 2 0

*"....சங்கப் புலவர்களின் வரலாறுகளை இவ்வாறு அமைத்துத் தருதல் தமிழுக்கும் தமிழ் வரலாற்றுக்கும் செய்யும் மாபெரும் உண்மைப் பணியாகும்."*

*பாரத தேவி :* 18—1—'54

**எல்லாம் தமிழ் :** ரூ. 1 2 0

*"....ஆசிரியர் இப்பணியைக் கலைச் சுவையுடனும் மிகுந்த திறமையுடனும் செய்திருக்கிறார். தமிழ் மாணவர்க்கும் தமிழன்பர்களுக்கும் மிகவும் உபயோகமான நூல்."*

*சுதேசமித்திரன் :* 19—12—'50

**தமிழின் வெற்றி :** ரூ. 1 4 0

*"....பாமரரும் நயக்கும் வகையில் இத்தகைய இலக்கிய வெளியீடுகளால் இலக்கிய அமுதை வாரித் தரும் அறிஞர்களைப் போற்றவேண்டியது தமிழ் மக்கள் கடமையாகும்."*

*ஈழகேசரி :* 4—1—'53

**கரிகால் வளவன் :** ரூ. 1 4 0

*"....ஒரு பேரரசனுடைய வரலாற்றைப் பல நூல்களை ஆராய்ந்து, வேண்டிய விவரங்களைச் சேகரித்துத் திரட்டி இவ்வாறு அளித்துள்ள ஆசிரியர் முயற்சி பாராட்டத் தக்கது."*

*வீரகேசரி :* 4—1—'53

**அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்**

தேனாம்பேட்டை : : சென்னை—18

*Approved by the Text Book Committee for class use* **Non-detailed**
*vide Gazette Page 25 supplement to Part I B*
*Fort St. George dated 4-4-56.*